# முந்நீர் விழா

கி. வா. ஜகந்நாதன்




அமுத நிலையம்

# முந்நீர் விழா

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

அமுதம் 163
உரிமை பதிவு
முதற் பதிப்பு: ஜூலை, 1958
இரண்டாம் பதிப்பு: மே, 1959
மூன்றும் பதிப்பு: ஜூன், 1959
நான்காம் பதிப்பு: ஜூன், 1960
ஐந்தாம் பதிப்பு: மே, 1961

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனும்பேட்டை, சென்னை-18

# முகவுரை

ஒரு நாட்டின் பெருமையை அந்த நாட்டில் வாழ்ந்த அரசர்களின் வரலாறுகள் மட்டும் தெரிவிக்கும் என்பது இல்லை. குடிமக்களில் பலர் பெருஞ் செல்வர்களாக இருந்து அரசர் செய்யாத நற்செயல்களைச் செய்திருக்கிறார்கள். முடியுடை மன்னர்களல்லாமல் அங்கங்கே சிறிய பகுதிகளுக்குத் தலைவர்களாக இருந்த குறுநில மன்னர்களும் வேளிர்களும் பல அரிய வண்மைச் செயல்களையும் வீரச் செயல்களையும் ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் பல உண்டு.

இலக்கியங்களால் தெரிய வரும் அத்தகைய நிகழ்ச்சிகள் நாட்டு வரலாற்றின் பகுதிகள் என்றே சொல்வதற்குரியன. வரையறையாக வரலாற்றை எழுதி வைக்கும் வழக்கம் இந்த நாட்டில் இல்லை. ஆயினும் பல பெருமக்களுடைய செயல்களை இலக்கியங்கள் அங்கங்கே புலப்படுத்துகின்றன. புறநானூறு என்னும் சங்க நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் இத்தகைய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே எழுந்தது.

பிற்காலத்தில் ஒவ்வொரு மண்டலத்தின் பெருமையையும் தெரிவிக்கும் நூல்கள் எழுந்தன. என்ன காரணத்தாலோ ஒருவர் நூறு என்ற வரையறை செய்து சதகமாக அத்தகைய நூலைப் பாட, மற்ற மண்டலங்களின் சிறப்பைத் தெரிவிக்க வந்தவர்களும் சதகங்களையே பாடிவிட்டார்கள். தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், என்ற பெயர்களுடன் அவை வழங்குகின்றன. அந்தச் சதகங்களில் உள்ள பாடல்கள் அந்த அந்த மண்டலங்களில் வாழ்ந்த பலருடைய வரலாற்றோடு சம்பந்தமுள்ள நிகழ்ச்சிகளைச் சொல்கின்றன. பல புலவர்களையும் புரவலர்களையும் பெண்மணிகளையும் செல்வர்களையும் வள்ளல்களையும் பக்தர்களையும் அந்தச் சதகங்களில் காணலாம். பல அருங்குணங்களின் இருப்பிடமாகிய அப்பெரு மக்கள் வரலாறுகள் எண்ண எண்ண இன்பம் தருவன. பலவகைச் சுவைகளும் அந் நிகழ்ச்சிகளில் உள்ளன.

இவற்றையன்றித் தனிப் பாடல்களில் பொதிந்துள்ள நிகழ்ச்சிகள் பல உண்டு. தமிழ் நாவலர் சரிதையால் தெரிகின்ற புலவர்கள் வரலாறுகள் பல.

இத்தகைய நிகழ்ச்சிகளைத் தருவி ஆராய்ந்து உருவாக்கி எழுதும் கலையை என்னுடைய ஆசிரியப்பிரானாகிய மகாமகோபாத்தியாய ஐயரவர்களிடம் நான் கற்றுக்கொண்டேன். அதன் பயனாக

அவ்வப்போது பல வரலாறுகளை எழுதினேன். அவை புத்தக உருவிலும் வெளியாகியிருக்கின்றன. புதுமெருகு, எல்லாம் தமிழ், தமிழின் வெற்றி என்ற புத்தகங்கள் இத்தகைய நிகழ்ச்சி ஓவியங்கள் அடங்கியவையே.

அந்த முறையிலே எழுதிய வரலாறுகளின் கோவையே இந்த நூலும் ஆகும். இதில் உள்ள வரலாறுகளில் 'முந்நீர் விழா' என்பது சுதேசமித்திரன் தீபாவளி மலரிலும், 'ஒத்த மரபு' என்பது புதுமையிலும் வெளி வந்தவை. ஏனையவை தினமணி—கதிரில் வந்தவை. இவற்றை வெளியிட்டு உதவிய அப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

★

முந்நீர் விழா என்பது தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், பத்துப்பாட்டு என்பவற்றில் வரும் செய்திகளை வித்தாகக்கொண்டது. புறநானூற்றுப் பாடல் ஒன்றே பசிப்பிணி மருத்துவனை எழுதக் காரணமாயிற்று. கடலும் கிணறும் என்பது ஒரு தனிப் பாடலுக்கு நிகழ்ச்சி உருவில் கற்பனை செய்து அமைத்த விளக்கம். கூவம் தியாக சமுத்திரம், விச்சுளிப் பாய்ச்சல், அற்புதக் கொடை என்பன தொண்டைமண்டல சதகத்தை ஆதாரமாகக் கொண்டவை. கவிஞனும் செழியனும், ஒத்த மரபு, முத்திருளப்பர், நெட்டிமாலைப் புலவர், குட்டிப் பாம்பு என்பவை தனிப் பாடல்களிலிருந்தும் பிரபந்தங்களிலிருந்தும் தெரிந்துகொண்ட வரலாறுகள். திண்ணையில் கெண்டை, சோழமண்டல சதகத்திலிருந்து எடுத்த வரலாறு.

நிகழ்ச்சிகளை நிலைக்களமாகக் கொண்டமையால் இடையே வரும் பாடல்கள் எளிதில் மனத்தில் பதியும் தன்மை உடையவை. அவற்றின் பொருளையும் அங்கங்கே தெரிவித்திருக்கிறேன்.

உரையாடலும், வருணனையும், நிகழ்ச்சியைச் சொல்லும் போக்கும் சேர்ந்து ஒவ்வொரு வரலாற்றையும் சலிப்பின்றி ஊக்கத்துடன் படிக்க உதவும் என்ற எண்ணத்தால் அவற்றை விரவ வைத்திருக்கிறேன்.

தமிழ் நாட்டின் வரலாறு பெரிய கடல். அதில் இத்தகைய முத்துக்கள் பலவற்றை எடுக்கலாம். உண்மைக் கதைகளாகிய இவை மனிதப் பண்பின் பல பகுதிகளைப் புலப்படுத்தும் ஓவியங்களாக இருப்பதை இவற்றைப் படிப்பவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

"காந்தமலை"<br>கல்யாண நகர்,<br>சென்னை—28

**கி. வா. ஜகந்நாதன்**<br>16—7—58

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முந்நீர் விழா | ... | 1 |
| 2. | பசிப்பிணி மருத்துவன் | ... | 13 |
| 3. | கடலும் கிணறும் | ... | 21 |
| 4. | கூவம் தியாக சமுத்திரம் | ... | 28 |
| 5. | விச்சுளிப் பாய்ச்சல் | ... | 38 |
| 6. | கவிஞனும் செழியனும் | ... | 58 |
| 7. | அற்புதக் கொடை | ... | 66 |
| 8. | திண்ணையில் கெண்டை | ... | 76 |
| 9. | ஒத்த மரபு | ... | 83 |
| 10. | அமைச்சர் முத்திருளப்பர் | ... | 88 |
| 11. | நெட்டிமாலைப் புலவர் | ... | 96 |
| 12. | பாம்புக் குட்டி | ... | 104 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே,
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்திரநாதர்.

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள்
எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும் குஜராத்தையும்
மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும்
வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச்
செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

# முந்நீர் விழா

பாண்டியன் மாகீர்த்தி தன் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். அமைச்சரும் புலவரும் சுற்றி அமர்ந்திருந்தனர். அரசனுடைய பல்வகைப் புகழையும் யாவரும் பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

கீழ் கடற்கரைக்கு ஒரு மாதத்திற்கு முன் பாண்டியன் சென்றிருந்தான். அங்கே கடற்கரை நகரத்தில் சில நாட்கள் தங்கியிருந்தான். முத்துச் சலாபம் அப்போது நிகழ்ந்தது. முத்தெடுத்துக் கரையிலே குவித்த மாவீரர்களை அவன் அன்புடன் நல்லுரை கூறிப் பாராட்டினுன். கடலின் அடி வயிற்றிலிருந்து எடுத்த முத்துக்களைச் சுத்தப்படுத்தி நட்சத்திரத்தைக் குவிப்பது போலக் கடற்கரை அரண்மனைக் கூடத்தில் குவித்திருந்தார்கள். பாண்டி நாட்டு முத்து என்ருல் அதற்கு எப்போதுமே தனிச் சிறப்பு. உலகம் எங்கும் கடல் பரவி இருக்கிறது. எல்லாக் கடல்களிலும் மீன் பிடிக்கலாம். சில கடல்களில்தான் முத்து எடுக்கலாம். அவற்றிலும் சில துறைகளில்தான் சிறந்த முத்துக்கள் கிடைக்கும். பாண்டி நாட்டுத் துறையில் கிடைக்கும் முத்துக்கள் மிக மிக அற்புதமானவை. யவன நாட்டு மடமங்கையர் விரும்பி அணியும் நித்திலங்கள் அவை. ஆதலின், தமிழ் நாட்டு முத்து வெளி நாடுகளுக்கெல்லாம் சென்று பெயர் பெற்றது.

கிடைத்த முத்துக்களில் மிக உயர்ந்தவற்றைப் பொறுக்கிக் கடற்பகுதித் தலைவன் பாண்டிய மன்னனுடைய திருவடிகளிலே கொண்டு வந்து வைத்தான். அவற்றைக் கோத்து மன்னனுக்கு ஆரமாக அணியச் செய்யலாம் என்பது அத்தலைவனது ஆசை. பாண்டியன் என்ன சொன்னான் தெரியுமா? "இப்படியே மாலையாக்கி நம்முடைய தலைநகர்த் திருக்கோயிலில் உள்ள அம்மைக்குச் சாத்தச் செய்யவேண்டும்" என்றான். பாண்டிய குலத்தில் பிறந்தவர்களுக்கு வேறு என்ன எண்ணம் தோன்றும்?

கடற்கரைக்கே மன்னன் சென்றிருந்தான். ஆலித்துப் பாயும் அலைகள் கரைகளை மோதின. பாண்டியனது திருவடியிலே வந்து புரண்டன. உடன் இருந்த புலவர் ஒருவர், "நிலம் மட்டும் அன்று; கடலும் உனக்கு அடிமை என்று காலிலே பணிகிறது" என்றார். தலைமைப் புலவர், "தன்னுடைய இருப்பிடத்துக்கு வந்தமையால், வருணன் தன் கரங்களால் அடி கழுவுகிறான்" என்றார். "ஆம், ஆம்" என்று அமைச்சர்கள் தலையை அசைத்தனர்.

முத்துக் குவைகளை அவ்விடத்திலேயே வாங்கிச் செல்வதற்குப் பல நாட்டிலிருந்து வாணிக மக்கள் வந்திருந்தனர். பாண்டி நாட்டில் தம் நாட்டுச் செல்வத்தைக் கொண்டு வந்து குவித்துவிட்டு, அந்த நாட்டு முத்துக்களை வாங்கிச் சென்றார்கள் அவர்கள்.

*

இந்தக் காட்சிகளை எல்லாம் புலவர்களும் அமைச்சர்களும் அப்போது புகழ்ந்து கொண்டிருந்தனர். அரசனும் தன் அகக் கண்ணால் அந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தான். கடல் அலை தன் அடியை நனைக்கக்

கடற்கரையில் நின்ற நினைவுதான் அடிக்கடி அவன் உள்ளத்தே தோன்றியது.

"கீழ் கடற்கரைக்குப் போய் அங்கு உள்ள காட்சி களைக் கண்டோம். இப்படியே மேல் கடற்கரைக்குப் போய்ப் பார்த்து வரவேண்டாமா?'' என்று கேட்டான் மன்னன்.

''திருவுள்ளத்திற்கு எப்படி உவப்போ அப்படியே செய்யலாம்'' என்று அமைச்சர் ஒருவர் சொன்னார்.

''மேல் கடற்கரையில் கீழ் கடலில் உள்ள முத்து இல்லாவிட்டாலும் அங்கே பவளம் விளைகிறதென்று தெரிகிறது'' என்றார் மற்றோர் அமைச்சர்.

"அங்கும் போய்ப் பார்த்துவர வேண்டியதுதான்" என்று மாகீர்த்தி தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

மேல் கடற்கரைக்கும் மன்னன் சென்று வ்ந்தான். அங்கும் கடற்கரையில் அலைகள் தன் அடியை வருடச் சிறு குழந்தையைப் போலக் களிப்புடன் சிறிது நேரம் நின்றான். "கீழ் கடலும், மேல் கடலும் அடிவருட நிற்கும் பேறு வேறு எந்த மன்னருக்கு உண்டு?'' என்று புல வர்கள் பாடினார்கள். ''பாண்டி நாட்டுக்கு இருபுறமும் கடலே எல்லை. இதனிடையே யாருக்கும் உரிமை இல்லை. இந்தக் கடல்கள் பாண்டிய மன்னருடைய புகழைத் தங்கள் அலைகளால் உலகம் முழுவதும் பரப்பு கின்றன'' என்று ஒரு புலவர் பாடினார்.

இந்தப் பாடல்களைக் கேட்டபோது மன்னனுக்கு முன்பு போல முகத்தில் மலர்ச்சி உண்டாகவில்லை. அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு குறை அப்போது தோன்றியிருக்க வேண்டும். இல்லையானால் அந்தப் பாராட்டைக் கேட்டு அவன் பெருமூச்சு விடக் காரணம் இல்லையே!

தன்னுடைய இராசதானி நகருக்கு வந்த பிறகு அரசன் தன் அமைச்சர்களைக் கூட்டி வைத்து மந்திராலோசனை செய்தான். அக் காலத்தில் தமிழ்நாடு இப்போதுள்ள குமரி முனைக்கும் தெற்கே பல காவதங்கள் விரிந்திருந்தது. அங்கே பஃறுளியாறு என்ற ஆறும், குமரி மலையும், குமரியாறும், சில நாடுகளும் இருந்தன. பாண்டி நாட்டுக்குத் தெற்கே உள்ள சில சிறிய நாடுகளைக் குறுநில மன்னர்கள் ஆண்டு வந்தனர். பாண்டியன் மாகீர்த்தி அரசு கட்டிலேறிச் சில ஆண்டுகளே ஆயின. அதற்குள் அவன் சில போர்களில் வெற்றி பெற்றான். தெற்கே இருந்த மன்னர்கள் சிலர் அவனுக்குத் திறை செலுத்தி வந்தார்கள். சில காலமாக அவர்களில் சிலர் பாண்டியனால் என்ன செய்ய முடியும் என்ற நினைப்பினால் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார்கள். வேறு சில மன்னர் தனியாட்சி நடத்தினர்.

கீழ் கடலையும் மேல் கடலையும் பார்த்துவிட்டு வந்த பாண்டிய மன்னனுக்குத் தென் கடலையும் காண வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. வடக்கே கடல் இல்லை. தெற்கே உள்ள கடலுக்கும் சென்று அதுவரையில் தன் புகழை நாட்டவேண்டும் என்ற நினைவு, மேல்கடற்கரையில் அலைகள் தன் அடியை வருடும்படியாக நின்றபோது அவனுக்கு உண்டாயிற்று. ஆனால் உடனே அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. அவனிடம் பகை பாராட்டும் மன்னர் சிலர் இடை வழியில் இருந்தனர். அவர்களை ஒடுக்கினால்தான் தென் கடலுக்குச் செல்ல முடியும்.

அமைச்சருடன் சூழ்ந்தான். பழங்காலத்தில் எல்லா மன்னர்களும் பாண்டிய மன்னருக்கு அடங்கியே இருந்தனர். இடையில் சில காலமாகப் பாண்டிய மன்னர்களின் வலிமை குறையவே, சிறிய மன்னர்கள் தலை

யெடுத்தனர். அவர்கள் மிடுக்கை அடக்க வழி என்ன என்று மாகீர்த்தி இப்போது ஆராய்ந்தான். தூதுவரை அனுப்பித் தென் கடற்குச் செல்லும் பாண்டியனை வர வேற்கும்படி சொல்லச் செய்வதென்றும், முரண் உடையவர் யாரேனும் இருந்தால் வீரத்தால் வென்று அடிப் படுத்தி மேலே செல்ல வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள். அதன்படியே தெற்கில் உள்ள நாடுகளுக் குத் தூதுவரை விடுத்தார்கள்.

சில மன்னர்கள் மாத்திரம் பாண்டிய அரசன் வருகையை ஏற்றுக்கொண்டார்கள். வேறு சிலர், "எங்கள் நாட்டில் வேற்று மன்னன் அடி வைக்க ஒட்டோம்" என்று வீறு பேசினர்.

★

பாண்டியன் மாகீர்த்தி நெடிய உருவம் படைத்த வன். அதனால் அவனைப் புலவர்கள், "நெடியோன்" என்று பாராட்டிப் புகழ் பாடுவார்கள். "தென்னாட்டு மன்னர்களை வென்று புறங் காண்பேன்" என்று நெடியோன் வஞ்சினம் பூண்டான். படைகளைத் திரட்டினான்.

முன்பே சில போர்களில் வெற்றியைச் சுவைத் திருக்கும் வீரர்கள் இப்போது பின்னும் ஊக்கமுடன் எழுந்தனர். புதிய வீரர்களும் வெற்றி நிச்சயம் என்ற துணிவோடு படையில் சேர்ந்தனர்.

"இந்தப் பெரும் படையைக் கொண்டு வட இமயம் வரையிற் சென்று, அடிப்படுத்தலாமே!" என்று படைத் தலைவர்கள் பெருமிதம் கொண்டனர்.

அரசன் படைகளுடன் புறப்பட்டான். கையில் வேலை ஏந்தி, "தென் கடலளவும் சென்று அக்கடல் நீரினால் என் அடிகளைக் கழுவிய பின்பே திரும்புவேன்!

அவ்வாறு செய்யேனாயின், நான் பாண்டிய மரபிற் பிறந்தவன் அல்லேன் ஆவேன்! தமிழ் மொழியைப் பேணும் இன்பத்தை நான் இழக்கக் கடவேன்! குடி மக்கள் தூற்றும் பழியோடு கொடுங்கோலை உடையவனாவேன்! அன்று புலவர்கள் கீழ் கடலும் மேல் கடலும் பாண்டி நாட்டின் எல்லையென்று போற்றினார்கள். 'மூன்று திசையிலும் கடல் எல்லை காட்டப் புகழ் மண்டிக் கிடப்பது பாண்டி நாடு' என்று புலவர்கள் பாடும்படி செய்யாவிட்டால், என் ஆண்மை மாசுற்றுப் போவதாக!'' என்று வஞ்சினம் கூறினான். பகைவர்களுக்கு நேரப் போகும் துன்பங்களை நினைந்து மகளிர் நடுங்கினர். அரசன் போர்க்கோலத்தோடு புறப்பட்டு விட்டான்.

படை வேகமாகச் சென்றது. பாண்டி நாட்டை அடுத்திருந்த மன்னன் பாண்டியனை எதிர்க்கவில்லை. அவன் உரிய கையுறைகளுடன் எதிர்கொண்டு வரவேற்றான். தன் சிறு படையின் ஒரு பகுதியையும் பாண்டியன் படையுடன் சேர்ந்து செல்லும்படி விடுத்தான். போரின்றியே பெற்ற முதல் வெற்றியாக இது முடிந்தது. அதனால் போர் வீரர்களுக்கு ஊக்கம் பின்னும் மிகுதியாயிற்று.

படை மேலும் தென் திசை நோக்கிப் படர்ந்தது. ஏழு சிறிய நாடுகளை உடைய தெங்க நாடு என்ற பகுதியை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் ஓரளவு மிடுக்கும் வீரமும் உடையவன். பாண்டியனது படை வன்மையை அவன் அறியாதவன். அவன் நாட்டின் தலை வாயிலில் பெரும் போர் மூண்டது. பாண்டியன் படையுடன் வர இருப்பதை முன்பே ஒற்றர்களின் வாயிலாக உணர்ந்திருந்தான் அவன். ஆதலால் பாண்டியனை வாளொடும் வேலொடும் எதிர் நின்று போர

அவன் ஆயத்தமாக இருந்தான். இரு படைகளுக்கும் கடுமையான போர் மூண்டது. பாண்டிய வீரர் தம்முடைய ஆற்றலின் முழுப் பகுதியையும் காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் நேர்ந்தன. இரண்டு மூன்று நாட்களுக்குள் இந்தப் படையை வென்று விடலாம் என்று நெடியோன் நினைத்தான். ஆனால் தெங்க நாட்டரசன் எங்கிருந்தோ புதிய புதிய படையை வருவித்தான். சரியாக ஏழு நாட்கள் போர் நிகழ்ந்தது. தென் கடல் நீர் எளிதிலே கிடைப்பதன்று என்ற உணர்வு பாண்டிய மன்னனுக்கு உண்டாயிற்று. அதனுடன் மான உணர்ச்சியும் தலையெடுத்தது. பின்னும் வீறுகொண்டு போர் செய்தான். ஏழாவது நாள்தான் வெற்றியைக் காண முடிந்தது.

அரிதிலே கிடைத்த வெற்றி ஆதலின் அதன் மதிப்பு மிகுதியாகத் தோன்றியது. மேலே பாலை நாடு, குன்ற நாடு, காரை நாடு, குறும்பனை நாடு என்ற நாடுகளைத் தாண்டித் தென்கடலை அடையவேண்டும். மாகீர்த்தி முன்பே தக்க வண்ணம் ஆராய்ந்தே இந்தப் போரை மேற்கொண்டான். போரின் தொடக்கமே கடுமையாக இருந்தது; அதனால் படை வீரர்கள் தம்முடைய முழு ஆற்றலையும் காட்டினால்தான் இந்தப் போரில் வெற்றி பெற்று மீள முடியும் என்று தெரிந்து கொண்டார்கள். அவர்களுடைய விறல் முந்தியது.

தெங்க நாட்டரசனை அடிப்படுத்தி, அவன் தந்த திறைகளைப் பெற்றுக்கொண்டு, நெடியோன் மேற்கொண்டு தன் போர்ப் பயணத்தைத் தொடங்கினான். அடுத்த நாட்டரசனைத் தெங்க நாட்டில் செய்தது போலக் கடுஞ் சமர் செய்யாமலே எளிதில் மடக்கினான். பின் சில மன்னர் அஞ்சி வந்து அடிவீழ்ந்தனர். எஞ்சிய சிலரைப் போரிட்டு அடக்கினான். சில மன்னர் போரில்

மாண்டனர். அந்நாடுகளில் அவருக்கு அடுத்த உரிமையாளருக்கு அரசு நல்கினன் பாண்டியன்.

நாளுக்கு நாள் படை வீரர்களின் விறல் ஓங்கியது. பாண்டியனுடைய வீரம் விளங்கியது. அவன் வாகையின் மேல் வாகையாகச் சூடினன். தான்பெற்ற வெற்றிகளை இப்போது பாண்டியன் அளவிட்ட முறையே வேறு. எத்தனை மன்னர்களை வென்றோம் என்று அவன் கணக்கிடவில்லை. எத்தனை நாடுகள் நம்மைப் பணிந்தன என்பதையும் அவன் எண்ணிப் பார்க்கவில்லை. தன் தலைநகரை விட்டு எவ்வளவு தூரம் வந்தோம் என்றும் அளவிட்டுப் பார்க்கவில்லை. தென் கடலை நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம் என்ற ஒரே நினைவில்தான் அவன் திளைத்திருந்தான். தென் கடல் அலைகள் அவனுக்கு வரவேற்புக் கூற, அந்த வடிம்பில் அலைகள் அடிகளை அலம்பும்படி நின்றால் அவன் வஞ்சினம் நிறைவேறும். பகையரசர்களை வெல்ல வேண்டும் என்று அவன் தோள் தினவெடுத்தது. அதற்குமேலே, தென் கடற்கரையில் நின்று அந்தக் கடல் நீரில் நனையவேண்டும் என்று அவன் கால்கள் தினவெடுத்து நடந்தன.

இன்னும் ஒரு காவத தூரத்தில்தான் இருந்தது, தென் கடற்கரை. அந்தக் கடல் நீரைக் காண்பதற்கு முன் போர்க் களத்தில் செந்நீரோட்டத்தைக் காண வேண்டியிருந்தது. துண்டுபட்ட உடல்களையும், சேறுபட்ட மூளையையும் வழும்பையும், ஆறாக ஓடும் குருதியையும் மிதித்து மிதித்துப் பாண்டியன் மாகீர்த்தியின் கால்கள் வீரச் செருக்குற்றிருந்தாலும் தூய்மை கெட்டிருந்தன. அவற்றை மீட்டும் கடல் நீரில் அலசித் தூய்மை பெறச் செய்ய வேண்டும். மேல் கடல் அலை தன் காலை வருடும்போது இதைத்தான் அவன் சிந்தித்து ஏங்கினன். அந்த ஏக்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. அந்த

ஆவல் இன்னும் நிறைவேறவில்லை. அது நிறைவேறும் காலமும் இடமும் அண்மையிலே வந்துகொண்டே இருந்தன.

☆

தென் கடற்கரைக்குத் தலைவனாக இருந்த அரசன் தெங்க நாட்டரசனைப் போல விடாப்பிடியாக எதிர்த்தான். அவனுடைய வீரத்தைப் பாண்டியன் உள்ளத்துக்குள் வியந்து மெச்சினான். சுத்த வீரனுக்கு அழகு இது. கடைசியில் அவனும் பணிந்தான். பாண்டியன் இப்போது பாரத தேசத்தின் தென் கோடியில் நின்றான். கடற்கரையை அடைந்தான். அந்த அலைகடலோசை அவன் காதில் இனிமையாக ஒலித்தது. அதைக் கேட்க அவன் எத்தனை வீர முரசையும் வாளொலியையும் வேலின் ஒலியையும் எழுப்பவேண்டியிருந்தது! அமைச்சரும் புலவரும் படைத்தலைவரும் சூழ்ந்துவரக் கடலை அணுகினான். அன்று பாண்டி நாட்டிலிருந்து புறப்பட்ட போர்ப் பயணம் நிறைவேறிய நாள். மற்ற வெற்றிகளைக் கொண்டாடியது போல அதைக் கொண்டாட மன்னனுக்கு விருப்பம் இல்லை. அந்த வெற்றி அவனுக்கு ஈடும் எடுப்பும் இல்லாத வெற்றி. ஆதலால் அது பாண்டிய நாடு முழுவதும் ஆண்டுதோறும் கொண்டாட வேண்டிய விழாவாக இருக்கவேண்டும் என்பது அவன் ஆசை.

கடற்கரையில் மணலில் ஆவலோடு நடந்தான் மன்னன். கையில் வேலைப் பிடித்திருந்தான். அன்று, தன் நகரத்திலிருந்து புறப்படுவதற்கு முன் அந்த வேலைப் பிடித்துக்கொண்டுதான் சபதம் செய்தான். இன்று அந்தச் சபதம் நிறைவேறிவிட்டது. அவன் இதற்கு முன் இரண்டு கடலை எல்லையாகப் பெற்ற

நாட்டை ஆண்டுவந்தான். இப்போது பாண்டி நாட்டு எல்லை விரிந்தது. தென் கடல் மூன்றுவது எல்லை ஆயிற்று. தன் படையினுல் அளந்து வெற்றி பெற்று, அந்த எல்லையை அடைந்திருக்கிருன். நாட்டு எல்லை கடல் வரைக்கும் இருக்கிறது அல்லவா? இப்போது கடல் விளிம்பை நோக்கி நடந்து வருகிற பாண்டியன் தன் காலால் தன் வெற்றியை அளக்கிருன். தனக்கு அகப்படாதிருந்த தென் கடல் வரைக்கும் தன் நாடு விரிந்திருப்பதை மற்ற மன்னவர்கள் உணரும்படி, அவன் இப்போது அளந்து காட்டுகிருனே! அவன் நடந்தான்; கடல் நெடுந்தூரம் விலகியிருப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு. அது பக்கத்தில்தான் இருந்தது; ஆனுலும் அவனுடைய ஆவல் அப்படி இருந்தது.

கடல் விளிம்புக்கு வந்து நின்றுன். தென் கடல், பல காலும் காணுது அலமந்து வரவு பார்த்திருந்த தன் நாயகனுக்குப் பாத்தியம் வழங்குவதுபோல, அலைகளால் அவன் அடியை அலம்பியது. அவனை இவ்வளவு அல்லலுக்கு ஆளாக்கியதற்காக அடி வீழ்ந்து புலம்பி யது. அவன் அடியை அலைக் கரங்களால் வருடியது. தென் கடல் அலைகள் தன் அடியை வருடியபோது பாண்டிய மன்னன் பெற்ற இன்பத்துக்கு எல்லை ஏது? முன்னே விரிந்து கிடந்த கடலைப் போல இன்பம் உள்ளத்துள் எல்லையின்றிக் கொந்தளித்தது.

அவன் சற்றே உண்முக நோக்கில் ஒன்றினுன். மூன்று கடல்நீரிலும் தன் அடியை நனைக்கவேண்டும் என்று அவன் உள்ளத்தே தோன்றிய எண்ணம், இவ் வளவு பெரிய போருக்கு விதையாயிற்று; இவ்வளவு மக்கள் போரில் பட்டு மடியும்படி விளைந்தது. தான் கடந்துவந்த போர்க்களங்கள் எல்லாம் அவன் அகப் பார்வையிலே தோற்றமளித்தன. அந்தக் களங்களில்

பல பிணத்தையும், தசையையும், குருதியையும் மிதித்து நடந்து வந்து தென் கடல் நீரில் கால் வைத்தான். கடல் அவன் அடிகளை இப்போது தூய்மை ஆக்கி விட்டது.

கையில் உள்ள வேலை நோக்கினுன். அது பகைவர் மார்பிலே புகுந்து வந்திருந்தது. பல களிறுகளின் தலை வழும்பின் நாற்றம் அதில் வீசியது. ரத்தக் கறை படிந் திருந்தது. அது தூய்மையுற வேண்டாமா? இப்படியே காலையும் வேலையும் கறைப்படுத்திக் கொண்டிருந்தால் அமைதி பெறுவது எப்போது? கலைநயம் தேர்வது எப் போது? தமிழை மாந்துவதற்குக் காலம் எங்கே?

என்னவோ நினைத்துக்கொண்டான். தன் கையில் இருந்த வேலை ஆத்திரத்தோடு முன்கிடந்த கடலை நோக்கி எறிந்தான். புலவர்கள் அது கண்டு வியந்தனர். "ஆம். அப்படித்தான் இந்த முரட்டுக் கடலை அடக்க வேண்டும். இனி வேலை வீச இடம் இல்லை; கடல் ஒன்றுதான் என்ற குறிப்பை மன்னர் பிரானுடைய செயல் காட்டுகிறது'' என்று பாராட்டினுர்கள்.

முன்பு கீழ்கடல் விளிம்பும் மேல் கடல் வடிம்பும் தன் அடிகளை அலம்ப நின்ற நெடியோனுகிய பாண்டியன், இன்று தென் கடல் வடிம்பும் தன் திருவடியை அலம்ப நின்ருன். இன்றுவரை அவன் இருநீர் வடிம்பலம்ப நின்ருன். இன்று முந்நீர் வடிம்பு அலம்ப நின்ருன். இந்த அரிய செயலை 'முந்நீர் விழவு' என்று அன்று கொண்டாடினுர்கள்.

★

மன்னன் தென் கடலையும் தன்னுடையதாக்கிக் கொண்டு வந்துவிட்டான் என்ற செய்தி பாண்டி நாட்டு மக்களுடைய உள்ளத்தில் தேனைப் பெய்தது. அவர்

கள் இப்போது புதிய விழா ஒன்றைப் பெற்றுர்கள். அதுதான் முந்நீர் விழா. அந்த விழாவைச் செய்வதற்குக் காரணமாக மாகீர்த்தி இருந்தமையல் அவனே, "முந்நீர் விழவின் நெடியோன்'' என்று புலவர்கள் பாராட்டினுர்கள். முந்நீர் விழாவுக்கு முன் பல நாடுகளை அடிப்படுத்தியமையால், ''நிலந்தரு திருவிற் பாண்டியன்'' என்றும் அவன் புகழைப் பாடினுர்கள்.

பாண்டி நாட்டினர் அந்த ஆண்டு முதல் ஆண்டுதோறும் கடல் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடலாயினர்.

# பசிப்பிணி மருத்துவன்

## 1

அரசர்களைப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். புலவர் பாடும் புகழை உடையவர்களுக்கு, இம்மையிலும் மறுமையிலும் இன்பம் உண்டென்று அரசர்கள் எண்ணினார்கள். ஆனால், அரசன் தன் நாட்டில் வாழும் குடிமகன் ஒருவனைப் பாடுவது என்றால், அந்த நல்லோனுக்கு அளவிறந்த சிறப்பு இருக்கவேண்டும். குறுநில மன்னனாக இருந்தால் அவ்வளவு வியப்படைய வேண்டியதில்லை. முடியுடைய மன்னன் ஒருவன் பாடுவதானால், அந்தப் பாட்டைப் பெற்றவன் எவ்வளவு பெருமையை உடையவனாக இருக்கவேண்டும்!

தமிழ் நாட்டில் முடியுடை மன்னர்கள் மூவரே. சேர, சோழ, பாண்டியர்களாகிய அம்மூவர்களும், 'படைப்புக் காலந் தொட்டு' வருகிறவர்கள் என்று புலவர்கள் கருதினார்கள். பல மன்னர்களை ஆளும் சக்கரவர்த்திகள் அவர்கள். முடி புனையும் உரிமை, அந்த மூன்று குலத்தினருக்கு மாத்திரமே இருந்து வந்தது.

காவிரியால் வளம்பெறும் சோழ நாட்டை ஆண்ட சோழர்களில் பலர் தமிழ்ப் புலமை உடையவர்கள். பாடல்களின் சுவையைப் பொதுமக்கள் நுகரும் முறை வேறு; புலமையுடையோர் நுகரும் முறை வேறு. புலமையுடைய புலவர்கள் தாம் கவிஞர்களாக இருப்பதனால் சிறந்த கவிதையை நன்கு சுவைத்தார்கள். அவர்களிடம் பரிசு பெறுவதைச் சிறப்பாக எண்ணினர் புலவர்.

கிள்ளிவளவன் என்னும் அரசன் புலவர்களைப் போற்றி வாழ்ந்தவன். கவிதை பாடும் புலமையும் பெற்றவன். அவன் சோறுடைய சோணாட்டுக்கு அரசனாதலின், அந்தச் சோற்றின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தான்.

உடம்பு படைத்தோருக்கு நோய் வருவது இயற்கை. அவை மருந்தால் தீரும். நல்ல உடம்பு படைத்திருந்தாலும் ஒருவனுக்கு ஒரு நோய் வரும். அந்த நோய் யாவருக்கும் உண்டு. அது இருப்பதனால்தான் மனிதன் உழைக்கிறான். அதுதான் பசிநோய். பசி நோய்க்கு உட்படாமல் இருப்பவன் யாரும் இல்லை.

*''பாழ்போவது பிறவிக்கடல்*
*பசிநோய் செய்த பறிதான்''*

என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடினார். பசி நோய் நம் வாழ்நாளிற் பெரும்பகுதியைப் பறித்துக்கொள்கிறது. இந்த நோயைத் தீர்ப்பதற்கு மனிதன் என்ன என்ன ஆட்டமெல்லாம் ஆடுகிறான்!

*"சேவித்தும் சென்றிரந்தும்*
*தெண்ணீர்க் கடல்கடந்தும்*
*பாவித்தும் பாராண்டும்*
*பாட்டிசைத்தும்—போவிப்பம்*
*பாழில் உடம்பை*
*வயிற்றின் கொடுமையால்*
*நாழி அரிசிக்கே நாம்''*

என்பது ஔவையார் பாட்டு. வயிற்றுக் கொடுமையைப் போக்க நாழி அரிசி வேண்டும்; அதற்காகப் பிறரைச் சேவித்துத் தொண்டு செய்கிறோம். கையால் ஆகாத போது சோறுடைய செல்வரிடம் சென்று கை ஏந்தி இரந்து நிற்கிறோம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

கிருேம். பலபல விதமாக வேடம் போட்டு நடிக்கிருேம். மன்ருதி மன்னன்கூட நாட்டை ஆள்வதனுல் பசிப் பிணியை வென்றவனுவதில்லை. அவனும் தன் பசியைத் தீர்க்க வேண்டிய செயல்களைச் செய்கிருன். கலைஞன் தன் கலையைப் பிறர் நுகரச் செய்து, அதனுல் வயிற் றைக் கழுவிக்கொள்கிருன்.

தானே ஈட்டினுலும் ஈட்டாவிட்டாலும், ஒருவேளை கூடத் தவருமல் வயிற்றுக்குச் சோற்றைப் போட வேண்டி யிருக்கிறது. 'இன்று இவனுக்குச் சம்பாத்தியம் இல்லையே! சோறு கேளாமல், பசியைக் காட்டாமல் இருக்கலாம்' என்று அது இருப்பதில்லை. 'நீ எப்படிப் போனுலும் போ; எனக்குப் போடுவதைப் போட்டுவிடு' என்று அது கேட்கிறது.

பசியென்னும் இந்த வியாதி யாவருக்கும் வருவ தால், இதைப் பெரிய வியாதியென்றே சொல்ல வேண்டும். சிறிய நோய்க்குச் சிறு மருந்தும், சிறிய மருத்துவனும் இருந்தால் போதும். பெரிய வியாதிக்குப் பெரிய மருந்தும், பெரிய வைத்தியனும் வேண்டும். பசிப் பிணிக்கு மருந்தாக உதவுவது சோறு.

"இருமருந்து விளைக்கும் நன்னுட்டுப் பொருநன்"

என்று வரும் பாட்டில், மனிதன் தன் பசியை அவித்துக் கொள்ள உதவும் தண்ணீரையும், சோற்றையும் இரு மருந்து என்று ஒரு புலவர் சொல்கிருர். தண்ணீராகிய மருந்து இயற்கையில் கிடைக்கிறது. வெறும் தண் ணீரை நாலு கை அள்ளிக் குடித்தால் தாகம் தீருமே யன்றிப் பசி போகாது. அதற்குச் சோறு வேண்டும். சோறு, நெல்லை விளைத்து அரிசியாக்கிச் சமைப்பவர்க ளிடம் இருக்கிறது. அவர்கள், தாம் உண்டு தம் பசி தீர்கிருர்கள்; அதோடு, பிறரும் உண்டு பசியைத்

தீர்த்துக் கொள்ளும்படி சோற்றை வழங்குகிறவர்கள், பெரிய வைத்தியர்கள்.

சோழ நாட்டில் சிறுகுடி என்னும் ஊரில் வாழ்ந் திருந்தான் பண்ணன் என்னும் வேளாண் செல்வன். பல வயல்களை உடையவன் ஆதலின் நெல் வளம் அவ னிடம் சிறந்திருந்தது. அதோடு, அவன் உள்ளம் அன்பு வளம் உடையதாகவும் இருந்தது. பிறர் பசி யைத் தான் விளைவித்த சோற்றினால் போக்கிப் புகழ் படைத்த அறச் செல்வன் அவன். அவனைத்தான் கிள்ளிவளவன் பாடினான். 'பசிப்பிணி மருத்துவன்' என்று சிறப்பித்துப் பாடினான். 'என்னுடைய வாழ் நாளை இவனுக்கு வழங்க முடிந்தால் மிக்க மகிழ்ச்சி யோடு செய்வேன். நான் வாழும் வாழ்நாளையும் இவன் பெற்று வாழட்டும்!' என்று மனம் குளிர்ந்து பாடினான்.

## 2

புலவர்கள் ஒரு வள்ளலைப் பாடுவதென்றால், அக் கவியைச் சொல் ஓவியமாக்கிப் பாடுவார்கள், நாடகக் காட்சிபோல் அமைத்துப் பாடுவார்கள். கிள்ளிவளவன் பண்ணன் புகழைப் பாடத் தொடங்கினான்.

"*யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய*"

என்று தொடங்கினான். மேலே பாட்டில் ஒரு கற்பனைக் காட்சியைக் காட்டுகிறான்.

பண்ணன் கலைஞர்களைப் பாதுகாக்கிறவன். அன்ன தானத்தில் சிறந்தவன். முக்கியமாக, குழந்தைகளுக்கு வயிறு நிரம்பச் சோறு போட்டுக் கையிலும் கொடுத்து அனுப்புகிறவன். தம் பசிக்குத் தாமே ஈட்டிக்கொள்ள இயலாதவர்கள் குழந்தைகள். தாமே தமக்குச் சோறு சம்பாதிக்காவிட்டாலும், பிறர் மகிழ்ந்து ஊட்டி இன்

புறும் நிலையில் இருப்பவர்கள் இரு வகையினர். கடவுளர் ஒரு வகை; குழந்தைகள் மற்றொரு வகையினர். இவர்களில் கடவுளர் தாமே உண்பதில்லை. குழந்தைகள் உண்பார்கள். அவர்களுக்குப் பண்ணன் ஆர்வத்துடன் சோறு அளித்து வந்தான். இது மிக மிகச் சிறப்பான செயலென்று எண்ணிச் சோழன் அதை அழகாக எடுத்துச் சொன்னான்.

பசியினால் வருந்தும் பாணரும், பிற கலைஞரும் ஒரு கூட்டமாகக் கூடிப் பண்ணனை நாடி வருகிறார்கள். அவர்களோடு ஒரு புலவரும் வருகிறார். அவர்களுக்கு எதிரில் ஒரு பாணர் கூட்டம் பண்ணன் வீட்டில் விருந்துண்டு, பரிசும் பெற்றுக்கொண்டு வருகிறது. அக் கூட்டத்திலுள்ள பாணரைப் பார்த்துப் புலவர், "பண்ணன் வீடு அருகில் இருக்கிறதா?" என்று கேட்கிறார்.

*"யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய"*

என்று தொடங்கிய அந்தப் பாட்டு,

*"பசிப்பிணி மருத்துவன் இல்லம்*
*அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே"*

என்று முடிகிறது.

"பாணரே, இவனைப் பாருங்கள். இவனுடைய சுற்றத்தாரைப் பாருங்கள். பசியினால் வாடிக் குலையும் இவர்களைப் பார்த்தாலே, 'ஐயோ, பாவம்!' என்று இரங்கத் தோன்றுகிறதல்லவா? இவர்களும் நானும் பண்ணனை நாடி வருகிறோம். அவன் வீடு எங்கே?" என்று கேட்கிறார் புலவர்.

"அதோ, உணவு கொள்கிறவர்களின் ஆரவாரம் உங்கள் காதில் விழவில்லையா?" என்கிறான் எதிரில் வரும் பாணன்.

"கேட்கிறது. புதியதாகப் பழுத்த ஆலமரத்தில், பறவைகளெல்லாம் சேர்ந்து ஒலித்தாற்போல, எங்கோ

உண்ணுபவர்களுடைய ஊனொலி அரவம் கேட்கிறது. ஆனால், எங்கே என்றுதான் தெரியவில்லை.''

"இதோ பாருங்கள்; இந்தக் குழந்தைகள் அவனுடைய வீட்டிலிருந்துதான் வருகிறார்கள்'' என்று, பாணன் சோற்றைக் கையிலே வைத்துக்கொண்டு களிப்புக் குரலோடு செல்லும் குழந்தைகளைக் காட்டுகிறான்.

புலவர் அந்தக் கூட்டத்தைப் பார்க்கிறார். "முன்பு இருந்தே இந்தக் காட்சியைக் கண்டு வருகிறோம். மேகம் மழை பெய்யப் போவதை உணர்ந்து எறும்புகள் தம் வாயில் முட்டையைக் கவ்விக்கொண்டு மேட்டு நிலத்தை நோக்கிச் சாரி சாரியாகப் போவதைப் பார்த்திருக்கிறேன். வரிசை வரிசையாக இந்தக் குழந்தைகள் வெள்ளைச் சோற்றுருண்டையோடு போவது அந்த எறும்புக் கூட்டத்தின் காட்சியை நினைப்பூட்டுகிறது. தூரத்திலிருந்து பார்த்தால், தலைகள் ஒரே கறுப்பாகத் தோன்றுகின்றன. கையில் உள்ள சோற்றுருண்டைகள் பளிச்சென்று வெள்ளையாகத் தெரிகின்றன. நான் சொல்லும் உவமை பொருத்தமாக இல்லையா?''

"ஆம்; மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இப்படிப் போகும் சிறுவர்களைக் கண்டிருக்கிறீர்கள். கண்டும், பண்ணன் வீடு எங்கே என்று கேட்கிறீர்களே!''

"இந்தக் குழந்தைகளின் வரிசையை முதலில் கண்டபோது, அருகில்தான் அவன் வீடு இருக்கும் என்று எண்ணினோம். ஆனால், வர வர வழி மாளவில்லை. எத்தனை பிள்ளைகள்! உலகத்துக் குழந்தைகள் எல்லாருமே இங்கே வந்து விட்டார்களோ? இந்த வரிசை ஒரு காதம் இருக்கும்போல இருக்கிறதே! சட்டென்று அவன் வீட்டுக்குப்போய் உண்ண

வேண்டிய நிலையில் இருக்கிறவர்கள் இவர்கள். உணவு கண்டு பல நாட்கள் ஆயின. மெல்ல இந்தக் குழந்தை களைக் கண்டு களித்துப் போகலாம் என்பதற்கு இல்லை. ஆகையால் கேட்கிறோம். உங்களை மாத்திரம் கேட்க வில்லை; எவ்வளவோ பேரைக் கேட்டுவிட்டோம்; கேட்டுக்கொண்டே வருகிறோம். 'இந்தக் குழந்தைகளின் வரிசையைப்பற்றிச் செல்லுங்கள்' என்று சொல்லு கிறார்கள். அப்படித்தான் வந்து கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டம் புறப்படும் இடத்தை, அந்தப் பசிப்பிணி மருத்துவனுடைய இல்லத்தை நாங்கள் கண்டோம் இல்லை. ஐயா! சொல்லுங்கள், அவன் வீடு பக்கமா, தூரமா? தயை செய்து சொல்லுங்கள்.''

இப்படி எதிரே வரும் பாணனைப் பார்த்து ஒரு புல வர் பாடுவதாகக் கிள்ளிவளவன் பண்ணனைப் பாராட்டி யிருக்கிறான்:

*யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!*
*பாணர், காண்கிவன் கடும்பின திடும்பை;*
*யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன*
*ஊண்ஒலி அரவந் தானும் கேட்கும்;*
*பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி*
*முட்டை கொண்டு வற்புலம் சேரும்*
*சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்பச்*
*சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்*
*இருங்கிளைச் சிறுஅர்க் காண்டும்; கண்டும்*
*மற்றும் மற்றும் வினவுதும்; தெற்றெனப்*
*பசிப்பிணி மருத்துவன் இல்லம்*
*அணித்தோ, சேய்த்தோ? கூறுமின் எமக்கே.*

[வாழிய - வாழட்டும். பாணர் - பாணரே. காண்க இவன். கடும்பினது இடும்பை — சுற்றத்தாரின் துன் பத்தை. யாணர்-புதியதாகப் பழுத்த. பழுமரம் - பழுத்த

ஆலமரம். புள்-பறவை. இமிழ்ந்தன்ன-ஒலித்தாற்போன்ற. பொய்யா எழிலி - பொய்க்காத மேகம். வற்புலம் - மேட்டு நிலம். சில் ஒழுக்கு-சிறிய வரிசை. ஏய்ப்ப-ஒப்ப. வீறு வீறு - வேறு வேருக. இருங்கிளை - பெரிய கூட்டம். சிருஅர் - சிறுவர்களை. காண்டும் - காண்கிருேம். தெற்றென - தெளிவாக. அணித்தோ - அருகில் உள்ளதோ. சேய்த்தோ - தூரத்தில் உள்ளதோ.]

சோறு கொண்டு செல்லும் குழந்தைகளின் கூட்டத்தை நெடுந்தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டு வருகிருர்கள் இவர்கள். பசித்தவர்களுக்குச் சோறு கிடைக்கும் இடம் தெரிந்தால் அங்கே போவதற்கு விரைவார்கள். இவர்களும் பசிக் கொடுமையால் விரைகிருர்கள். கணக்கில்லாத குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும் பண்ணன் புகழை, இப்படி அழகிய காட்சி ஒன்றைக் காட்டிப் பாடுகின்ருன் கிள்ளிவளவன்.

இந்தப் பசிப்பிணி மருத்துவனை, 'சிறுகுடி கிழான் பண்ணன்' என்று வழங்குவர் புலவர். இந்தப் பாடல் புறநானூற்றில் இருக்கிறது.

# கடலும் கிணறும்

அது சிறிய ஊர்; ஆனாலும் பெரிய மனமுள்ள மக்கள் அதில் வாழ்ந்தார்கள். அவர்களுடைய பெருமையை உலகத்துக்குத் தெரிவிப்பதற்காகவே இருப்பவர்களைப் போலப் பல சிறிய மனமுடையவர்களும் அங்கே இருந்தார்கள். ஒருவர் சில நிலங்களை வைத்துக் கொண்டு தம்மால் இயன்ற அளவுக்கு அறம் செய்து வந்தார். வேறு பலர் நாளுக்கு நாள் தம்முடைய செல்வத்தைப் பெருக்கிக்கொண்டு வாழ்ந்தார்கள். அந்தச் செல்வர்கள் வாழ்ந்ததனால் ஊருக்குப் புகழ் உண்டாகவில்லை. சின்னக் குடித்தனக்காரராகிய வேளாளர் இருந்ததனால் வேறு ஊர்களிலிருந்து ஏழைகள் வருவார்கள்; புலவர்கள் வருவார்கள்; அந்த அறச் செல்வரிடம் உதவி பெற்றுச் செல்வார்கள்; தாம் போகும் இடங்களில் எல்லாம் அவருடைய புகழைப் பரப்பிக் கொண்டே போவார்கள். இதனால் அந்த ஊருக்குப் புகழ் உண்டாயிற்று.

அடிக்கடி புலவர்கள் வந்து போவார்கள். அந்த வேளாளருக்குத் தமிழ் ஆர்வம் அதிகம். புலவர்களிடம் பாடல்களைக் கேட்டு இன்புறுவார். தமிழன்பும் அறநினைவும் ஒருங்கே இணைந்த அவரிடம் யாருக்குத்தான் அன்பு பிறக்காது?

ஒருநாள் ஔவையார் காதில் அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது. நல்ல மனிதர்கள் எங்கே இருந்தாலும் தேடிச் சென்று பார்த்துப் பாராட்டுவது அந்தப் பெருமாட்டிக்கு இயல்பு. இந்த வேளாண் செல்வரையும்

பார்க்க விரும்பி ஒரு நாள் அவர் ஊருக்குச் சென்றார். ஊருக்குள்ளே நடந்து வரும்போது பல பெரிய மாளிகைகளைக் கண்டார். ''இந்த மாளிகைகளில் ஒன்றில்தானே அவர் வாழ்கிறார்?'' என்று உடன் வந்தவர்களை ஔவையார் கேட்டார்.

"இல்லை; அவர் சிறிய வீட்டில் வாழ்கிறார். இந்த மாளிகைகளில் வாழ்கிறவர்கள் அவரைக் காட்டிலும் பெரிய செல்வர்கள்'' என்றார்கள் அவர்கள்.

''இந்த ஊரில் இவ்வளவு பெரிய செல்வர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் சொல்லவில்லையே!'' என்றார் தமிழ் மூதாட்டியார். அதற்கு விடை ஒன்றும் யாரும் கூறவில்லை.

ஔவையார் வேளாண் செல்வர் வீட்டுக்குப் போனார். அவர் வருவதை அறிந்த அவர் எதிர்கொண்டழைத்து உபசாரம் செய்தார். பாட்டி தனியாகவா வருவார்? அவருடன் வேறு சில புலவர்களும் வந்திருந்தார்கள். 'பாட்டி வாயிலிருந்து எந்தச் சமயத்தில் என்ன முத்து உதிருமோ? அதை உடனே பொறுக்கிக் கொள்ளவேண்டும்' என்று மிகுந்த ஆவலோடு அவர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த உபகாரி யாவரையும் அமரச் செய்து உபசாரம் செய்து விருந்து அளித்தார். அவர் இட்ட விருந்தும் பேசிய பேச்சும் இனியனவாக இருந்தன. ஊரில் உள்ள பலர் ஔவையாரைப் பார்க்க வந்துவிட்டார்கள்.

எல்லோரும் உணவு உண்டு அமர்ந்திருந்தார்கள். அப்போது அந்த ஊர்க்காரராகிய பெரியவர் ஒருவர் ஔவையாரை நோக்கி, "ஒரு விண்ணப்பம்" என்றார்.

''என்ன, சொல்லுங்கள்?'' என்றார் ஔவையார்.

"தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது, கலைமகளே எழுந்தருளியது போல இருக்கிறது. தங்களைப் போன்ற பெரியவர்கள் இந்தச் சிறிய ஊருக்கு வருவதற்கு இந்த ஊர் என்ன புண்ணியம் செய்ததோ, தெரியவில்லை. ஊரில் உள்ளவர்கள் புண்ணியம் செய்ததனால் தாங்கள் வந்தீர்கள் என்று சொல்லுவது தவறு. இந்தப் புண்ணியவான் இந்த ஊரில் இருக்கிறதனால்தான் தங்களைப் போன்றவர்கள் இந்த ஊரைத் தேடி வருகிறார்கள்."

இதற்குள் அந்த உபகாரி, "தாத்தா, வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுங்கள்" என்றார்.

கிழவர் மேலே தொடர்ந்தார்: "நான் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்பதில்லை. தாங்கள் தெய்வாம்சம் உடையவர்கள். தங்கள் திருவாக்கால் இந்தப் புண்ணியவானை ஆசீர்வாதம் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். எவ்வளவோ பேர்கள் தங்கள் வாக்கால் புகழ் பெற்றிருக்கிறார்கள். இந்த வள்ளலையும் தாங்கள் செந்தமிழ்ப் பாவால் வாழ்த்த வேண்டும்."

வீட்டுக்கு உடையவர் ஔவையாரைப் பார்த்து, "அந்தப் பெரியவர் என்னிடம் உள்ள அபிமானத்தால் பேசுகிறார். இந்த ஊரில் பல பெரிய செல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்க நான் மிகவும் சிறியவன். இறைவன் அவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். இந்த ஊரில் அவர்கள் இருப்பதும் ஒரு பெருமைதான். பொதுவாக எல்லோரையும் வாழ்த்துவதுதான் முறை. இந்த எளியேனைத் தனியே வாழ்த்துவதற்கு நான் என்ன செய்துவிட்டேன்!" என்றார்.

ஔவையார் இதுவரையில் பேசாமல் இருந்தவர் இப்போது வாயைத் திறந்தார். முன்னால் பேசிய கிழ

வரைப் பார்த்து, ''இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கிறார்கள் என்கிறாரே; அவர்கள் இவரை விடப் பணக்காரர்களோ?'' என்று கேட்டார்.

''ஆமாம், அவர்கள் பணத்தைச் செலவழிக்காமல் மேலும் மேலும் சேர்த்துக்கொண்டே வருகிறார்கள். இவருக்குப் பணத்தைச் செலவழிக்கத் தெரியுமே யொழியச் சேர்க்கத் தெரியாது. அதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்வேன்.''

''அப்படியா! ஏதாவது ஒன்று சொல்லுங்கள்; கேட்கிறேன்.''

''இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தப் பக்கங் களில் பஞ்சம் வந்தது. நெல் சாரியாக விளையவில்லை. இருக்கிறதைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு செட் டாக வாழவேண்டியிருந்தது. அப்போதும் இவரிடத்தில் யார் யாரோ புலவர்கள் வந்துகொண்டே இருந்தார்கள். அந்தப் பணக்காரர்கள் தங்கள் வாசலை அடைத்துக் கொண்டார்கள். இந்தப் புண்ணியவானோ எப்போதும் போல் வருவாரை வரவேற்றார். இவர் சாப்பிட்டாரோ, இவர் மனைவி சாப்பிட்டாளோ, நான் அறியேன். ஊரெல்லாம் திண்டாடும் அந்தச் சமயத்தில் வரும் புல வர்களுக்கு ஒரு வேளையாவது சோறு போட்டு அனுப்பிக் கொண்டிருந்தார். அப்போது இவர் செய்த தருமத்தைப் பார்த்த நாங்கள், இவரைத் தெய்வப் பிறவி யென்றே எண்ணினோம்.''

''இவரைப் பாடவேண்டும் என்று நீங்கள் சொல் கிறீர்கள்.''

''ஆமாம்.''

''இவரோ, எல்லோரையும் பாடவேண்டும் என்று சொல்கிறார்.''

அந்த உபகாரி, "ஆமாம், இந்த ஊர் வாழ்ந்தால் தான் நான் வாழ்வேன். ஊர் என்பது எல்லோரும் சேர்ந்ததுதானே? ஆகையால் எல்லோரையுமே வாழ்த்துங்கள்" என்றூர்.

"உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, உடன் இருந்த புலவர்களின் முகங்களைப் பார்த்தார் தமிழ்ப் பிராட்டியார். அவர்கள் மூதாட்டியார் எப்படிப் பாடப்போகிருர் என்று ஆவலோடு காத்திருந்தனர்.

"அவர்கள் பெரிய செல்வர்கள் என்று சொன்னீர்கள். உங்களுக்கு அத்தனை செல்வம் இல்லை அல்லவா?" என்று ஆற அமரப் பாட்டி கேட்டார்.

"ஆமாம்."

"அவர்கள் செல்வம் கடலைப் போன்றதானல் உங்கள் செல்வத்தைச் சிறிய கிணருகச் சொல்லலாமா?"

"தங்கள் திருவுள்ளம்."

"அவர்களுக்கு மேன்மேலும் செல்வம் பெருகட்டும் என்று பாடப் போகிறேன்."

இப்போது யாரும் பேசவில்லை. பாட்டி பாடலைச் சொல்லத் தொடங்கினர். அந்தப் பாட்டின் பாவத்தை முதலில் தெரிந்துகொண்டால் பிறகு பாட்டு நன்ருகச் சுவைக்கும்.

★

பிறரைக் கடலென்றும் அவரைக் கிணற்று நீரென்றும் பாடினர் ஔவையார். வெறும் அளவுக்கா அவ்வாறு அவர் சொன்னர்? கடல் அளவில் பெரியதுதான். ஆனல், அதிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீராவது தாகத்துக்கு உண்ணமுடியுமா? அதற்கு அருகிலேயே தோண்டிய கிணற்றில் சிறிய ஊற்றிலிருந்து வரும் நீரோ தாகத்தைப் போக்கும். சிறிய ஊற்ருக இருந்தால்

என்ன? கையில் அள்ளிக் குடிக்கப் போதாதா? வற்ருமல் நீர் வந்துகொண்டிருப்பதா யிற்றே!

கடல் நீரை மேகம் வற்றச் செய்து உறிஞ்சிக் கொண்டு போய் எங்கோ பொழிகிறது. அந்தச் செல்வர்களின் செல்வத்தையும் வேறு யாராவது வற்புறுத்தி அடித்துக்கொண்டு போய்ச் செலவழிப்பார்கள். ஔவையார் இந்த எண்ணங்களையெல்லாம் புதைத்துப் பாடினூர். ''உப்புக் கடலைப் போன்ற பெரிய பணக்காரர்களும் இருக்கிருர்கள்; கிணற்றில் உள்ள ஊற்று நீரைப் போல நீயும் இருக்கிருய்'' என்று பாட்டைத் தொடங்கினூர்.

*உவர்க்கடல் அன்ன செல்வரும் உளரே!*
*கிணற்றுஊற் றன்ன நீயுமார் உளையே!*

பிறகு வாழ்த்தலானூர். ''அந்தப் பணக்காரர்களுக்கு மேலும் மேலும் பெருஞ்செல்வம் உண்டாகட்டும் நீ...'' இப்போது அருகில் இருந்தவர்களின் ஆவல் மிகுதியாயிற்று. ''நீ பல காலம் நீண்ட ஆயுள் பெற்று வாழ வேண்டும்!''

*செல்வர் தாம் பெருந்திரு வுறுக! பல்பகல்*
*நீவா ழியரோ! நெடிதே.*

ஔவையார் இதனோடு நிறுத்தவில்லை. இந்த உபகாரியின் பெருமையைச் சொல்லாமல் பாட்டு முடியாதல்லவா? பஞ்சகாலத்தில் அவர் புலவர்களைக் காப்பாற்றிய செய்தி பெரிய சிறப்பாகத் தோன்றியது. ''யாரும் தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் பதுக்கி வைத்துக்கொள்ளும் பஞ்ச காலத்திலும் உன்னிடத்தில் உள்ள பொருளை எங்களைப் போன்றவர்களுக்கு வழங்கி, எங்கள் பாடலை ஏற்றுக்கொள்பவன் நீ.''—இவ்வாறு பாடி முடித்தார்.

*...ஈயாச்*
*சிறுவிலைக் காலத் தானும்*
*உறுபொருள் தந்துஎம் சொற்கொள் வோயே!*

*[சிறுவிலைக் காலம் - பஞ்சகாலம். சொல் - புகழும் வார்த்தைகள். கொள்வோயே - கொள்பவனே; கொள்வாய் என்றும் பொருள் செய்யலாம்.]*

அவர்களுக்கு எவ்வளவு பணம் சேர்ந்தாலும் கடைசியில் யாரேனும் அடித்துக்கொண்டு போகப் போகிறார்கள். இவர் நீடுழி காலம் வாழ்ந்தால் எப்படியும் அறம் புரிந்துகொண்டே இருப்பார். பணக்காரர் பணம் சேர்வதனால் வரும் தீங்கை அறத்தால் போக்கிக்கொள்ளலாம். அது செய்யாதவர்களுக்குப் பணம் சேரச் சேரத் துன்பமும் உடன் சேரும். பாட்டிக்கு இந்த உண்மைகள் நன்றாகத் தெரியும். அதனால் அவர்களுக்குத் துன்பம் உண்டாகட்டும் என்று சபிக்கவில்லை; 'இன்னும் பணம் சேரட்டும்' என்று சொன்னார்.

*உவர்க்கடல் அன்ன செல்வரும் உளரே!*
*கிணற்றூற் றன்ன நீயும்ஆர் உளையே;*
*செல்வர்தாம் பெருந்திரு வுறுக! பல்பகல்*
*நீவா ழியரோ நெடிதே! ஈயாச்*
*சிறுவிலைக் காலத் தானும்*
*உறுபொருள் தந்துஎம் சொற்கொள் வோயே!*

# கூவம் தியாக சமுத்திரம்

தொண்டை நாட்டில் உள்ள கூவம் என்னும் ஊர் பாடல் பெற்ற தலம். இன்றும் கூவம் என்ற பெயருட ணேயே அது விளங்குகிறது. அதற்குத் திருவிற் கோலம் என்றும் ஒரு பெயர் உண்டு. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அந்தத் தலத்துக்கு ஒரு புராணம் பாடியிருக்கிருர்.

பழங்காலத்தில் அதற்குத் தியாக சமுத்திரம் என்ற பெயரும் வழங்கியது. கூவம் தியாக சமுத்திரம் என்று சேர்த்து வழங்குவதும் உண்டு. அங்கே தமிழ்ப் புலவர் களும் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் வள்ளல்களும் இருந்தார்கள்.

இராமாயணத்தைப் பாடிப் புகழ்கொண்ட கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் ஒரு முறை தொண்டை நாட்டுக்கு வந்தார். அவருடைய வரவை அறிந்து கூவத்துப் பெருமக்கள் அவரைத் தம்முடைய ஊருக்கு வந்து சில நாள் தங்கச் சொன்ஞர்கள். அக்காலத்தில் தொண்டை மண்டலமும் சோழனுடைய அரசாட்சிக்கு அடங்கி யிருந்தது. சோழனுடைய ஆதரவு கம்பருக்குக் கிடைக்கவில்லை. அதனுல் அவர் வடக்கே புறப்பட்டுத் தெலுங்கு நாடளவும் சென்று வந்தார்.

அக்காலத்தில் வாணியர் குலத்தில் தோன்றிய தாதன் என்ற புலவன் சோழ மன்னனுடைய பாராட் டைப் பெற்ருன். அவன் கம்பர் பாட்டில் குறை

கூறினன். கம்பரும் அவனை இழித்துப் பாடினர். இதனால் இருவருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது.

வாணியத் தாதனுடைய புலமையைப் பாராட்டிச் சோழ மன்னன் அவனுக்குக் கூவம் தியாக சமுத்திரத்தை முற்றூட்டாக வழங்கினன். அதனால் அப் புலவன் அடிக்கடி கூவத்துக்கு வந்து சில நாள் தங்கிச் செல்வது வழக்கம். அவனுடைய புலமை நலத்தை அறிந்து, அவனை உபசரித்து அளவளாவி இன்புற்றனர் அவ்வூர் மக்கள்.

கம்பர் அந்தப் பக்கமாக வருகையில் கூவத்திலுள்ள பெருமக்கள் அவரைத் தம் ஊருக்கு வரவேண்டுமென்று அழைத்தபோது, அவர் வர மறுத்துவிட்டார். வாணியத் தாதனுக்கு உரிய ஊர் அது; அங்குள்ளவர்கள் அவனிடம் மிக்க ஈடுபாடுடையவர் என்பதை உணர்ந்தே அப்படிச் செய்தார்.

கம்பர் வரமாட்டேன் என்று மறுத்தாலும் கூவத்து மக்கள் அவரை விடவில்லை. சிலர் சேர்ந்து, அவர் செல்லும் இடங்களில் எல்லாம் தொடர்ந்து சென்றார்கள். சில சமயங்களில் ஒருவரும் அறியாமல் அவருடைய சிவிகையைச் சுமந்தார்கள். அதைக் கம்பர் தெரிந்துகொண்டார்; "நீங்கள் யார்? ஏன் என் சிவிகையைச் சுமக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கலைமகள் ஆணுருவுடன் எழுந்தருளி யிருக்கும் அவதாரம் தாங்கள். தங்கள் சிவிகையைச் சுமக்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது பற்றிப் பெருமிதம் அடைகிறோம்'' என்றார்கள் அவர்கள்.

"உங்கள் ஊர் எது?''

"கூவம் தியாக சமுத்திரம்."

"உங்கள் வாணியத் தாதனுடைய சிவிகையைத் தூக்கிச் செல்லாமல், இங்கே ஏன் வந்தீர்கள்?" என்று சற்றே சினக் குறிப்போடு கம்பர் கேட்டார்.

"தமிழில் எங்களுக்கு வேறுபாடு இல்லை. இராமாயணம் பாடிய திருவாயால் எங்கள் ஊரும் ஒரு பாடலாவது பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதற்கு நாங்கள் செய்த தவம் போதவில்லை. இந்தச் சிவிகையைச் சுமக்கும் புண்ணியம் அந்தத் தவக் குறையை நிறைவேற்றும் என்று நம்புகிறோம்."

கம்பருக்குச் சற்றே மனம் இளகியது. அப்போது அவர் கீழே இறங்கி ஓரிடத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். கூவத்திலிருந்து வந்தவர்களில் ஒருவர் நல்ல வாசனைப் பண்டங்கள் சேர்ந்த தாம்பூலத்தை அவரிடம் நீட்டினார். அதைக் கம்பர் போட்டுக்கொண்ட போது அது மிகவும் நன்றாக இருந்தது. அப்போது தான் தமக்கு அதைக் கொடுத்தவரைக் கூர்ந்து பார்த்தார். அவர் சிறந்த செல்வர் என்று அவர் தோற்றமே சொல்லியது. 'இவர் யார்? நமக்குத் தாம்பூலம் தருகிறாரே!' என்று எண்ணிய கம்பர், "நீர் யார்?" என்று கேட்டார்.

"கூவம் தியாக சமுத்திரத்தில் தங்கள் பொன்னடி படவேண்டுமென்று தவம் செய்பவர்களில் அடியேனும் ஒருவன்" என்று அவர் பணிவுடன் கூறினார். அப்படிச் சொல்லிக்கொண்டே, மற்றொரு வெற்றிலைச் சுருளை நீட்டினார்.

"உம்மைப் பார்த்தால் வளவாழ்வு வாழ்பவராகத் தோன்றுகிறீர். இப்படி அடைப்பைச் சேவகம் செய்யலாமா?" என்று கேட்டார் கம்பர்.

"இது செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. இராமபிரானுடைய வடிவழகையும் அருங்

குணங்களையும் பாடிய திருவாயில் சேரும் தாம்பூலத்தை அளிக்கும் பாக்கியம் எளியதா?'' என்று விடை வந்தது.

உடன் இருந்தவர்கள் அடைப்பைச் சேவகம் செய்தவர் பரம்பரைச் செல்வரென்றும், இரந்தார்க்கு இல்லையென்னாது ஈபவரென்றும் எடுத்துச் சொன்னார்கள்.

''தங்களைப் போன்ற புலவர் பெருமக்களுக்கு முன் நான் எம்மாத்திரம்? கொடுக்கக் கொடுக்கக் குறையும் பொருளை நாங்கள் வைத்திருக்கிறோம். கொடுக்கக் கொடுக்கக் குறையாத தமிழ் தங்களிடம் இருக்கிறது. நாங்கள் கேட்பவர்களுக்குக் கொடுக்கும் பொருள் சில நாட்களுக்கே பயன்படும். தாங்கள் வழங்கும் கவியோ என்றும் நிலைத்து நின்று புகழைப் பரப்பும். நாங்கள் கொடுக்கிறோம் என்று பெயர் பெறுவதைவிடத் தங்களிடம் வந்து இரந்து நிற்பதையே பெரிதாக எண்ணுகிறோம். தக்கவர்களிடம் இல்லை என்னாமல் தம்மிடமுள்ள பொருளை வழங்குபவர்களிடம் இரப்பதும் சிறந்ததே என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார் அல்லவா? அதனால் இப்போது தங்கள் முன் வந்து இறைஞ்சி நிற்கிறோம்.''

அவர் படித்தவர் என்பதும், பண்புடையவர் என்பதும் அவர் பேச்சால் வெளியாயின. கவிஞர் அவருடைய பணிவையும் பேச்சிலுள்ள ஆர்வத்தையும் கண்டு வியந்தார்.

"உங்கள் ஊருக்கு வருகிறேன்'' என்று கம்பர் கூறியதைக் கேட்டவுடன் கூவத்துக்காரர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். வந்தவர்களில் சிலர் ஊர் சென்று, அக் கவிஞர் பெருமானை வரவேற்பதற்கு வேண்டியவற்றைச் செய்யத் தொடங்கிவிட்டனர்.

கம்பர் கூவம் சென்றார். ஊர் முழுவதும் சிவிகையில் வலம் செய்தார். அப்போது அவர் சிவிகையை ஊர்க்

காரர்களே சுமந்தார்கள். கம்பர் வேண்டாமென்று சொல்லியும், கேளாமல் சுமந்தார்கள். முன் சொன்ன செல்வர் அடைப்பையைச் சுமந்து வெற்றிலைச் சுருள் கொடுத்தார்.

அவர்களுடைய அன்பையும் உபசாரத்தையும் கண்ட கம்பர் உருகினார்; சில நாட்கள் அங்கே தங்கினார். அப்போது அவர்களுக்கு இருந்த தமிழார்வத்தையும் நன்றாக உணர்ந்து வியந்தார். அவ்வூரையும் ஊராரையும் பாராட்டிச் சில பாடல்கள் பாடினார்.

பிற்காலத்தில் வந்த கவிஞர் ஒருவர் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, கூவத்தைப் பற்றி ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

*ஓங்கிய செந்தமிழ்த் தாதற்*
*கடிமைஅவ் வூர்; அதனால்*
*நாம்கவி சொல்வதும் இல்லைஎன்*
*றேகம்ப நாடன்சொல்ல*
*ஆங்கவன் ஏறும்சிவிகை*
*சுமந்தும் அடைப்பையிட்டும்*
*தாம்கவி கொண்டது கூவம்*
*தியாக சமுத்திரமே.*

## 2

இந்தக் கூவம் தியாக சமுத்திரத்தில் ஒரு காலத்தில் நாராயணர் என்ற பெயருள்ள பொற் கொல்லர் ஒருவர் இருந்தார். அவர் தம் கலையில் வல்லவராக இருந்ததோடு தமிழ்ப் புலவர்களை வரவேற்று ஆதரிக்கும் வள்ளன்மையும் உடையவராக இருந்தார். எத்தகைய புலவராக இருந்தாலும் அவருடைய கவியைக் கேட்டு, அவரவர் தகுதிக்கு ஏற்பப் பரிசு வழங்கி வந்தார்.

மன்னர்களிடமும், வேறு செல்வர்களிடமும் பரிசு பெற்றவர்களும் நாராயணரிடம் பரிசு பெறுவதை மதிப்பாகக் கருதினார்கள். இவ்வாறு செய்து வந்தமையால் அவருடைய புகழ் எங்கும் பரவியது. ஒரு புலவர் கூவத்தைச் சிறப்பித்துப் பாடுகையில் அந்தப் பொற்கொல்லரையும் பாராட்டினார்.

*மட்டாருஞ் செங்கழு நீர்மணி*
*மார்பரை வாழ்த்தும்அந்தக்*
*கிட்டாத யாசகர் கிட்டிவந்*
*தால்அதைக் கேட்டுமுன்னாள்*
*பட்டோலை வாசித் தவரவர்க்*
*குள்ள பரிசிலெல்லாம்*
*தட்டான் அளிப்பதும் கூவம்*
*தியாக சமுத்திரமே.*

*[மட்டு–தேன். செங்கழுநீர் மணி மார்பர்–செங்கழுநீர் மாலையை யணிந்த அழகிய மார்பையுடைய மன்னர்கள். கிட்டாத யாசகர்-யாரிடத்திலும் சென்று பரிசில் பெறாத அரிய புலவர்கள். அதை–அவர் பாடும் பாடலை.]*

★

ஒரு முறை அந்த ஊருக்கு ஒருவர் வந்தார். அந்த ஊரின் பெயரைக் கேட்டார். கூவம் என்பதற்குக் கிணறு என்று பொருள். "இந்த ஊரின் பெயர் முரண்பாடுடையதாக இருக்கிறது. கிணறு எங்கே, சமுத்திரம் எங்கே? கூவம் என்பது கிணறு. அதை எப்படிச் சமுத்திரம் என்று சொல்வது? கூவம் தியாக சமுத்திரம் என்று இணைத்துச் சொல்வது பொருத்தமாக இல்லையே!" என்றார்.

அவ்வூரில் உள்ள அறிஞர் ஒருவர் அவருக்கு விடை கூறினார். "இது சிறிய ஊராக இருந்தாலும் புகழால் பெரியது. தியாகத்தால் பெரியது. அதனால் வெறும்

சமுத்திரம் என்று பெயர் பெருமல் தியாக சமுத்திரம் என்ற பெயர் பெற்றது'' என்ருர்.

''அப்படியானுல் தியாக சமுத்திரம் என்றே இருக்க லாமே!'' என்ருர் முன்னவர்.

"பழைய பெயர் கூவம். அதனை மறக்காமல் அதை யும் சேர்த்து வழங்குகிருேம்" என்ருர் ஊர்க்காரர்.

"தியாக சமுத்திரம் என்கிறீர்களே; இந்த ஊரில் கொடையாளிகள் மிகுதியோ?'' என்று கேட்டார் வெளி யூர்க்காரர்.

''எத்தனையோ பேர் இருக்கிருர்கள். இந்த ஊர்ப் பொற்கொல்லர் நாராயணருடைய பெருமையை நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ?" என்ருர் ஊர்க்காரர்.

"அவர் யார்?''

''நீங்கள் அவர் பெயரை அறியாமல் இருப்பது மிக்க வியப்பாக இருக்கிறது. அவரையே தியாக சமுத் திரம் என்று சொல்ல வேண்டும்.''

''அவரை நான் பார்க்கலாமா?'' என்று வந்தவர் கேட்டார்.

''நன்ருகப் பார்க்கலாம்'' என்ருர் உள்ளூர்க்காரர்.

இருவரும் நாராயணரிடம் சென்ருர்கள். உள் ளூர்க்காரர் தங்கள் இருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடலைத் தெரிவித்தார். வெளியூர்க்காரர் அவர் சொல்வது உண்மைதான் என்ருர். பொற் கொல்லர் புன்முறுவல் பூத்தார்.

''கூவம் என்ருல் கிணறு என்பது உண்மைதான். இந்த ஊரில் கிணறும் தியாக சமுத்திரமாக இருக்கும்'' என்ருர் நாராயணர்.

அவர் கூறியதன் குறிப்பை முன்னுல் இருந்த இருவரும் உணர்ந்து கொள்ளவில்லை.

''அது எப்படி?'' என்று கேட்டார் வந்தவர்.

''மற்ற ஊர்க் கிணறுகளில் கிடைக்காத அரிய பொருள் இந்த ஊர்க் கிணற்றில் கிடைக்கும்'' என்று பொற் கொல்லர் கூறினர்.

''நீரும் மீனும் கிணற்றில் கிடைக்கும். இந்த ஊர்க் கிணற்றில் வேறு என்ன கிடைக்கும்?" என்ற கேள்வி எழுந்தது.

"நீங்களே அதை நாளைக்குத் தெரிந்து கொள்ள லாம். நாளைக்கு இங்கே வாருங்கள். எங்கள் வீட்டுக் கிணற்றைக் காட்டுகிறேன். உங்களுக்கு என்ன கிடைக் கிறதோ அதை நீங்களே எடுத்துக்கொள்ளலாம்."

வெளியூர்க்காரருக்கு அவர் கருத்து விளங்கவில்லை. என்ன கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் முந்தியது. அடுத்த நாள் வரையிலும் தம்மால் பொறுத்திருக்க முடியாது போல உணர்ந்தார். ஆனாலும் விடை பெற்றுக்கொண்டு சென்ருர்.

மறுநாள் விடிந்தது. அயலூர்க்காரரும் அவர் நண்ப ரும் நாராயணர் இல்லம் வந்தார்கள். அப்போது அந்தக் கொடையாளி ஒரு நீண்ட தூண்டிலை அயலூராரிடம் கொடுத்து, ''வாருங்கள்; கிணற்றங் கரைக்குப் போகலாம்'' என்று புன்முறுவலுடன் அழைத்துச் சென்ருர்.

அயலூராருக்கு எல்லாம் விநோதமாக இருந்தது. அவருடன் புறக்கடைக்குச் சென்ருர்.

''கிணற்றில் உள்ள பொருளை இந்தத் தூண்டி லால் எடுக்கலாம். நீங்கள் தூண்டில் போட்டுப் பழக்கம் இல்லாதவராக இருந்தாலும் அதைப் போட்டு இழுங் கள்; என்ன கிடைக்கிறதென்று பாருங்கள். எது கிடைத்

தாலும் அது உங்களுக்குத்தான்'' என்று கொடையாளி கூறினர்.

புதியவர் தூண்டிலை மெல்லக் கிணற்றுக்குள் விட்டார். தூண்டிலின் முனையில் ஒரு கொக்கி இருந்தது. கிணற்றுக்குள் தூண்டிலை விட்டு அசைத்தார். ஒன்றும் அகப்படவில்லை.

''கிணற்றைச் சுற்றித் தூண்டிலின் கயிறு போகட்டும். எளிதிலே கிடைக்குமா?'' என்ருர் பொற்கொல்லர்.

சிறிது நேரம் தூண்டிலைச் சுழற்றினர், புதியவர். பிறகு ஏதோ கொக்கியில் அகப்பட்டுக் கொண்டதுபோல இருந்தது. மெல்ல மேலே வாங்கினர். கயிறு மேலே வந்தது. இறுதியில் தூண்டில் முள்ளும் வந்தது. என்ன ஆச்சரியம்! அதில் ஒரு மீனும் இருந்தது.

வெறும் மீன அது? பளபளப்பான மீன்! உடம்பு முழுதும் தங்க நிறம் பளிச்சிட்டது. அதை எடுத்தார் தூண்டிற்காரர். அது உண்மையில் தங்கமீன்; தங்கத்தால் பண்ணிய மீன்.

''என்ன இது?'' என்று அவர் வியப்புத் தாங்காமல் கேட்டார்.

''உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று நகைத்தார் கொடையாளி.

''தங்கத்தால் செய்த மீன் அல்லவா?''

''ஆம். இந்தக் கூவம், இப்போது தியாக சமுத்திரமா, அல்லவா சொல்லுங்கள்.''

தூண்டில் போட்டவர் நெஞ்சில் வியப்பும் அந்த வள்ளல்பால் பெருமதிப்பும் கரையிறந்து பொங்கின.

''இது கூவம் தியாக சமுத்திரந்தான். நான் இதை உணர்ந்துகொண்டேன்'' என்று வாய்விட்டுக் கூவினர்.

இந்த அற்புத நிகழ்ச்சியைத் தொண்டை மண்டல சதகம் பாராட்டுகிறது.

*தன்ஞல் இசைபெறக் கூவம்*
*தியாக சமுத்திரம்என்று*
*அந்நாள் ஒருவன் நெடுந்தூண்டில்*
*இட்டிட, ஆங்கொருமீன்*
*பொன்ஞல் அமைத்துப் பொருந்திடச்*
*சேர்த்துப் புகழ்கொண்டதால்*
*மன்ஞு உலகத்து மன்னிய*
*சீர்த்தொண்டை மண்டலமே.*

## 3

இத்தகைய சிறப்பைப் பெற்று வாழ்ந்த நாராயணரைப் பல புலவர்கள் பாடிஞர்கள். அவர் உலக வாழ்வை நீத்தபோது, ஒரு புலவர் பாடியுள்ள பாடல் உள்ளத்தை மிகவும் உருக்குவது.

'உலகத்தில் கொடுப்பவர் எண்ணிக்கை மிகக் குறைவு; யாசகம் பண்ணுவோர் தொகைதான் பெரிது. இத்தகைய உலகத்தில் நாராயணன், பெருங்கொடையாளியாக விளங்கிஞன். அவனைப் போய்ப் படுபாவியாகிய எமனே, நீ கொன்றுவிட்டாயே! அடுப்புக்கரி வேண்டுமென்று பயன் இல்லாத மரங்களை வெட்டலாம். கற்பகத்தை வெட்டலாமா? நாராயணன் இரவலர்களுக்கெல்லாம் கற்பகச் சோலையாக இருந்தானே? கரிக்காகக் கற்பகப் பூஞ்சோலையை வெட்டலாமா?' என்று புலம்பிஞர் அவர்.

*இடுவோர் சிறிதுஇங்கு இரப்போர் பெரிது;*
*கெடுவாய்! நமனே, கெடுவாய்!—படுபாவி!*
*கூவத்து நாரணனைக் கொன்ருயே! கற்பகப்பூங்*
*காவெட்ட லாமோ கரிக்கு?*

*[இடுவோர் - கொடுப்பவர். கா - சோலை.]*

# விச்சுளிப் பாய்ச்சல்

1

தொண்டை நாட்டிலிருந்து கழைக் கூத்தாடும் பெண்பிள்ளை ஒருத்தி வந்திருக்கிருள் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது. எத்தனையோ கழைக் கூத்தர்கள் மூங்கிலை நட்டு அதன்மேல் ஏறிப் பலவகை விளையாட்டுக்களைச் செய்கிருர்கள். ஆனால், இந்தக் கழைக் கூத்தியோ விச்சுளிப் பாய்ச்சல் என்ற புதுமையான விளையாட்டில் வல்லவளாம்.

விச்சுளி என்ருல் மீன்கொத்திப்பறவைக்குப் பெயர். மீன் கொத்திக் குருவி நீருக்குமேலே 'பட பட' வென்று சிறகை அடித்துக்கொண்டு ஓரிடத்திலே நிற்கும். மீனைக் கண்டவுடன்'லபக்'கென்று கொத்திக்கொள்ளும். அது போலக் கம்பத்தின் மேலிருந்து விளையாடும் அந்தப் பெண் யாரேனும் பரிசுப் பொருளாக மோதிரத்தையோ வேறு அணிகலனையோ வீசினால், கம்பத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்து, குதிக்கும்போதே அந்தப் பொருளைப் பற்றிக்கொள்வாள். அதோடு நிலத்தில் விழாமல் மறுபடியும் கம்பத்திலே பாய்ந்து பற்றிக்கொள்வாள். வீசும் பொருளைப் பிடிப்பது பெரிதல்ல; அதைப் பிடித்துக்கொண்டு, மீண்டும் கம்பத்தைச் சார்வதுதான் மிகப் பெரிய விளையாட்டு. தவறினால் உயிருக்கே தீங்கு நேரும் வித்தை அது.

பாண்டியன் அவளுடைய கழைக் கூத்துக்கு ஏற்பாடு செய்திருந்தான். நகரத்துப் பெருமக்கள் பலர்

கூடியிருந்தனர். பாண்டியனுடைய தேவியும் இந்த வேடிக்கையைப் பார்க்கத் தன் தோழிகளுடன் வந்திருந்தாள். அரண்மனை முற்றத்தில் பரந்த வெளியில் தொண்ணூற்றாறடிக் கம்பம் ஒன்றை நட்டிருந்தார்கள். விளையாட்டரங்கைச் சுற்றிக் கயிறு கட்டினார்கள். அந்தப் பெண்மணியோடு முரசறையும் இளம் பையனும் வேறு சிலரும் இருந்தார்கள். அவர்கள் அந்தக் கயிற்று வட்டத்துக்குள் இருந்து தமக்குரிய வேலைகளைச் செய்தார்கள்.

கழைக்கூத்தியின் விளையாட்டு மாத்திரமன்றி அவள் அழகும் ஆடவர் கண்களைக் கவ்வுவதை யாவரும் உணர்ந்தார்கள். அங்கே வந்திருந்த பெண்மணிகளும் அதுபற்றிப் பேசிக்கொண்டார்கள். பாண்டியன் மனைவியும் அவள் அழகைக் கவனித்தாள். அவள் அந்தப் பெண்ணையும் அவள் விளையாட்டையும் பார்த்ததோடு, அடிக்கடி பாண்டிய மன்னனையும் பார்த்தாள். பெண் இயல்பு இது. அவன் கண்கள் சிறிதும் வேறு பக்கம் திரும்பாமல் கம்பத்திலேயே இருந்ததை அரசி கவனித்தாள். கழைக்கூத்தியையே அந்தக் கண்கள் விடாமல் சுற்றின என்பதை உணர்ந்தாள். அவளுக்கு ஏதோ குழப்பம் உண்டாயிற்று. பாண்டியன் பார்வையைத் தன்னிடம் திருப்ப எண்ணினாள். அவன் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகில் வந்து அமர்ந்தாள்.

ஒவ்வொரு விளையாட்டின் முடிவிலும் அங்கே கூடியிருந்த மக்கள் தம்முடைய வியர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர். அரசனோ வியப்பே வடிவமாக அமர்ந்திருந்தான்.

பல விளையாட்டுக்களை அந்தப் பெண் செய்து காட்டினாள். இனி விச்சுளிப் பாய்ச்சல் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச்

செய்தாள். ஒருகால் ஏதேனும் தவறு நேர்ந்தால் பாதுகாப்பாக நான்கு ஆட்கள் முரட்டுப் படுதா ஒன்றைக் கீழே பரவலாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். தவறி விழுந்தால் அதன்மேல் விழலாம். ஆனால், அது அவ்வளவு பெரிய பாதுகாப்பன்று.

பாண்டியன் மிகவும் கூர்மையாக அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் கையில் இருந்த மோதிரம் ஒன்றை ஒருவனிடம் அளித்து விச்சுளிப் பாய்ச்சல் நடக்கும்போது அதை வீசும்படி சொன்னான். மோதிரத்தை அவன் கழற்றும்போதே அரசியின் மனம் துணுக்குற்றது. "வேறு ஏதாவது போடலாமே!" என்று தடுத்தாள். "இல்லை, இல்லை; இதுவே இருக்கட்டும்" என்றான் மன்னன். வீசி எறியும் பொருள் பிறகு அந்தக் கழைக் கூத்திக்கே உரியதாகிவிடும். தன் கணவனுடைய மோதிரத்தை அந்தப் பெண்மணி அணிவதை நினைத்துப் பார்க்கக்கூட அரசிக்கு விருப்பம் இல்லை. அதைக் கழற்றி அரசன் கொடுத்துவிட்டான். இனி என்ன செய்வது?

அரசிக்கு விளையாட்டின்மேல் மனம் போகவில்லை. அவள் உள்ளத்தே சினம் மூண்டது. கழைக்கூத்தி விச்சுளிப் பாய்ச்சல் செய்யப்போகிறாள் என்று அத்தனை பேரும் தம் மூச்சைக்கூட மெத்தென்று விட்டார்கள். கண்ணை இமைக்காமல் கம்பத்தின்மீதே விழிகளை நட்டார்கள். ஆனால், அரசியின் மனமோ விளையாட்டில் செல்லவில்லை. அவள் உள்ளம் புழுங்கினாள்; பெருமூச்சு விட்டாள்.

"என்னுடைய அணிகளில் ஒன்றைத் தருகிறேன்" என்று மெல்ல அரசனிடம் கூறினாள்.

"நீ பேசாமல் இரு" என்று அரசன் கடிந்து கூறினான்.

அரசிக்கு அச்சம் மிகுதியாயிற்று; அரசன் கூறிய கடுஞ் சொல்லால், அன்று அவன் உள்ளம் அந்தப் பெண்ணை நாடுகிறது என்று எண்ணிக்கொண்டாள். பாண்டி நாட்டுக்கு அரசன் ஒரு கழைக்கூத்தியை விரும்புவதா! அவள் இதை நினைக்கையிலே உடல் நடுங்கியது; வேர்த்தது.

அரசியின் உள்ளத்தில் புயல் மூண்டு அவளை அலைத்துக்கொண்டிருந்தது. அதே சமயத்தில், மற்ற அனைவரும் பொம்மைகளைப்போல ஆடாமல் அசையாமல் சிறிதும் மூச்சுப் பேச்சின்றி விச்சுளிப் பாய்ச்சலைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அந்தப் பெண் கம்பத்தின் மேல் ஏறி உச்சியை அடைந்துவிட்டாள். அவள் ஏறுகிற நெளிவுதான் எத்தனை ஆச்சரியம்! அவள் உடம்பு மெழுகினால் ஆனதோ! அவள் வலிமையைப் பார்த்தால் இரும்பின் உரம் இருக்க வேண்டுமென்று தோன்றியது. வளையும் நெளிவைப் பார்த்தாலோ கொடி போல இருந்தது.

அதோ அவள் கம்பத்தின் உச்சியில் நிற்கிறாள். கீழே இருக்கிற ஆள், இவள் இனிப் பாயப்போகிறாள் என்பதைச் சொல்கிறான். அரசன் ஈந்த மோதிரம் அவன் கையில் இருக்கிறது. அதை வீசப்போகிறான். கம்பத்தின் உச்சியில் இருப்பவள் மீன்கொத்தியைப் போலப் பாய்ந்து அந்த மோதிரத்தைக் கவ்விக்கொண்டு, தரையில் குதிக்காமல் கம்பத்திலேயே ஒட்டிக்கொள்ளப்போகிறாள். அது எப்படி முடியும்? மோதிரத்தைப் பற்றிக் கொண்டுஉடனே கம்பத்தைப்பற்றிக்கொள்வது எப்படி?

எல்லாருடைய கண்களும் கம்பத்தில், அதன் மேலுள்ள அந்த அழகிய பெண்ணுருவில் பதிந்து கிடந்தன. அவளுடன் அந்தக் கண்களும் விச்சுளிப் பாய்ச்சலுக்கு ஆயத்தமாக இருந்தன.

அரசி ஊடலால் குமுறினுள். அவள் கம்பத்தைப் பார்க்கவில்லை. தனக்குத் தீங்கு செய்ய வந்திருக்கும் அந்தப் பாதகியைப் பார்க்க அவளுக்கு வெறுப்பாக இருந்தது. பாண்டியனையேதான் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் தன் பார்வையைச் சிறிதளவும் சிதறவிடாமல் கழைக் கூத்தியின்மேல் பதித்திருந்தான்.

தான் அருகில் இருக்கத் தன்பால் சிறிதும் கண்ணை ஓட்டாமல் அந்தப் பெண்ணுக்கே அவன் தன் பார்வையை உரியதாக்கிவிட்டானே! இது இனி நிகழப் போகும் நிகழ்ச்சிக்கு அறிகுறியோ? வாழ்க்கையிலேயே அவன் தன்னைப் பாராமல், அந்த வஞ்ச மகளையே பார்த்துக்கொண்டு இருந்து விடுவானே? – அரசியின் மனம் ஐயம் என்னும் தூணை நட்டு, அதில் தலைகீழாக விளையாடிக்கொண்டிருந்தது. அது விளையாட்டா? வினை அல்லவா?

கழைக்கூத்தி இதோ பாயப்போகிருள். கீழே நின்றவர்கள் படுதாவை விறைப்பாகப் பிடித்தார்கள். மோதிரத்தை வைத்திருந்தவன் அதை வீசிவிட்டான். ஒரே கணந்தான். அதற்குள் என்ன அற்புதம் நிகழ்ந்துவிட்டது! கம்பத்தின் உச்சியில் இருந்தவள் பாய்ந்தாள். அவள் மோதிரத்தை எப்படிப் பற்றினுள் என்பதைக் கவனிக்க முடியவில்லை. கம்பத்தின் நடுப் பகுதியில் அவள் மறுபடியும் தொத்திக் கொண்டாள். இப்போது அவள் கையில் மோதிரம் இருந்தது. யாவரும் ஒரே ஆரவாரம் செய்தார்கள்.

ஆனல், பாண்டியன் அதைப் பார்க்கவில்லை. உள்ளத்திலே எழுந்த பேரலைகளை அடக்க ஒண்ணுமல் திணறிக்கொண்டிருந்த அரசி சற்றே கம்பத்தின் அடியைப் பார்த்தாள். மோதிரத்தோடு நின்றுகொண்டிருந்த ஆள்

அவள் கண்ணிலே பட்டான். அவள் பார்வையைத் திருப்புவதற்கும் அவன் மோதிரத்தை வீசுவதற்கும் சரியாக இருந்தது. அவளுக்கு என்ன தோன்றியதோ! 'வீல்' என்று கத்திக்கொண்டு பாண்டியன் தோளின்மேல் சாய்ந்துவிட்டாள். அவளுடைய இந்தச் செயலால் பாண்டியன் கவனம் திடீரென்று அவள்பால் திரும்பியது. "என்ன!" என்று கேட்டபடியே அரசியைப் பற்றிக் கொண்டான். அதே சமயத்தில், அங்கே விச்சுளிப் பாய்ச்சல் நடந்துவிட்டது. வெண்ணெய் திரளும்போது பானை உடைந்த கதை ஆகிவிட்டது பாண்டியனுக்கு.

அவனுக்கு ஒரு பக்கம் கோபம்; ஒருபுறம் ஏமாற்றம்; ஒருபுறம் கவலை. இந்தச் சமயத்தில் அரசி சாய்ந்ததனால் கோபம்; விச்சுளிப் பாய்ச்சலைப் பார்க்க முடியாமற் போனதனால் ஏமாற்றம்; அரசியின் உடல் நிலையைப் பற்றிக் கவலை. உடனே தோழிமார்களைக் கூவி அரசியை அந்தப்புரத்திற்கு மெல்ல அழைத்துச் செல்லும்படி ஏவினான். பாதி மயக்க நிலையில் இருந்த அவளை அவர்கள் மெத்தென எடுத்துச் சென்றார்கள். கூட்டம் சற்றே கலகலத்தது.

பாண்டியன் நிதானம் தவறவில்லை. விச்சுளிப் பாய்ச்சலைத் தான் பார்க்க முடியவில்லையே என்ற ஏமாற்றமே பெரிதாக இருந்தது. கம்பத்திலிருந்து கீழே இறங்கி வந்த பெண் மோதிரத்தைக் கொண்டு வந்து அரசன் முன்னிலையில் வைத்துக் கும்பிட்டாள்.

அரசன் அவளைப் பார்த்தான். "இந்த மோதிரம் உனக்கே உரியது. அதுமட்டும் அன்று. மற்றொரு மோதிரமும் உனக்குத் தரவேண்டுமென்று விரும்புகிறேன்" என்றான்.

கழைக்கூத்தி திடுக்கிட்டாள். "மற்றொரு மோதிரமா! எதற்கு?" என்று கேட்டாள்.

"விச்சுளிப் பாய்ச்சலை நான் சரியாகப் பார்க்க வில்லை. இன்னும் ஒரு முறை பார்க்கவேண்டும். இரண் டாந் தடவையும் நீ செய்து காட்டினால் இரண்டாவது மோதிரம் கிடைக்கும்" என்றான் அரசன்.

கழைக்கூத்தி விடை கூறவில்லை. அவளுக்கு அரு கில் நின்றவன்-அவளுக்குத் தந்தை அவன்—மறுமொழி சொன்னான். "மன்னர் மன்னா, அப்படிக் கட்டளை பிறப் பிக்கக் கூடாது. விச்சுளிப் பாய்ச்சல் அவ்வளவு எளி தான வேலை அன்று. மூச்சை அடக்கிச் செய்யவேண் டும். அதை ஒருமுறை செய்தால் நல்ல ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் இதைக் கடைசியில் செய்கிறோம்" என்றான்.

"இவளைப் பார்த்தால் களைப்படைந்தவளாகத் தெரியவில்லையே! இன்னும் பல விளையாட்டுக்களைச் செய்யக்கூடியவள் என்று தோன்றுகிறதே!" என்றான் பாண்டியன்.

"அப்படித் தோன்றினாலும் இவள் இயல்பு எனக்குத் தெரியும். கரணம் தப்பினால் மரணம் என்று சொல்வார் கள். ஏதோ இந்த மட்டில் இவள் சாமர்த்தியமாகச் செய்தாளே என்று மகிழ்ச்சி அடைகிறேன். மன்னர் பிரான் சோதனை செய்யக்கூடாது."

"நான் பார்க்கவில்லையே! அதற்கு என்ன செய்வது? எப்படியாவது விச்சுளிப் பாய்ச்சலைப் பார்க்க வழி செய்யவேண்டும்."

"அரசர் பிரானுடைய ஆணையை மீறுவது முறை யன்று என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்கு மகளை உயிரோடு கொடுங்கள். இரண்டாம் முறையும் கம்பத்தில் ஏறினால் என் மகள் உயிரோடு மீளுவாள் என்ற உறுதி எனக்கு இல்லை. வேண்டுமானால் பின் ஒரு நாள் செய்துகாட்டச் சொல்கிறேன்."

அதற்குள் அருகில் இருந்த அமைச்சன் ஒருவன், ''தம்முடைய தொழிலைப் பற்றி இப்படி யாவரும் சொல்லிக் கொள்வது வழக்கம். ஒரே நாளில் இரண்டு ஊர்களில் வித்தை காட்டுவது இல்லையா?'' என்றான்.

கழைக்கூத்தியின் தகப்பன், "வீதியிலே குரங்கை வைத்து ஆடுகிற விளையாட்டு அன்று இது. இதுவும் ஒருவகை யோக சாதனை'' என்றான்.

அமைச்சன், ''மன்னர் பெருமான் ஏவலை மறுக்கும் துணிவு இங்கே யாருக்கும் இல்லை'' என்று கடுங்குரலில் சொன்னான்.

பாண்டியன் ஒன்றும் பேசவில்லை. எதிர் நின்ற கழைக்கூத்தனும் ஒன்றும் சொல்ல இயலாமல் தடுமாறினான். அப்போது அந்தப் பெண்ணே பேசத் தொடங்கினாள்; தன் தகப்பனை நோக்கித்தான் பேசினாள்.

''அப்பா, மன்னர் மன்னருக்குப் பாண்டி நாட்டுக் குடிமக்கள் உயிரைப் பாதுகாப்பதுதான் கடமை போலிருக்கிறது. தொண்டை நாட்டிலிருந்து வந்து பாண்டி நாட்டுத் தெய்வமாகிய மீனாட்சிக்கு என் உயிரைப் பலியாகக் கொடுக்கவேண்டும் என்று என் தலையில் எழுதி யிருந்தால், அதை மாற்றமுடியுமா? நான் மறுபடியும் கம்பத்தின் மேல் ஏறுகிறேன். ஆனால்—''

பாண்டியன் அவள் பேச்சைக் கேட்டுப் பிரமித்துப் போனான். அது பேச்சாக இருக்கவில்லை; சாட்டையை எடுத்துப் பளீரென்று விலாவில் வீசியதுபோல இருந்தது. அரசனால் பேசமுடியவில்லை. அவள் இன்னும் பேச்சை நிறுத்தவில்லை. 'ஆனால்—' என்று இழுத்தவள் சற்றே மௌனமாக நின்றாள். வானத்தைப் பார்த்தாள். ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

இது என்ன! அவள் ஏதோ கவியை அல்லவா சொல்கிறாள்? சொல்லும்போதே தடுமாறுகிறாளே! ஆ!

அவள் அழுகிருள். பாட்டைச் சொல்லிக்கொண்டே அழுகிருள். பாட்டே அழுகை; அழுகையே பாட்டாக அல்லவா வருகிறது?

*மாகுன் றனையபொற் ருேளான்*
*வழுதிமன் வான்கரும்பின்*
*பாகென்ற சொல்லியைப் பார்த்துஎன்னைப்*
*பார்த்திலன்; பையப்பையப்*
*போகின்ற புள்ளினங் காள்புழற்*
*கோட்டம் புகுவதுண்டேல்*
*சாகின் றனள்என்று சொல்லீர்,*
*அயன்றைச் சடையனுக்கே!*

பாட்டுத் தெளிவாகக் காதில் விழுகிறது. பாண்டியன் பேர் அதில் வருகிறது. 'மாகுன்றனைய பொற்ருேளான் வழுதிமன்' என்று சொல்கிருள். பிறகு? பாண்டியன் நன்ருகக் கவனித்தான். பாட்டை மீட்டும் அவள் சொல்கிருள்; நிறுத்தித்தான் சொல்கிருள்; யாரோ அயன்றைச் சடையனுமே! அவன் பேர் அல்லவா பாட்டில் வருகிறது? அவள் காதலனே அவன்?

பாண்டியனுக்கு இப்போது விச்சுளிப் பாய்ச்சல் மறந்து போயிற்று. அவள் பாடும் பாட்டில் ஈடுபட்டுப் போனுன். அந்தப் பெண்ணின் அழுகுரல் அவன் உள்ளத்தை உருக்கியது.

''ஏ பெண்ணே, ஏன் அழுகிருய்? இந்தப் பாட்டை ஏன் பாடுகிருய்? இது யார் பாடியது?"

இப்போதும் தந்தைதான் விடை கூறினுன். ''இவளுடைய துக்கந்தான் பாட்டாக வருகிறது பெருமானே. அயன்றைச் சடையனுர் எங்களைக் காப்பாற்றும் தெய்வம். அயனம் பாக்கத்தில் உள்ள வேளாண் செல்வர். அவருடைய அன்பை நினைத்துப் புலம்புகிருள்'' என்ருன்.

பாண்டியனுக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை. "அவனை நினைத்துப் புலம்புவானேன்?" என்ருன்.

"நான் இவளைப் பெற்ற தந்தை; அவர் வளர்க்கும் தந்தை. இனி உயிர் வாழ முடியாது என்ற எண்ணத்தின்மேல் அவரை நினைத்து அழுகிருள்...'' கிழவனுக்கு மேலே பேசமுடியவில்லை. தொண்டை அடைத்தது.

''பாடல் யார் பாடியது?''

"இந்தப் பாவி மகள் இப்போது பாடுகிருள்!'' கிழவன் விம்மத் தொடங்கினன்.

பாண்டியன் அமர்ந்திருந்தவன் எழுந்தான். அவனும் உணர்ச்சி வசப்பட்டுப் போனன். ''இவள் தமிழ்ப் புலமை உடையவளா!'' என்ற கேள்வியிலே அவனுடைய தமிழ் அன்பும் மதிப்பும் புலனாயின.

''பெண்ணே, நீ கவலைப்படாதே! இனி நீ ஆட வேண்டாம். உன் அழுகையை நிறுத்தி, பாட்டை மறுபடியும் சொல்'' என்ருன்.

அவள் துக்கத்தை அடக்கிக்கொண்டு அந்தப் பாட்டை மெல்லச் சொன்னுள்.

## 2

சென்னைக்கு அருகில் அயனம்பாக்கம் என்ற ஊர் இருக்கிறது. இப்போது புழலேரி என்று வழங்கும் ஏரி உள்ள ஊருக்குப் புழல் என்று பெயர். தொண்டைமண்டலத்தைப் பழங்காலத்தில் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து, ஆட்சியை நடத்தி வந்தார்கள். அந்தக் கோட்டங்களில் ஒன்று புழற்கோட்டம்; அதன் தலைநகர் புழல். அந்தக் கோட்டத்தைச் சார்ந்தது அயனம்பாக்கம். அயனம்பாக்கம் என்பதைப் புலவர்கள் அயன்றை என்று சொல்வார்கள். அவ்வூரில் சடையனர் என்ற

பெயருள்ள வேளாளச் செல்வர் ஒருவர் இருந்தார். தம்முடைய செல்வத்தைப் பிறருக்கு வழங்குவதில் இன்பம் காணுகிறவர் அவர்.

தமிழ்ப் புலவர்களோடு பொழுது போக்குவதில் அவருக்கு விருப்பம் அதிகம். அதனால் அவரை நாடி அடிக்கடி கவிஞர்கள் வந்து கொண்டிருப்பார்கள். தங்களுக்கு எவ்வகையான குறைகள் இருந்தாலும் அயன்றைச் சடையனார் போக்கிவிடுவார் என்ற எண்ணம் புலவர் நெஞ்சில் உண்டாகும்படி அவர்களுக்கு வேண்டியவற்றை வழங்கிப் புகழ்பெற்றார் அந்த வேளாளச் செல்வர்.

அயன்றைக்கு ஒருநாள் முன்பு சொன்ன விச்சுளிப் பாய்ச்சலில் வல்ல பெண்மணி தன் தந்தையுடன் வந்தாள். ஊரில் பெரிய மனிதராகிய சடையனாரை வந்து இருவரும் கண்டார்கள். அந்த ஊரில் கழைக் கூத்து நடத்த வந்திருப்பதாகச் சொன்னார்கள். தன்னுடைய பெண் மிக அருமையான விச்சுளிப் பாய்ச்சலில் வல்லவள் என்பதை அவளுடைய தந்தை எடுத்துச் சொல்லி, அது இத்தகையது என்றும் விளக்கினான்.

அயன்றை மக்கள் கூடினர். சடையனார் முன்னிலையில் கழைக்கூத்து நடைபெற்றது. மக்கள் வியந்து பாராட்டினார்கள். சடையனார் அந்தப் பெண்ணுக்குப் பொன்னும் பொருளும் வழங்கினார்.

"இளமையும் எழிலும் வாய்ந்த இவளை ஏன் இப்படிக் கூத்தாடும்படி பயிற்ற வேண்டும்?" என்று அவளுடைய தந்தையைக் கேட்டார்.

"எங்கள் குலத்தொழில் இது. பரதநாட்டியம் ஆடித் தம் கலைத் திறத்தைப் பெண்மணிகள் காட்டுவதில்லையா? அதுபோல நாங்கள் தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழிலைக் கற்று, இதையே எங்கள் வருவாய்க்கு ஆதார

மாக வைத்துக் கொண்டிருக்கிறோம். வேறு வகையான ஆட்டங்களை எளிதில் கற்றுக் கொள்ளலாம். இதுவோ அத்தகையது அன்று. இந்த விச்சுளிப் பாய்ச்சலில் வல்லவர்களாக இரண்டு மூன்று குடும்பத்தினரே இருக்கிறார்கள். இந்தக் கலையும் காப்பாற்றப்பட வேண்டியது தானே?'' என்றான் அவன்.

"அந்தத் தொழிலை இவளுக்குக் கற்றுத் தருவானேன்?'' என்று கேட்டார் சடையனார்.

''எங்கள் குலத்தில் சோம்பேறியாக யாரும் இருக்கக்கூடாது. கணவன் கழைக்கூத்து ஆடினால் மனைவியும் ஆடவேண்டும்; இல்லையானால், முரசையாவது அடிக்க வேண்டும். பெரும்பாலும் கல்யாணம் ஆகிறவரைக்கும் பெண்கள் கம்பத்தின்மீது ஏறி ஆடுவார்கள். எங்களுக்குப் பொருள் வருவாய் தரும் தொழில் இது. நாங்கள் பிச்சை வாங்கவில்லையே!''

சடையனாருக்கு மேலே கேள்வி கேட்க விருப்பம் இல்லை. 'இந்த இளம் பெண் இப்படியெல்லாம் ஆடும்படி இருக்கிறதே!' என்ற இரக்கத்தால் அவர் கேட்டார். அது அவர்கள் குலத்தொழில் என்று தெரிந்துகொண்ட பிறகு அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஆனாலும் ஒரு பரிவு அவர் உள்ளத்தில் இருந்து வந்தது.

பேச்சுவாக்கில், "இவள் தமிழ் நூல்களையும் படித்திருக்கிறாள்'' என்றான் கழைக்கூத்தன்.

''அப்படியா! என்ன என்ன நூல்களைப் படித்தாள்? யாரிடம் பாடம் கேட்டாள்?'' என்று கேட்டார் வள்ளல்.

''எங்கள் ஊரில் ஒரு புலவர் இருக்கிறார். அவரிடம் சில காலமாகப் பாடம் கேட்டாள். கவியும் பாடுவாள். அந்தப் புலவர்கூட இவளைக் கழைக்கூத்தாட வேண்டாம் என்று சொன்னார். வெறும் கவி சோறு போடுமா?''

சடையனாருக்கு வியப்புக்கு மேல் வியப்பு உண்டாயிற்று. அந்தப் பெண்ணையே பார்த்து, "எங்கே, நீ பாடிய கவிகள் சிலவற்றைச் சொல்; பார்க்கலாம்" என்று கேட்டார்.

அவள் சில கவிகளைச் சொன்னாள். அது மட்டுமா? அயன்றைச் சடையனாரைப்பற்றியே ஒரு கவியை அப்பொழுது சொல்லிவிட்டாள்.

சடையனாருக்கு அவளிடத்தில் இப்போது மதிப்பு உண்டாயிற்று. அவர்களைச் சில நாள் அந்த ஊரிலே தங்கியிருக்கச் செய்தார். அவள் கழைக்கூத்தைப் பார்ப்பதைவிட அவளோடு பேசுவதிலும், அவள் கூறும் கவியைக் கேட்பதிலும் அவர் மிக்க மகிழ்ச்சியை அடைந்தார். அவளுக்குப் பின்னும் பரிசுகளை அளித்து விடை கொடுத்தனுப்பினார். "அடிக்கடி இங்கே வந்து கொண்டிருங்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

அது முதல் அயன்றைச் சடையனாருடைய ஆதரவு அந்தப் பெண்ணுக்கு உண்டாயிற்று. ஒரு விதமான பாசம் அவள்பால் அமைந்ததென்றே சொல்லலாம். ஊர் ஊராகச் சுற்றி, நாடு நாடாக அலைந்தாலும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை மகளும் தந்தையும் அயனம்பாக்கம் போகாமல் இருக்க மாட்டார்கள்.

இந்த அன்பினால்தான் அந்தப் பெண், தான் இறக்கும்படி ஆகிவிட்டால் சடையனார் வருந்துவாரே என்று எண்ணினாள். அவள் துயர உணர்ச்சி கவியாக வெடித்தது.

*மாகுன் றனையபொற் றோளான்*
*வாழுதிமன் வான்கரும்பின்*
*பாகென்ற சொல்லியைப் பார்த்தென்னைப்*
*பார்த்திலன்; பையப்பையப்*

*போகின்ற புள்ளினங் காள்,புழற்*
*கோட்டம் புகுவதுண்டேல்*
*சாகின் றனள்என்று சொல்லீர்*
*அயன்றைச் சடையனுக்கே*

என்று பாடினுள். 'பெரிய குன்றைப் போன்ற பொலிவு பெற்ற தோளுடையானுகிய பாண்டிய அரசன், பெரு மையையுடைய கரும்புப்பாகு என்று உவமை கூறும் சொல்லையுடைய தன் தேவியைப் பார்த்ததனுல் விச் சுளிப் பாய்ச்சல் பாய்ந்த என்னைப் பார்க்கவில்லை. மெல்ல மெல்லப் பறந்து போகின்ற பறவைக் கூட்டங் களே, நீங்கள் புழற்கோட்டம் போவதாக இருந்தால் அயனம் பாக்கத்தில் உள்ள சடையனுக்கு (உனக்கு வேண்டிய இன்னுள் பாண்டியன் கட்டளையினுல்) சாகின்ருள் என்ற செய்தியைச் சொல்லுங்கள்' என்ற பொருள் உடையது அது.

★

பாட்டை மீட்டும் கேட்ட பாண்டியன் அயன்றைச் சடையனுரைப்பற்றி விசாரித்தான். அவ்வள்ளல் புலவர் கள் எதைக் கேட்டாலும் தருபவர் என்பதை அவர்கள் வாயிலாக உணர்ந்து கொண்டான். கழைக்கூத்திக்குப் பரிசுகளை அளித்து அனுப்பினுன். அவள் ஊரை விட்டுப் போனுலும் அவன் உள்ளத்தை விட்டுப் போக வில்லை. 'ஒரு கழைக்கூத்திக்கு இத்தனை புலமை இருக் கிறதே!' என்று எண்ணி எண்ணி வியந்தான். அவ ளுடைய உள்ளம் வாடும்படி தான் செய்த காரியத்தை நினைந்து நாணினுன். இத்தகைய கலைஞர்கள் உயிர் விடும்போதும் மறவாமல் நினைக்கும் வண்ணம் இருக்கும் செல்வரைப் பற்றிப் பின்னும் விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினுன்.

அரசனாக இராமல் இருந்தால் அவன் உடனே தொண்டை நாடு சென்று, அயனம்பாக்கத்தை அடைந்து, சடையனாரைப் பார்த்து அளவளாவி யிருப்பான். இப்போது, அவன் வேண்டுமானால் அவரை வருவிக்கலாம். ஆனால், முன் பழக்கம் இல்லாமல் நெடுந் தூரத்தில் தொண்டை நாட்டில் உள்ளவரை எப்படி அழைப்பது?

கடைசியில் அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'நம்முடைய அவைக்களப் புலவர்களைத் தொண்டை நாட்டுக்கு அனுப்பி, அவருடைய இயல்புகளைத் தெரிந்து கொண்டு வரச் செய்யலாம்' என்பதே அவன் நினைப்பு.

பாண்டியனும் தமிழ் ஆர்வமுடையவன்; தமிழ்ப் புலவன்; கவிஞன். ஆகவே, தமிழ் தெரிந்தவர்கள் என்ன தொழில் செய்தாலும் அளவற்ற அன்பு பாராட்டும் அயன்றைச் சடையனாரைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு எழுந்தது.

இரண்டு புலவர்களை அழைத்து, "நீங்கள் தொண்டை நாட்டில் புழற்கோட்டத்தில் உள்ள அயன்றைக்குச் சென்று அங்குள்ள வேளாண் செல்வராகிய சடையனாரைக் கண்டு அவர் இயல்பை அறிந்து வாருங்கள்" என்று கூறிப் பாண்டியன் அனுப்பினான். அப்படியே அவர்கள் புறப்பட்டார்கள். பாண்டி நாடும் சோழ நாடும் கடந்து தொண்டை நாட்டை அடைந்து புழற்கோட்டத்துக்கு வந்தார்கள்.

அயனம்பாக்கத்துக்குப் போய்ச் சடையனாரை அவர்கள் கண்டார்கள். பாண்டியனுடைய அன்பிலே ஊறிய அப் புலவர்களுக்கு ஒரு பைத்தியக்கார யோசனை தோன்றியது. 'யாரும் செய்வதற்கு மறுக்கும் காரியம் ஒன்றைச் செய்யும்படி நாம் கேட்டுக் கொள்வோம். புலவரின்

பொருட்டு எதையும் செய்வார் என்பது முழு உண்மையா, அல்லது அரைகுறை உண்மையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்' என்று எண்ணினார்கள்.

சடையனார் அந்தப் புலவர்களை வரவேற்று உபசரித்தார். விருந்து வழங்கினார். தமிழ் நூல்களின் நயங் குறித்துப் பேசி அளவளாவினார். புலவர்கள் தாம் அவரைப்பற்றிப் பாடியிருந்த கவிகளைச் சொன்னார்கள். சடையனார் அவற்றைக் கேட்டு மகிழ்ச்சி பெற்றார். இப்படி அளவளாவி வருகையில் புலவரில் ஒருவர் பேச்சினிடையே, "தங்களிடத்தில் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன்'' என்றார்.

''விண்ணப்பம் என்ற வார்த்தை வேண்டாம். தடையின்றி மனம் திறந்து சொல்லுங்கள்'' என்றார் வள்ளல்.

''ஒருகால் நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் என்னைப் பைத்தியம் என்று எண்ணினாலும் எண்ணலாம்; அல்லது சினம் கொண்டாலும் கொள்ளலாம்.''

''இப்படி எல்லாம் நீங்கள் நினைப்பதற்குக் காரணமே இல்லை. அறிவும் பண்பும் மிக்க புலவர்கள் தகாதது எதையும் சொல்ல மாட்டார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆதலால், நீங்கள் எதைக் கேட்டாலும் கொடுக்கிறேன்."

''நான் கேட்பது வாங்கிக் கொள்ளும் பொருள் அன்று. ஒரு விரதத்தால் நான் அவதியுறுகிறேன். அந்த விரதத்தை நிறைவேற்ற முடியாமல் அல்லற்படுகிறேன்.''

''என்ன விரதம் அது?''

''உணவு சம்பந்தமான விரதம் அது. சிலர் தரையை மெழுகி, அதன்மேல் சோறு வைத்துச் சாப்பிடுவார்கள். அது ஒருவகை விரதம். அது போன்றது இது.''

"நீங்கள் சுற்றிச் சுற்றிப் பேசாமல் தெளிவாக என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். அப்படியே செய்யலாம்."

"அந்த விரதம் ஏதோ ஒரு விசித்திரமான சந்தர்ப்பத்தில் தொடங்கியது. கர்ப்பமாக இருக்கும் ஒரு பெண்ணின் முதுகில் சோறு இட்டு, அதைச் சாப்பிடவேண்டும் என்பதே அந்த விரதம். இப்படிச் செய்வதாக வேண்டிக் கொண்டால் உன் நோய் தீரும் என்று ஒரு பெரியவர் சொன்னார். நான் வேண்டிக் கொண்டேன்; நோய் தீர்ந்தது. ஆனால், நான் வேண்டிக்கொண்டதை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறேன்" என்றார்.

சடையனார் மனைவி கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தியைப் புலவர் தெரிந்து கொண்டிருந்தார். அவ் விருவரும் வீட்டுக்குள் நுழையும்போதே அந்த அம்மாளைக் கண்டார்கள். அப்போதே இந்தப் புலவருக்கு, 'இவ்வாறு இவரைச் சோதனை செய்ய வேண்டும்' என்ற கருத்து உருவாகிவிட்டது.

சடையனார் சற்றே யோசித்தார். "இது தானா? நல்ல வேளை! உங்கள் விரதத்தை நிறைவேற்ற வேறு இடங்களுக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. என் மனைவி இப்போது கர்ப்பவதி. அவள் முதுகிலே நான் சோறிடுகிறேன்" என்று அவர் சொன்னபோது அவருக்கு நடுக்கம் ஏற்படவில்லை; கேட்ட புலவர் தாம் துணுக்குற்றார். 'உண்மையிலேயே சடையனார் ஒப்புக் கொள்கிறாரா?' என்ற ஐயம் அவருக்கு எழுந்தது.

"உங்கள் மனைவி எதற்கு? வேறு யாரேனும் இருந்தால் போதும்" என்றார் புலவர்.

"வேறு ஒருத்தியைத் தேடுவானேன்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா? எப்போது உங்கள் விரதம் நிறைவேற வேண்டும்?"

புலவர் சற்றே தயங்கினுர்.

"நீங்கள் இதுபற்றிச் சிறிதும் கவலைப்பட வேண்டாம். உங்கள் விரதத்தை நிறைவேற்றத் துணைசெய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்ததே என்று மகிழ்ச்சி அடைகிறேன். இப்போதே அதை நிறைவேற்றலாமே" என்று சடையனுர் கூறினுர்.

உடனே சூலி முதுகில் சோறிடுவதற்கு ஆவன செய்தார் சடையனுர். வயிறு நிரம்பிய பிள்ளைத் தாய்ச்சியான அவர் மனைவி குனிந்துகொண்டு நிற்க, அவள் முதுகில் சோற்றைப் பிசைந்து போட்டார்கள். புலவர் நின்றபடியே அதை உண்டார். அப்போதெல்லாம் அவர் நெஞ்சு அவரைச் சுட்டது. அதே சமயத்தில் வியப்புணர்ச்சி அவரை ஆட்கொண்டது.

அன்று மாலையே பாண்டி நாட்டுப் புலவர்கள் அயன்றைச் சடையனுரிடம் விடைபெற்றுக் கொண்டார்கள். அவரைப் பலபடியாகப் பாராட்டிவிட்டுச் சென்றுர்கள். அயன்றைச் சடையனுர் புலவருடைய விரதத்தை நிறைவேற்ற வேண்டி, கருவுற்றிருந்த தம் மனைவியின் முதுகில் சோறு இட்டு உண்ணச்செய்தார் என்ற செய்தி எங்கும் பரந்தது.

சோதனை செய்ய வந்த புலவர்கள் தம் ஊர் சென்று பாண்டியனை அணுகினர். தாம் செய்த சோதனையையும் சடையனுருடைய பேரன்பையும் கூறித் தம் வியப்பையும் புலப்படுத்தினுர்கள். "இவ்வளவு கடுஞ்சோதனையை நீங்கள் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உங்கள் சோதனையில் அவர் வென்றுவிட்டார். அவரை நான் பார்த்துப் பழகவேண்டும். இவ்வளவு உயர்ந்த குணம் இருப்பதனுல்தான் கழைக்கூத்தி அப்படிப் பாடினுள்" என்று அரசன் சொன்னுன்.

அவனுக்குச் சடையனார்பால் பெருமதிப்பு உண்டா யிற்று. தான் மன்னனாக இருந்தாலும் நல்லவர் இயல் பைச் சொல்வது நலம் என்று கருதி, அயன்றைச் சடை யனாரைப் பாராட்டி ஒரு பாடல் பாடினான். அந்தப் பாட்டைக் கேட்டால் ஒருகால் சடையனார் தன்னை நாடி வரலாம் என்பது அரசன் எண்ணம். 'நம்மை ஆதரிக்கும் உபகாரிகள் யார் இருக்கிறார்கள்?' என்று தேடும் புலவர் களையும், பிறரிடம் இரந்து வாழ்வு நடத்தும் ஏழைகளை யும் பார்த்து, "நீங்கள் பெரிய செல்வத்தை அடைய லாம். அயன்றைச் சடையனிடம் இருப்பது எதுவானா லும் கேளுங்கள். மற்ற இடங்களில் கிடைக்காததையும் கேளுங்கள். அவன் தந்து விடுவான்" என்று சொல்லும் வகையில் அந்தப் பாடல் அமைந்தது.

*இரவ லாளரே, பெருந்திரு உறுக!*
*அரவுமிழ் மணியும் அலைகடல் அமுதும்*
*சிங்கப் பாலும் திங்கட் குழவியும்*
*முதிரை வாலும் குதிரை மருப்பும்*
*ஆமை மயிரும் அன்னத்தின் பேடும்*
*ஈகென இரப்பினும் இல்லென அறியான்;*
*சடையனை அயன்றைத் தலைவனை*
*உடையது கேண்மின் உறுதிஆ ராய்ந்தே.*

*[பிறரிடம் பொருளைப் பெறும் இயல்புடையவர்களே, நீங்கள் பெரிய செல்வத்தை அடைவீர்களாக! நாகப்பாம்பு உமிழ்கின்ற மணியையும், அலைவீசுகின்ற கடலில் பிறந்த அமுதத்தையும், சிங்கத்தின் பாலையும், பிறைச் சந்திரனை யும், துவரையின் வாலையும், குதிரைக் கொம்பையும், ஆமை மயிரையும், பெண் அன்னத்தையும் கொடுப்பாயாக என்று கேட்டாலும், இல்லை என்று சொல்லத் தெரியாதவனாகிய சடையனை, அயன்றை என்னும் ஊரிலுள்ள செல்வனை*

உமக்கு நன்மை தரும் பொருள் இன்னது என்று யோசித்து அந்தப் பொருளைக் கேளுங்கள்.

இரவலாளர்-யாசகர். திரு-செல்வம். மூதிரை-துவரை. மருப்பு-கொம்பு. உறுதி ஆராய்ந்து அவ்வுறுதியுடையதைக் கேண்மின் என்று கூட்டிப் பொருள் செய்யவேண்டும்.]

இந்தப் பாடல் புலவர்கள் வாயிலாகச் சென்று அயன்றைச் சடையனார் காதில் விழுந்தது. அதைக் கேட்டுப் பாண்டியனுடைய ஆர்வத்தை அவர் உணர்ந்து கொண்டார். பின்பு ஒரு முறை அவர் பாண்டியனை வந்து கண்டு அளவளாவி இன்புற்றார். விச்சுளிப் பாய்ச்சலில் வல்ல கழைக் கூத்தியின் கூத்தும் கவியும் அரசனையும் கொடையாளரையும் நண்பர்கள் ஆக்கின.

# கவிஞனும் செழியனும்

## 1

புறக்கண் இல்லாமற் போனாலும் அகக்கண் ஒளி படைத்த பெரியோர்கள் பலர் உண்டு. புலவர்களிலும் கண் இழந்தவர் சிலர் இருந்தார்கள். கவி வீரராகவ முதலியார் என்பவர் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவர். பிறவியிலேயே கண் இழந்தவர். தொண்டை மண்டலத்தில் உள்ள உழலூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் வடுகநாத முதலியார் என்பவர்.

கண் இல்லாதவராயினும், இவருடைய அறிவு மிகவும் கூர்மையாக இருந்தது. தம்முடைய முதுகில் எழுதச் செய்து தமிழைக் கற்றார் என்று சொல்லுவார்கள். 'தன் நெஞ்சம் ஏடெனக் கற்றான் கவி முத்தமிழையுமே' என்று ஒரு புலவர், இவர் தமிழ் கற்ற சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்.

கம்பராமாயணம் முழுவதும் இவருக்கு மனனம் ஆயிற்று. 'இன்ன சொல் கம்பராமாயணத்தில் எங்கெங்கே வந்திருக்கிறது?' என்று கேட்டால், அது வந்த இடங்களை யெல்லாம் எடுத்து உரைப்பார். 'இன்ன உவமை எத்தனை இடங்களில் இருக்கிறது?' என்றால் அந்த இடங்களைச் சொல்லுவார். இவ்வாறு சொல்வதை அவதானம் என்பார்கள். கம்ப ராமாயண அவதானம் செய்வதில்சிறந்துவிளங்கியவீரராகவ முதலியாரைப் பார்த்துக் கண் உடையவர்கள் எல்லாம் வியந்து பாராட்டினார்கள். 'கண்ணினால் ஏட்டைப் படித்து மன

னம் செய்தவர்களும் இப்படிச் சொல்ல முடியாதே! இவருடைய நினைவாற்றல் எவ்வளவு சிறப்பாக இருக்கிறது!' என்று கொண்டாடினார்கள்.

கல்வி கேள்விகளிலே சிறந்து விளங்கியதோடு கவி பாடும் ஆற்றலும் இவருக்கு உண்டாயிற்று. கருத்தை அழகாகவும் தெளிவாகவும் சொல்லும் கவிகளைப் பாடினார். திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களை இயற்றினார்.

அக் காலத்தில் இலங்கையின் வட பகுதியைப் பரராச சிங்கம் என்னும் அரசன் ஆட்சி செய்து வந்தான். யாழ்ப்பாணத்தில் தமிழறிவில் சிறந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று, இவர் கடல் கடந்து இலங்கை சென்றார். பரராச சிங்கத்துக்கு முன் கம்பராமாயண அவதானம் செய்து காட்டி அவ்வரசனையும், அங்கிருந்த புலவர் பெருமக்களையும், பிறரையும் வியப்பில் ஆழ்த்தினர்.

அரசன் இவருடைய இணையற்ற புலமைத் திறத்தைப் பாராட்டிப் பல பரிசுகளை ஈந்தான். ஒரு யானைக் குட்டியையும் சில ஊர்ப் பகுதிகளையும் வழங்கினான். 'யானைக் கன்றும் வளநாடும் புலவர் பெற்றார்' என்று சொல்லுவார்கள்.

★

அக் காலத்தில் சின்னச் சேலத்தில் செழியதரையன் என்ற ஒருவன் இருந்தான். மழையில்லாமல் அங்கே தண்ணீர்ப் பஞ்சம் உண்டாயிற்று. விளைவு குறைந்தால் பிற இடங்களிலிருந்து நெல்லும் அரிசியும் வருவித்து உண்ணலாம். குளிக்காமல் இருந்து சில நாட்கள் பொழுது போக்கலாம். ஆனால், தண்ணீர் குடியாமல் ஒரு வேளையாவது இருக்க முடியுமா? ஊரில்

இருந்த கிணறுகள் யாவும் வற்றி விட்டன. பக்கத்தில் இருந்த ஏரிகள் வற்றின. இந்த நிலையில் மக்களும் விலங்குகளும் நீர்வேட்கையால் துன்புறும்படி ஆகி விட்டது. மாடுகள் இறந்தன. ஆடுகள் அழிந்தன. மக்கள் கூட்டம் கூட்டமாக ஊரை விட்டுப் புறப்பட்டனர். எங்கே பார்த்தாலும் மயானம் போன்ற காட்சி. பாலைவனமாகி விட்டது அந்தப் பகுதி முழுவதும்.

அப்போது மக்களின் துன்பத்தைக் கண்ட செழிய தரையன், அதனைத் தீர்க்க வழி என்னவென்று ஆராய்ந்தான். மழை பெய்தாலன்றி நீர்வளம் உண்டாகாது. மழை நாம் விரும்பியபோது பெய்யாதே! கீழ் நீரைக் கிணற்றின் வழியே இறைத்துப் பயன் படுத்தலாம். கிணறுகள் யாவும் வற்றிக் கிடந்தன. ஊரை விட்டுச் செல்லும் மக்களைத் தடுத்து நிறுத்தவும் அவர்கள் தாகத்தைத் தீர்க்கவும் ஒரு வழி அவனுக்குத் தோன்றியது. காசைக் காசென்று பார்த்தால் ஒரு வருக்கும் பயன் இல்லை என்று தேர்ந்தான். நான்கு இடங்களில் பெரிய கிணறுகளை நீர்சுரக்குமளவும் தோண்டும் முயற்சியை மேற்கொண்டான். பாதாள உலகம் வரையில் வெட்ட வேண்டியிருந்தாலும் விடுவதில்லை என்று துணிந்தான். பாறையை மருந்து வைத்து உடைத்து, நிலத்தைத் தோண்டத் திட்டம் இட்டான். இந்தத் தொழிலில் வல்லவர்களை அழைத்து வேலை செய்யச் செய்தான். மற்றவர்களுக்கும் மண்ணை எடுத்துப் போடுவது, கல் தச்சர்களுக்கு வேண்டிய ஏவலைச் செய்வது முதலிய வேலைகளை அளித்தான்.

சோழநாட்டிலிருந்து வண்டி வண்டியாக நெல்லை வருவித்தான். கொங்கு நாட்டில் ஒரு சிறிய பகுதியில் காவிரியாறு ஓடுகிறது. அப்போதைக்கு நீர் வேண்டும் அல்லவா? அதற்காகக் கொங்கு நாட்டு மோகனூரில்

காவிரியாற்றிலிருந்து பெரிய பெரிய ஆலைக் கொப்பரைகளை வண்டியில் வைத்து, அதில் நீரைச் சேமித்துக் கொண்டு வரச் செய்தான். இத்தகைய வேலைகளுக்குக் கணக்கு இல்லாத பொருள் செலவாயிற்று. ஆனாலும் பல மக்கள் சாவாமலும் ஊரைவிட்டுக் குடி போகாமலும் இருக்கும்படி செய்தன, அவ்வள்ளலின் செயல்கள். தாகமுடைய மக்கள் காவிரி நீரால் தாகம் தீர்ந்தனர்.

கிணறுகள் வெட்ட வெட்டப் பாறையும் மண்ணும் வந்தனவேயன்றி, நீரைக் காணவில்லை. எவ்வளவு உழைப்பு வேண்டியிருந்தாலும் எத்தனை நாளானாலும் கீழ் நீரைக் கண்ட பிறகுதான் மறு காரியம் பார்ப்பதென்ற துணிவு அவனுக்கு. வேலை நடக்கும் இடத்தில் உலாவினான் செழியதரையன்.

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற பழமொழி பொய்யாகுமா? கடைசியில் தண்ணீர் தலை காட்டியது. சில இடங்களில் வேகமான ஊற்றே கிட்டியது. கிணற்றில் தண்ணீரைக் கண்ட மக்களின் கண்கள் உவகையால் நீரைச் சொரிந்தன. மக்கள் தாகம் தீர்ந்தனர். அது முதல் செழியதரையனுக்குத் தாகம் தீர்த்த செழியதரையன் என்ற பெயர் வழங்கலாயிற்று.

★

தாகம் தீர்த்த செழியனுடைய புகழ் பிற மண்டலங்களையும் எட்டியது. வள்ளல்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடும் புலவர்கள் அவனை அடைந்து பாடினர். அந்தகக் கவியாகிய வீரராகவ முதலியாரும் அவனை நாடிச் சென்றார். அவனைக் கண்டு அளவளாவிப் பல பாடல்களைப் பாடினார். பல பரிசில்களைப் பெற்றார். அவனிடம் விடை பெற்றுக் கொண்டபோது புலவர் பிரிவாற்றாமல் வருந்தினார். அப்போது அவ் வள்ளல், "உங்கள் தமிழை நான் ஒருவனே நுகர்வதென்பது

முறையன்று. நாடு முழுவதும் உங்கள் திறமையை அறியவேண்டும். உங்களால் இன்புறவேண்டும். ஆகையால் பல இடங்களுக்கும் நீங்கள் போய் வரவேண்டியது அவசியம். ஆனாலும், சேலத்தையும் என்னையும் மறக்க வேண்டாம். எப்போது வந்தாலும் உங்களுக்கு ஏவல் செய்ய நான் காத்திருக்கிறேன். என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்; தருகிறேன். நீங்களே வர வேண்டும் என்பது இல்லை. காக்கையின் காலில் ஒரு சீட்டு எழுதி விடுங்கள். வேண்டியதை அனுப்புகிறேன்'' என்று சொல்லி அனுப்பினான்.

கவிஞர் பல இடங்களுக்குச் சென்று புகழ் பெற்றார். அங்கங்கே உள்ள உபகாரிகளை நாடிச் செல்லும்போது கால் நடையாகவே சென்றார். சில இடங்களில் வண்டியில் சென்றார். இவருக்குத் துணையாக ஒரு மாணாக்கன் எப்போதும் இருந்து வந்தான்.

''இப்படி நீங்கள் அலைகிறீர்களே; ஒரு வண்டியோ குதிரையோ உங்களுக்கென்று சொந்தமாக இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்!'' என்று ஓர் அன்பர் இவரிடம் சொன்னார். இவருக்கு அது நல்ல யோசனை, யாகப் பட்டது. வண்டி வைத்துக் கொள்வதைவிடப் பெரிய குதிரையாக இருந்தால் அதை ஓட்டுகிறவன் ஒருவனும் தாமும் ஏறிச்செல்லலாம் என்று எண்ணினார். வேண்டுமானால் வண்டியிலும் பூட்டிக் கொள்ளலாம். குதிரை கிடைக்க வேண்டுமே!

அப்போது புலவருக்குச் சேலத்துச் செழிய தரையனுடைய நினைவு வந்தது. தம் கற்றுச் சொல்லியை அழைத்து, ஓலையில் எழுதச் சொல்லி ஒரு கவி சொன்னார். 'எனக்குக் குதிரை வேண்டும்' என்று அக் கவியில் குறிப்பிட்டார். அந்தச் சீட்டுக்கவியின் முதலில் தம் பெருமையைச் சொன்னார். சீட்டுக் கவிகளில்

புலவர்கள் தம்முடைய பெருமைகளைச் சொல்லிக் கொள்வது தவருகாது.

*ஏடா யிரங்கோடி எழுதாது தன்மனத்*
*தெழுதிப் படித்த விரகன்*
*எதுசொலினும் அதுவே எனச் சொலும் கவிவீர*
*ராகவன் விடுக்கும் ஓலை.*

பிறகு செழியனுடைய புகழைச் சொன்ஞர். அவன் ஆதிசேஷனும் சிரமசைக்கும் கலைஞன் என்றும், கங்கா குலமாகிய வேளாளர் குலத்தில் உதித்தவன் என்றும், தாகம் தீர்த்தவன் என்றும் பாடிஞர்.

*சேடாதி பன்சிரம் அசைக்கும் கலாகரன்*
*திரிபதகை குலசேகரன்*
*தென்பாலை சேலம் செனித்ததா கந்தீர்த்த*
*செழியன்எதிர் கொண்டு காண்க.*

*[சேடாதிபன் - ஆதிசேஷன். திரிபதகை - கங்கை. தென் பாலை - நீர் இல்லாமல் பாலையாகிப் போன இடம்.]*

பிறகு தமக்குக் குதிரை வேண்டுமென்பதைச் சமற்காரமாகத் தெரிவித்தார். குதிரைக்கு நிகண்டில் எத்தனை பேர் உண்டோ, அத்தனையையும் அடுக்கிஞர். அந்தச் சொற்களுக்கு வேறு பொருள் இருந்தாலும் அவை அல்ல என்று கூறி, குதிரை என்பதைக் குறிப்பித்தார். கந்தருவம் என்பதற்கு இசையென்றும் குதிரையென்றும் பொருள் உண்டு. குதிரை என்பதைத் தெளிவாக்க, 'பாடாத கந்தருவம்' என்ருர். இப்படியே பந்து அன்று என்று தெரிவிக்க, 'எறியாத கந்துகம்' என்ருர். மூலையாகிய கோணம் அன்று, குதிரை என்று காட்ட, 'பத்தி கோணுத கோணம்' என்ருர். இப்படியே பறக்கும் கொக்கை விலக்கி, 'பறவாத கொக்கு' என்றும், கோடைக் காலத்தை விலக்கி, 'அனற்பண்ணுத கோடை'

என்றும், வேலை விலக்கி, 'படையாய்த் தொடாத குந்தம்' என்றும், பாதிரிப்பூவை விலக்கி, 'சூடாத பாடலம்' என்றும், மாமரத்தை விலக்கி, 'பூவாத மா' என்றும், சடையை விலக்கி, 'தொடுத்துமுடியாத சடிலம்' என்றும், கிளியை விலக்கி, 'சொன்ன சொற் சொல்லாத கிள்ளை' என்றும் கூறினர். இப்படிப் பத்துச் சொற்க ளால் குதிரையைக் குறித்து, 'அதனை எனக்கு அனுப்ப வேண்டும்' என்று பாடினர்.

*பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,*
*பத்திகோ ணாத கோணம்,*
*பறவாத கொக்கு, அனற் பண்ணாத கோடை,வெம்*
*படையாய்த் தொடாத குந்தம்,*
*சூடாத பாடலம்,பூவாத மாவொடு,*
*தொடுத்துமுடி யாத சடிலம்.*
*சொன்னசொல் சொல்லாத கிள்ளையென் றெங்கும்*
*துதிக்கவர விடவேண்டுமே.*

சீட்டுக்கவி தாகம் தீர்த்த செழியனுக்குப் போயிற்று. அவன் உடனே குதிரை ஒன்றை அனுப்பினான். அந்தக் குதிரையின் மீது ஏறிக் கவிஞர் வீரராகவர் சேலத்துக்கே வந்தார். அவரைக் கண்டவுடன், "நீங்கள் எங்கோ போகவேண்டுமென்றல்லவா குதிரை கேட்டனுப்பினீர்கள்? இங்கே வரத்தானா? என் பாக்கியமே பாக்கியம்!" என்றான் செழியன் மகிழ்ச்சி யுடன்.

"எத்தனை தரம் இங்கே வந்தாலும் எனக்குச் சலிப்பு இல்லை. உங்களுக்குத்தான் தொல்லை."

"தொல்லையா? தமிழ் அமுதம் தெவிட்டுமா? எத்தனை முறை வந்தாலும் எனக்கு இன்பந்தான்."

"யார் கொடுக்கிறார்களோ, அவர்களிடந்தான் அடிக்கடி புலவர்கள் போவார்கள். காய்த்துப் பழுத்த

மரத்தில்தான் திரும்பத் திரும்பக் கல்லை எறிவார்கள். எங்கே தண்ணீர் கிடைக்கிறதோ அந்த இடத்தில் தான் தோண்டுவார்கள். பசுமாடு கறக்குமானால் எப்படியாவது அதன் பாலைப் பெறுவதற்காக அதன் காலையும் கட்டிப் போடுவார்கள். பெரிய உப்புக் கடலை யார் மதிக்கிறார்கள்? பாற்கடலைத்தான் மத்திட்டுக் குழப்பு வார்கள். பழம் தருவதென்று மரத்தைக் கல்லால் எறியக் கூடாதென்று யார் சும்மா இருக்கிறார்கள்? அவ்வண்ணமே கொடுக்கும் உபகாரியை வருத்தியாவது மீட்டும் வேண்டியதைக் கொள்ளத் துணிவது உலகத்து இயல்பு. புலவர்களுக்கோ அதைத் தவிர வேறு வழி இல்லை'' என்று அந்தக் கவிஞர் சொல்லி மகிழ்வித்தார். அதனோடு நில்லாமல் அந்தக் கருத்தை ஒரு பாடலாகவே பாடிவிட்டார்.

*சாலப் பழுத்த மரம்பார்த்து*
*எறிவர்;தண் ணீர்சுரக்கும்*
*ஞாலத்து அகழ்வர்; கறக்கின்ற*
*ஆவைநற் கால்தளைவர்;*
*நீலக் கடல்விட்டுப் பாலாழி*
*மத்திட்டு நிற்பர் என்னீர்,*
*சேலத்து வேந்தன் அகத்தாகம்*
*தீர்த்த செழியனுக்கே.*

*[ஞாலத்து - நிலத்தில். தளைவர் – கட்டுவர். நீலக் கடல் - உப்புக் கடல். என்னீர் - என்று சொல்லுங்கள்.]*

வேறு ஒருவரைப் பார்த்து, "நான் அடிக்கடி வரு கிறேன் என்று நினைக்க வேண்டாம். எங்களுக்குப் போக்கிடம் எங்கே?" என்ற கருத்தோடு சொல்லுவதாக அமைந்தது பாட்டு.

புலவர், செழியனுடைய தமிழ்த் தாகத்தைத் தீர்த் தார். அவன் பல பரிசில்களை வழங்கினான்.

# அற்புதக் கொடை

தொண்டை மண்டலத்தில் ஓர் ஊரில் வல்லாளர் என்ற செல்வர் வாழ்ந்திருந்தார். அவர் வாழ்ந்திருந்த ஊர் இன்னதென்று தெரியவில்லை.

அவர் செல்வத்தைப் பயன்படுத்தும் வகை தெரிந்தவர். வறியவர்களுக்கு அளிக்கும் வண்மை உடையவர்.

ஒரு வகையில் புலவர்களும் வறியவர்களாகவே வாழ்க்கையை நடத்தினர். வறியவர்களுக்குப் பொருள் கிடைப்பதில்லை. புலவர்களுக்கோ கிடைத்தும் கையில் நிற்பதில்லை. இதுதான் வேறுபாடு.

அவ்வப்போது கிடைக்கும் பொருளை உற்றருக்கும் உறவினருக்கும் வாரி வீசி விடுவார்கள் புலவர்கள். ஒரு வகையில் அவர்கள் துறவிகளாகவும், மற்றொரு வகையில் வள்ளல்களாகவும் இருந்தனர். 'நாளைக்கு வேண்டுமே!' என்ற கவலை இல்லாமல் கையில் உள்ளதை வீச வேண்டுமானால் துறவிகளைப் போன்ற மனப்பான்மை அவர்களிடம் இருக்க வேண்டும். அப்படியே வறியவர்களைக் கண்டால், உள்ளதை இரங்கி ஈயும் பான்மை வள்ளல்களுக்குரியது மாத்திரம் அன்று; புலவர்களிடமும் அந்தப் பொற்பு இருந்தது. அதனால்தான், புலவர்கள் எப்போதும் வறியவர்களாக, நித்திய தரித்திரர்களாக வாழ்ந்தனர் போலும்.

தொண்டை நாட்டு வள்ளலாகிய வல்லாளர் தம்முடைய ஆற்றலுக்கு ஏற்ற வகையில் வறியவர்

களைப் பாதுகாத்தார்; புலவர்களைப் போற்றினர். எந்தச் சமயத்தில் எது இருந்தாலும் புலவர் கேட்டால் கொடுத்து விடுபவர் என்ற புகழை அவர் பெற்ருர். அந்த இயல்பைப் புலவர்களே பாராட்டி வியந்தார்கள்.

ஒரு சமயம், தொண்டை நாட்டுப் புலவர் ஒருவர் வேற்று நாட்டுக்குப் போயிருந்தார். அங்கே ஒரு புலவரைச் சந்தித்தார். புலவர்களைப் பற்றியும் புரவலர்களைப் பற்றியும் தங்கள் தங்கள் அநுபவத்தில் உணர்ந்தவற்றைப் பேசிக் கொண்டிருந்தார்கள். அயல் நாட்டுப் புலவர் தாம் கண்ட ஈகையாளர்களின் பெருமையையும், அவர்கள் ஈகைப் பான்மையை நன்கு எடுத்துக் காட்டும் சில நிகழ்ச்சிகளையும் எடுத்துச் சொன்னர். தொண்டை நாட்டுப் புலவரும் தாம் அறிந்த கொடையாளரைப் பற்றிப் பேசினர். இடையே வல்லாளருடைய இயல்பையும் சொன்னர். "அவரைக் காட்டிலும் மிகுதியான செல்வம் படைத்தவர்கள் பலர் உலகில் இருக்கலாம். தம்பால் வரும் புலவர்களுக்கு விலை உயர்ந்த பொருள்களைக் கொடுத்துப் புகழ் பெறுபவர்கள் பலர் இருக்கிருர்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனல், வல்லாளருடைய இயல்பு தனிச் சிறப்புடையது. அவர் எங்கே இருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், யாரேனும் வந்து இரந்தால், கையில் அப்போதைக்கு எது இருந்தாலும் உடனே கொடுத்து விடுவார். எங்கேனும் வெயிலில் குடை பிடித்துக்கொண்டு போவார். இடையே புலவனே வறியவனே வந்து கையை நீட்டினல், அந்தக் குடையை அவன் கையில் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்."

"வீட்டுக்கு வாருங்கள், தருகிறேன் என்று சொல்லமாட்டாரா?"

"அதுவும் சொல்லுவார். ஆனல், கண்ட உடனே இருப்பதைக் கொடுப்பதில் அவருக்குத் திருப்தி

அதிகம். வீட்டிற்குப் போவதற்குள் மனம் மாறினால் என் செய்வது என்று எண்ணுவார் போலும்! எத்தனையோ சமயங்களில் நடுவழியில் கண்ட புலவனுக்குக் காதுக் கடுக்கனைக் கழற்றிக் கொடுத்திருக்கிறார்; இடுப்பு அரைஞாணை எடுத்து வழங்கியிருக்கிறார்."

"அப்படியானால் அந்த வள்ளலை அவசியம் பார்த்து அளவளாவ வேண்டும். நீங்கள் என்னை அவரிடம் அழைத்துச் செல்வீர்களா?"

"அதற்கு அவசியமே இல்லை. உங்களிடம் தமிழ் இருக்கிறது. அதுவே உங்களை அழைத்துச் செல்லுமே! நான் வந்து உங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதில்லையே! அவருடைய இயல்பை உள்ளபடி உணரவேண்டுமானால், நீங்கள் தனியாகச் சென்று அவரைக் காண்பதுதான் நல்லது. நான் அவருக்குத் தெரிந்தவனாகையால், எனக்காக உங்களை வரவேற்றுப் பரிசளித்தார் என்று நீங்கள் ஒருகால் கருதவும் கூடும். அந்தக் கருத்துக்கு இடம் இல்லாமல் நீங்கள் தனியே சென்று பாருங்கள். வீட்டில் இருக்கும்போதுதான் பார்க்க வேண்டும் என்பதில்லை. எங்கேயாவது வழி மறித்துச் சோதனை போடுங்கள்."

"நான் என்ன வழிப்பறிக்காரனா?"

"இல்லை, இல்லை; எங்கேனும் சென்று கொண்டிருக்கும்போது அவரைச் சந்தித்துப் பாருங்கள் என்று சொல்ல வந்தேன். அப்போது நான் கூறியவை எவ்வளவு உண்மை என்று தெரிய வரும்" என்றார் தொண்டை நாட்டுப் புலவர்.

அயல் நாட்டுப் புலவர் வல்லாளரைச் சென்று காண்பதென்று தீர்மானித்துக் கொண்டார். அவர் இருக்கும் ஊருக்குச் செல்லும் வழியைத் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

ஒரு நாள் புலவர் தொண்டை நாட்டுக்குப் புறப்பட்டார். அந்த நாட்டுப் புலவர் சொன்னதெல்லாம் அவருக்கு நினைவுக்கு வந்தன. வல்லாளரை மிகவும் சங்கடமான நிலையில் வைத்துச் சோதனை பார்த்து விட வேண்டும் என்ற பைத்தியக்கார எண்ணம் அவருக்குத் தோன்றியது. வள்ளல் வாழும் ஊருக்குச் சென்றார். அவர் தம் வீட்டில் தங்கியிருக்கும்போது பார்க்கக்கூடாது என்பது புலவர் கருத்து. அவர் எங்கேனும் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கும்போது நடுவழியில் மறிக்க வேண்டும் என்று எண்ணியவராதலின், அதற்கு ஏற்ற செவ்வியைப் பார்த்துக் கொண்டு, ஒருவர் வீட்டில் தங்கினார்.

ஒரு நாள் வல்லாளர் எங்கோ புறப்படப் போகிறார் என்ற செய்தி புலவருக்குக் கிடைத்தது. கச்சியில் இருந்த மன்னன் அந்தச் செல்வரை அழைத்திருந்தான். அரசாங்கத்தில் ஏதேனும் மாறுபாடோ, சிறப்பு நிகழ்ச்சியோ நேருமானால், நாட்டில் உள்ள செல்வர்களையும் அதிகாரிகளையும் அழைத்து யோசிப்பது அந்த மன்னன் இயல்பு. இப்போதும் ஏதோ ஒன்றைப்பற்றி ஆலோசனை செய்வதற்காகவே வல்லாளரை அழைத்தான் மன்னவன்.

அந்தக் காலத்தில் மன்னனிடமிருந்து அழைப்பு வருவதானால் அதைப் பெறற்கரும் சிறப்பாக எண்ணுவார்கள் மக்கள். மன்னவனுக்கு இருந்த பெருமை கிடக்கட்டும்; அவனால் மதிக்கப்பெறும் மனிதர்களுக்கு, அவனை அடிக்கடி பார்த்துப் பழகும் உரிமை உடையவர்களுக்கு, இருந்த செல்வாக்குக்கே எல்லை இல்லை.

வல்லாளர் அரசனைப் பார்க்கப் புறப்பட்டார். அரசவைக்குச் செல்வோர் நல்ல ஆடை அணிகளை அணிந்து செல்வார்கள். அவ்வாறே அவர் இடை

யில் சிறந்த துகிலையும், மேலே சரிகைக் கரையிட்ட மேலாடையையும் புனைந்தார். காதில் நல்ல வைரக்கடுக் கன்களை அணிந்து கொண்டார். நல்ல தலைப்பாகை யையும் சிறந்த 'காலணியையும் அணிந்து புறப்பட்டார்.

வல்லாளரின் இயல்பை அறிந்து கொள்ளக் கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருந்த புலவருக்கு இந்தச் செய்தி தெரிந்தது. சோதனையில் தம் பங்கில் அதிக லாபம் இருக்கும் என்று ஊகித்து மகிழ்ந்தார். வல்லாளர் காஞ்சிக்கு எந்த வழியில் போவார் என்று தெரிந்துகொண்டார். அவர் வாழ்ந்த ஊர் காஞ்சிக்கு அருகிலேயே இருந்தமையால், கால் நடையாகவே மன்னனைக் காணப் புறப்பட்டார் அவர்.

இன்னவாறு செய்ய வேண்டும் என்று திட்ட மிட்டுக் கொண்டு புலவரும் புறப்பட்டார். வல்லாளர் புறப்படுவதை நிச்சயமாகத் தெரிந்துகொண்டு அவர் புறப்படுவதற்கு முன்பே அவர் போகும் வழியே சென்று இடையே ஓரிடத்தில் வள்ளலின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டு நின்றார்.

வல்லாளர் அன்று தனியேதான் போனார். அருகில் உள்ள ஊருக்குத் துணை எதற்கு என்று புறப்பட்டுச் சென்றார். வழியில் புலவர் அவரைக் கண்டார். கும்பிடு போட்டார். "தங்களைக் காண்பதற்காகத்தான் வந்து கொண்டிருக்கிறேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலத் தாங்கள் காட்சி அளிக்கிறீர்கள். என்னுடைய அவசரத்தில், இங்கேயே தங்களைக் கண்டு என் குறையை நிரப்பிக் கொண்டு போவது நல்லது தான்" என்றார்.

"நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் வல்லாளர்.

"நான் ஒரு புலவன். உங்கள் பெருமையைப் பல புலவர்களின் வாயிலாகக் கேட்டிருக்கிறேன். எனக்கு உங்கள் தயை வேண்டும்."

"நான் இப்போது அரசரைப் பார்க்கச் செல்கிறேன். நீங்கள் எங்கள் ஊர் சென்று என் வீட்டில் இருங்கள். நான் நாளைக்கே வந்து விடுவேன். வந்த பிறகு உங்களோடு அளவளாவி இன்புறுவேன். உங்களுக்கு வேண்டியதை அறிந்து என் ஆற்றலுக்கு இசைந்த வகையில் அந்தக் குறையைப் போக்க முயலுவேன்" என்று கூறினார் செல்வர்.

"எனக்கு மிகவும் விரைவாகப் போக வேண்டியிருக்கிறது. எப்படியும் நாளை மாலைக்குள் எங்கள் ஊரில் இருந்தால்தான் நான் நினைத்த காரியம் கைகூடும்" என்றார் புலவர்.

"அப்படியானால் நானே உங்களை என் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்."

"அதற்கு அவசியமே இல்லை. எனக்கு வேண்டிய பொருள்களை நீங்கள் மனம் வைத்தால் இங்கேயே கொடுக்கலாம். ஆனால், அப்படிச் செய்வதற்கு நீங்கள் துணியவேண்டுமே!"

"என்னிடம் இப்போது உள்ளதைக் கேட்டால் கொடுத்துவிடுகிறேன். என் கையில் இருப்பது சிறு தொகைதானே?"

"எனக்குப் பணம் வேண்டியதில்லை. பண்டம் வேண்டியதில்லை. எங்கள் வீட்டில் திருமணம் நடக்க வேண்டும். என் மகன் மாப்பிள்ளைக் கோலம் புனைய இருக்கிறான். அவனுக்கு ஆடை அணிகள் இல்லை. அவற்றை நாடியே புறப்பட்டேன்."

"அப்படியா? எங்கள் வீட்டுக்கு வந்தால் வேண்டியதைத் தருகிறேன்."

"அதற்கு நேரம் இல்லை. நீங்கள் எச்சமயத்தில் எது இருந்தாலும் கேட்பவர்களுக்குக் கொடுத்து விடு வீர்கள் என்று கேள்வியுற்றேன். அது உண்மை யானால் என் காரியம் இப்போதே நிறைவேற வசதி இருக்கிறது."

"நீங்கள் இன்ன கருத்துடன் பேசுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. என்னிடம் இருப் பதைக் கொடுக்க இப்போதும் ஆயத்தமாக இருக் கிறேன். இந்தாருங்கள். இந்தக் குடையை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அதை நீட்டினார் வல்லாளர். புலவர் அதை வாங்கிக்கொண்டார். "இந்தப் பாத ரட்சையைக்கூட நீங்கள் உபயோகப்படுத்திக்கொள் ளலாம்" என்று, செல்வர் அதைக் கழற்றினார். புலவர் அதையும் பெற்றுக் கொண்டார்.

"மறந்து விட்டேனே! இந்தக் கடுக்கன்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று அந்த வள்ளல் அவற்றையும் கழற்றிக் கொடுத்தார்; "போதுமா?" என்றார்.

"வெறும் அணிகள் போதுமா? ஆடை வேண் டாமா?" என்றார் புலவர்.

வள்ளல் சிறிதே யோசித்தார். ஏதோ தீர்மானத் துக்கு வந்தவர் போல மேலே அணிந்திருந்த ஆடை யையும் எடுத்துப் புலவர் கையில் கொடுத்தார். 'இவரை அனுப்பிவிட்டு, நாம் நம் வீடு சென்று மறுபடியும் ஆடையணி புனைந்து காஞ்சீபுரம் போகலாம்' என்று அவர் நினைத்துக்கொண்டார். அதனால், தம் இடையில் இருந்த ஆடை ஒன்றைத் தவிர மற்ற எல்லாவற்றையும் புலவருக்கு வழங்கி விட்டார். "போதும் அல்லவா?" என்று அவர் கேட்டார்.

புலவர் தயங்கித் தயங்கி நின்ருர். வள்ளல், "இன்னும் என்னிடம் உள்ளது யாதும் இல்லை. இருந்தால் கொடுப்பேன்" என்ருர்.

"உங்களிடம் இன்னும் கொடுக்க ஒன்று இருக்கிறது" என்று அந்தத் துணிவு மிக்க புலவர் கூறினர்.

வல்லாளர் இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொண்டார். செருகியிருந்த பணத்தை முன்பே கொடுத்து விட்டார். இப்போது அங்கே ஒன்றும் இல்லை. புலவர் எதைக் குறிக்கிருர் என்று அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை. "என்னிடம் இப்போது உங்களுக்குக் கொடுக்க என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

புலவர் அதை வாயால் கூறவில்லை. கையால் குறிப்பித்தார்; அவர் இடையில் அணிந்திருந்த ஆடையைச் சுட்டிக் காட்டினர். வள்ளலுக்கு வியப்போ கோபமோ உண்டாகவில்லை. புன்முறுவல் பூத்தார். சிறிது யோசித்தார். சுற்று முற்றும் பார்த்தார். இடையில் இருந்த ஆடையையும் அவிழ்த்து அளித்து விட்டுக் கோவணத்துடன் நின்ருர்.

புலவர் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு போய்விட்டார். கோவணத்துடன் நின்ற வள்ளல், வழியில் அவ்வாறு நிற்கக் கூடாது என்று கருதி மறைவிடம் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தார். நல்ல வேளையாக அருகில் ஒரு குளம் இருந்தது. அங்கே விரைந்து சென்ருர். குளத்துக்குள் இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டார்.

அங்கு இருந்தபடியே தம்மை அறிந்தவர் யாரேனும் அந்த வழியாக வருகிருர்களா என்று பார்த்துக் கொண்டே இருந்தார். புகழ்பெற்ற அவரை அறியாத மக்கள் அந்த வட்டாரத்தில் யார் இருக்கிருர்கள்? அந்த

வழியே சென்ற ஒருவர் குளத்தில் நின்று கொண்டிருந்த வள்ளலைப் பார்த்தார்.

"ஏன் இங்கே நிற்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"முதலில் உம்முடைய மேலாடையை இப்படி வீசும்" என்றார் வல்லாளர். அவர் அப்படியே செய்ய அதை உடுத்துக்கொண்டு கரையேறினார். அதற்குள் வேறு இருவர் வந்துவிட்டார்கள். அவர்கள் தம் மேலாடைகளை வழங்கினார்கள். "ஏன் இப்படி இருக்க வேண்டும்? யாரேனும் வழிப்பறி செய்தார்களா?" என்று கேட்டார்கள் அவர்கள். அவர் ஒருவாறு நிகழ்ந்ததை அறிவித்தார். புலவர்மேல் குற்றம் சாராதவாறு சமற்காரமாகத் தாமே வாக்களித்து அகப்பட்டுக்கொண்டதாகச் சொன்னார். அதைக் கேட்ட யாவரும் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

விரைவில் வீட்டிலிருந்து ஆடைகளை வருவித்து அணிந்துகொண்டு, வல்லாளர் காஞ்சிக்குப் புறப்பட்டார். அரசனைக் கண்டு உரையாடி யிருந்தார். மறுபடியும் ஊர் வந்து சேர்ந்தார்.

அங்கே அவருக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது; அவரிடம் கொடை பெற்ற புலவர் அங்கே ஒரு மூட்டையுடன் காத்துக்கொண்டிருந்தார். வள்ளல் தம் வீட்டை அடைந்தவுடன் புலவர் தம் கையிலிருந்த மூட்டையை அவர் முன் வைத்து நெடுஞ்சாண் கிடையாக அவர் காலில் விழுந்து எழுந்தார். அவர் கண்ணில் அருவி பாய்ந்தது. விம்மியபடியே பேசலானார்.

"தங்களைப் போன்ற கொடையாளியை நான் பார்த்ததே இல்லை. தங்கள் பெருமைகளைக் கேட்டறிந்த நான் தங்களைச் சோதிக்க வேண்டும் என்றே திட்டமிட்டு வழி மறித்து இந்தக் காரியத்தைச் செய்தேன். தாங்கள் சோதனையில் வெற்றி பெற்றீர்கள். நான் செய்தது

அறியாமை யானாலும், தங்கள் இணையற்ற வள்ளன்மையை உலகத்துக்கு வெளிப்படுத்த அந்த அறியாமை உதவியது. தாங்கள் வழங்கியவற்றை இதோ அப்படியே கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொண்டு என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறி அழுதார் புலவர்.

''புலவரே, நீங்கள் ஏன் இப்படி வருத்தப்பட வேண்டும்? உங்கள் முகமாக இறைவன் இந்தச் சோதனையைச் செய்தான். அவனே எனக்குத் துணை நின்று என் கொள்கையை நிலை நிறுத்தினான். ஒரு முறை அளித்ததை மீண்டும் பெறுவது தவறு. அப்போது என்னிடம் உள்ளவற்றையே நீங்கள் கேட்டு எனக்குப் பெருமை அளித்தது பற்றி உங்களிடம் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

புலவரும் வள்ளலும் ஒருவரை ஒருவர் பாராட்டி அளவளாவினர். புலவர் வள்ளலுடைய உபசாரத்தைப் பெற்றுச் சில காலம் தங்கி அவருடைய புகழைத் தமிழால் அளந்தார். வேறு பரிசில்களும் பெற்று விடை கொண்டு சென்றார்.

வல்லாளருடைய அற்புதக் கொடையைத் தமிழுலகம் முழுவதும் அறிந்து பாராட்டியது. தொண்டை மண்டல சதகம் இந்த நிகழ்ச்சியைப் பின் வரும் செய்யுளில் புலப்படுத்துகிறது.

> உளத்துத் தயைஅற்ற ஓர்புல
> வோனுக்கு உடைஉதவிக்
> குளத்துப் புனலை உடுத்துநின்
> றேபின்பு கூவி அவைக்
> களத்துப் புகுதக் கலைஉடுத்
> தேகரை ஏறிவந்த
> வளத்துப் புகழ்பெற்ற வல்லாள
> னும்தொண்டை மண்டலமே.

# திண்ணையில் கெண்டை

## 1

சோழ நாட்டில் புங்கனூர் என்னும் ஊரில் ஒரு வேளாண் செல்வர் இருந்தார். அவர் நல்ல வள்ளன்மை உடையவர். சுற்றத்தாரைப் பாதுகாக்கும் பெருந்தன்மை படைத்தவர். அவரிடம் மக்கள் யாவரும் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். அவருடைய இயற்கையான பெயரை யாரும் வெளிப்படையாகச் சொல்வதில்லை. புங்கனூர் கிழார் என்று சொல்லுவார்கள். புங்கனூர் வள்ளல் என்றும் கூறுவர். அவரை ஊரினால் சுட்டுவதையன்றிப் பேரினால் சுட்டுவதை மதிப்புக்குறைவாகக் கருதினார்கள், அக்காலத்து மக்கள். பெரியவர்களின் பேரைச் சுட்டாமல் ஊரை மாத்திரம் சொல்லுதல் அவர்களுடைய பெருமையைப் புலப்படுத்தும். 'ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே' என்ற பழமொழி இந்த வழக்கத்தை நினைப்பூட்டுகிறது.

புங்கனூர் கிழாருடைய புகழ் எங்கும் பரவியது. அவரை நாடிப் புலவரும் இரவலரும் வந்தார்கள். ஏற்றவர்களுக்கு இல்லை என்னாது ஈயும் இயல்பு அவரிடம் இருந்தது.

அவர் தம் மகனுக்குக் கல்யாணம் செய்ய எண்ணினார். நல்ல குலத்தில் பெண் பார்த்துத் திட்டம் செய்தார். தம் நிலைக்கு ஏற்ற வகையில் சிறப்பாகத் திருமணத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அவர் ஆவல்.

அவருக்குப் பல உறவினர்கள் இருந்தார்கள். நண்பர்களோ அவர்களைவிட அதிகம். அவர்களையெல்லாம் அழைத்து உபசரித்து மகிழவேண்டும். அன்றியும் ஏழைகளுக்கு வயிறு நிரம்பச் சோறு போடவேண்டும். பரதேசிகளுக்கு ஆடையும் உணவும் வழங்கவேண்டும். இப்படியெல்லாம் விரிவாகத் திட்டம் வகுத்தார்.

ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொருவரை நியமித்து, குறையே இல்லாதபடி யாவும் உரிய காலத்தில் உரிய முறைப்படி நடத்த வேண்டும் என்று ஒழுங்கு செய்தார். உணவைக் கவனிக்க ஒருவர்; வரவேற்க ஒருவர்; அலங்காரத்துக்கு ஒருவர்; உக்கிராணத்திற்கு ஒருவர். இவர்களுக்குப் பலர் துணையாக நின்று உதவி செய்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் இடத்தில் இப்படி முன்கூட்டியே ஒழுங்கு பண்ணுவிட்டால் பின்பு ஒரே குழப்பமாகி விடுமல்லவா?

கல்யாணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே நெருங்கிய உறவினர்கள் வந்துவிட்டார்கள். பத்து நாட்களுக்கு முன்பு சற்றுத் தூர பந்துக்கள் வந்தார்கள். நாளுக்கு நாள் கூட்டம் மிகுதியாயிற்று. அங்கங்கே பந்தல்கள், வரவேற்பு மண்டபம், ஆடல் பாடல் கொட்டகை என்று பல அமைப்புக்கள் நிர்மாணமாயின.

கல்யாணத்தன்று பார்த்தால், புங்கனூரே புதிய தோற்றம் அளித்தது; எங்கே பார்த்தாலும் தோரணங்கள், வாழைகள்; வீதி முழுவதும் கல்யாணத்துக்கு வந்த மக்கள்! இவ்வளவு பேருக்கும் சாப்பாடு போட்டு ஆக வேண்டுமே!

கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்யாண விருந்து நடக்க வேண்டும். எல்லாருக்கும் ஒரே சமயத்தில் விருந்து அளிப்பதென்பது இயலாத காரியம். ஆதலால், பந்தி பந்தியாக விருந்து நடந்துகொண்

டிருந்தது. யார் சாப்பிட்டார்கள், யார் சாப்பிடவில்லை என்று கண்டுபிடிக்க வகை இல்லை. அவரவர்கள் தாமே முயன்று சாப்பிட்டுவிட்டுப் போனால்தான்!

இந்தக் கூட்டத்தில் பல ஏழைகளுக்குச் சாப்பாடு கிடைக்கவில்லை; அங்கங்கே வீட்டுத் திண்ணைகளில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். சோர்வினால் சிலர் படுத்துவிட்டார்கள்.

அத்தகைய கூட்டத்தில் ஒரு புலவரும் இருந்தார். அவர் முதல் நாளே பட்டினி. அன்றாவது அந்தக் கல்யாணத்தில் வயிறு நிறைய உண்ணலாம் என்ற எண்ணத்தோடு வந்திருந்தார். வந்த இடத்திலும் எளிதில் உணவு கிடைக்குமென்று தோன்றவில்லை. என்ன செய்வார், பாவம்! பசி மிகுதியால் அவர் கெண்டைக் காலில் குரக்கு வலி உண்டாயிற்று. அது தாங்காமல் அவர் வருந்தினார். அந்த நிலையிலும் அவர் கற்பனை வேலை செய்தது. அவர் கவிஞரல்லவா? சொல் அலங்காரம் தோன்ற ஒரு கவியைப் பாடத் தொடங்கினார். பசியினால் பலர் துன்புறுவதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது அவர் கருத்து; ஆனால், அதை வெளிப்படையாகச் சொல்லாமல், மறைத்து வைத்து அலங்காரமாகச் சொன்னார்.

அந்தப் பாட்டில், முதலில் புங்கனூர் கிழாரைத் திருமாலுக்கு ஒப்பாகச் சொன்னார். அரசர்களையும் மிக்க செல்வம் உடையவர்களையும் நெடுமாலாகச் சொல்வது மரபு. இரு வகையினரும் திருவை உடையவர்கள் அல்லவா? இங்கே அவர் புங்கனூர் கிழாரைக் கண்ணபிரானாகப் பாடினார்.

கண்ணன் வெண்ணெயைத் திருடினான். அதைக் கண்டு கோபித்து, அவன் அன்னை மத்தால் அடித்தாள். அதனால் மேலே புண் உண்டாயிற்று. திருட்டுக்

கண்ணன் கையில் வெண்ணெய் இருக்கிறது. அதைப் பார்க்கிருன். உடனே அன்னையின் சிவந்த கண்களை ஓரக் கண்ணுலே பார்க்கிருன். பிறகு, தன் மேனியில் மத்தடியினுல் உண்டான காயத்தைப் பார்க்கிருன். வெண்ணெய் திருடிய கண்ணனுகிய திருமாலே புங்கனூர் கிழார் என்று பாடினுர், புலவர்.

*வெண்ணெயும் பார்த்தன்னை*
*கண்ணையும் பார்த்துத்தன் மெய்யிற்பட்ட*
*புண்ணையும் பார்த்த திருநெடு*
*மால்புங்க னூர்கிழவன்*

என்று பாடினுர். இதற்கு மேல் தாம் சொல்லத் துணிந்த பொருளை வைத்தார். அந்தப் பகுதி அந்தச் செல்வருடைய நீர்வளத்தையும் நில வளத்தையும் சொல்லி வியப்படைவதுபோல் அமைந்திருக்கிறது. 'இவருடைய வயலில் சேல் மீன்கள் துள்ளும்; குளங்களில் கயல்கள் பாயும்; இவை ஆச்சரியம் அன்று; திண்ணையிலும் கெண்டை மீன்கள் புரளும்' என்ற பொருள் தொனிக்கும்படி அமைந்தது அந்தப் பகுதி.

*புங்க னூர்கிழவன்*
*பண்ணையும் சேல்உக ளும்; தடம்*
*நீள்கயல் பாயும்; நெடுந்*
*திண்ணையும் கெண்டை புரட்டும்கல்*
*யாணத்தில் சென்றவர்க்கே.*

2

பாட்டை மேல் எழுந்த வாரியாகப் பார்த்தவர்களுக்கு ஏதோ ஓர் அற்புதத்தைக் கண்டு, 'அடடா! வயலிலும் குளத்திலும் மீன்கள் துள்ளுவதுபோல், வெறும் தரையாகிய திண்ணையிலும் கெண்டைமீன்கள்

புரளுகின்றனவே!' என்று சொன்னதுபோல் இருக்கும். ஆனால் இதில்தான் புலவர் தம் கருத்தைப் புதைத் திருக்கிறார்.

இந்தப் பாட்டுச் சோழ மண்டல சதகம் என்ற நூலில் உதாரணமாக வரும் செய்யுள். இதன் உட்கருத்து விளங்காமல், 'கெண்டை—சோமனில் கரையில் உள்ள கெண்டை' என்று ஒருவர் எழுதினார். நல்ல வேளை! 'உணவிலே உள்ள கெண்டை' என்று சைவத்துக்கு மாறுபாடாக எழுதாமற் போனாரே!

விருந்துணவு கிடைக்காமல் பசியினால் துன்புறு கின்ற கூட்டத்தில் புலவரும் ஒருவராக இருந்தார். தம் நிலையை வீட்டுக் காரருக்குத் தெரிவிக்க வழி என்ன என்று பார்த்து இந்தப் பாட்டைப் பாடினார்.

குரக்கு வலி உண்டாவதைக் கெண்டை புரட்டுதல் என்று சொல்வார்கள். பலவீனம் உடம்பில் இருந்தால் காலில் கெண்டை புரட்டும். பசியினாலும் கெண்டை புரட்டும்.

ஒருவன் ஓர் ஊருக்குப் போனான். அங்கே அவ னுக்கு இரண்டு உறவினர்கள் வேறு வேறு வீதிகளில் இருந்தார்கள். இரண்டு வீட்டுக்கும் சென்று பேசி யிருந்து, மறுநாள் ஊருக்குப் போகப் போவதாகச் சொல்லிவிட்டு, தான் வந்த காரியத்தைப் பார்க்கச் சென்றான். அதை முடித்துக்கொண்டு இரவில் ஒரு வீட்டுக்குப் போனான். அங்குள்ள உறவினர், அவன் மற்றோர் உறவினர் வீட்டில் உண்டிருக்கக்கூடும் என்று எண்ணி, அவனை உண்ண அழைக்கவில்லை. அழைக் காத வீட்டில் சோறு போடென்று சொல்வது முறை யல்லவே என்று எண்ணி, மற்றோர் உறவினர் வீட்டுக் குப் போனான். அவரும், அவன் முன்போன வீட்டில் சாப்பிட்டிருப்பான் என்று எண்ணினார். அவன்

போவதற்கு முன்பே எல்லாரும் உண்டு பாத்திரங்களை மூடிவைத்து விட்டார்கள்.

இப்படி இரண்டு வீட்டுக்கும் விருந்தாளியாகப் போகலாம் என்று எண்ணியவன், திட்டமாகச் சொல்லாமையால் இரவு பட்டினியிருந்தான். முன்பே மெலிவுள்ளவன் ஆகையால், இரவில் அவன் காலில் கெண்டை புரட்டியது. பசி தாங்காமல் இறந்துவிட்டானும். இந்தக் கதையைக் குறிக்க ஒரு பழமொழி உண்டு. 'இரண்டு வீட்டு விருந்தாளி கெண்டை புரட்டிச் செத்துப் போனன்' என்ற அப் பழமொழி இதைப் புலப்படுத்துகிறது.

பட்டினி கிடந்தால் கெண்டை புரட்டும் என்பதை இந்தப் பழமொழியால் தெரிந்து கொள்ளுகிறோம். தாங்கள் உண்ணுமல் பட்டினி கிடப்பதால், தங்களுக்குக் கால்களில் குரக்கு வலி இழுக்கிறது என்பதைக் குறிப்பித்து, 'திண்ணையும் கெண்டை புரட்டும் கல்யாணத்தில் சென்றவர்க்கே' என்று பாடினுர் புலவர்.

புலவர், புங்கனூர் கிழவன் என்று சொல்லி ஏதோ பாடியதைக் கேட்டவுடன் அங்கிருந்தவர்களுக்கு அவர் மேல் கவனம் சென்றது. அவரைச் செல்வரிடம் அழைத்துச் சென்றுர்கள். புலவர் அவரிடம் பாடலைச் சொன்னுரோ இல்லையோ, அவர் உடனே மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டார். அவருக்குப் பாட்டின் கருத்துத் தெளிவாகப் புலப்பட்டது. மானவுணர்ச்சி மீதூர்ந்தமையால் அவர் மூர்ச்சை போட்டு விழுந்தார். அருகில் இருந்தவர்கள் அவரைத் தெளியவைத்தார்கள். அவர் ஏவலின்படி, உடனே திண்ணையில் இருந்தவர்களுக்கெல்லாம் தனியே உணவு அளித்து உபசரித்தார்கள். புலவரும் விருந்துண்டதோடு நல்ல பரிசிலும் பெற்றுர்.

*வெண்ணெயும் பார்த்தன்னை கண்ணையும்*
*பார்த்துத்தன் மெய்யிற்பட்ட*
*புண்ணையும் பார்த்த திருநெடு*
*மால்புங்க னூர்கிழவன்*
*பண்ணையும் சேல்உக ளும்,தடம்*
*நீள்கயல் பாயும், நெடுந்*
*திண்ணையும் கெண்டை புரட்டும்,கல்*
*யாணத்தில் சென்றவர்க்கே*

என்ற பாட்டில், புலவர் புங்கனூர்ச் செல்வரைக் கண்ணனாகப் பாடினார். அவன் தன் மெய்யிற் பட்ட புண்ணைப் பார்த்தான். அந்தச் செல்வரைப் புகழுடம்பிலே பட்ட புண்ணைப் பார்க்கும்படியாக இந்தப் பாட்டுச் செய்துவிட்டது.

# ஒத்த மரபு

ஆந்திர நாட்டில் உள்ளது ஹம்பி என்னும் நகரம். விஜய நகர சாம்ராஜ்யத்தின் இராசதானியாக இருந்த ஊர் அது. அங்கே அரசனுடைய பிரதானியாக அறம் வளர்த்த முதலியார் என்னும் வேளாண் செல்வர் இருந்தார். அவர் தமிழ் நாட்டில் உள்ள செம்பூர் என்ற ஊரிலே பிறந்தவர். அவர் மதியிற் சிறந்தவராக இருந் தமையால் அரசன் அவரிடம் பெருமதிப்பு வைத் திருந்தான்.

அம்பி அறம் வளர்த்த முதலியார் தமிழ்ச்சுவை தேரும் இயல்பு உடையவர். தமிழ்ப் புலவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஆதரிக்கும் வள்ளன்மை உடையவர். அவர் தம் ஊருக்கு வரும்போது அக் காலத்தில் சிறிய பகுதியை ஆண்டுகொண்டிருந்த பாண்டிய மன்னனைக் கண்டு அளவளாவிச் செல்வார்.

பெருஞ் சிறப்புப் பெற்று வாழ்ந்த பாண்டியர்களுக் குப்பின் அவர் மரபில் பெயருக்குப் பாண்டிய மன்ன ைகச் சிறிய நாட்டுப் பகுதியை ஆண்டுவந்தான் அப் பாண்டியன். அவன் தமிழ்ப் புலமை மிக்கவன். நல்ல கவிஞன். அறம் வளர்த்த முதலியார் பேரரச னுடைய பிரதானியாக இருந்தமையால் அவருடைய நட்புத் தனக்குக் கிடைத்ததைப் பெரிய சிறப்பாகக் கருதினன் அவன். முதலியாரும் பாண்டியனுடன் மனம் கலந்து பழகி இன்புற்றார்.

சில நூல்களை இயற்றினன் பாண்டியன். அம்பி அறம் வளர்த்த முதலியாரைப் புகழ்ந்து ஒரு சிறிய நூல்

இயற்ற வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டா யிற்று. அவரிடம் சொல்லாமல் ஒரு கலம்பகம் பாடினான். அவருக்கு அந்தச் செய்தி தெரிந்தபோது, 'பிறரால் பாடல் பெறும் தகுதி உள்ள நீங்கள் என்னைப் பாடலாமா?" என்று தம் பணிவைக் காட்டிக்கொண்டார். நூல் சிறப்பாக அரங்கேற்றப்பெற்றது.

ஒரு நாள் பாண்டியன் தனக்கு வேண்டிய புலவர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தான். கலம்பகம் பாடியது கேட்டு அறம் வளர்த்த முதலியார் சொன்னதை அப் புலவரிடம் சொன்னான். அந்தப் புலவர் முதலியாரின் பணிவைப் பாராட்டவில்லை. "பார்த்தீர்களா? நான் அப்போதே நினைத்தேன்" என்றார்.

"என்ன நினைத்தீர்கள்?" என்று பாண்டியன் கேட்டான்.

"அவர் வேளாளர். நீங்கள் முடி மன்னர்களாகிய பாண்டிய மரபில் உதித்தவர்கள். அவர் உங்கள் குடி மக்களில் ஒருவராக இருக்கும் நிலையினர். அப்படி இருக்க நீங்கள் சாமானியப் புலவனைப்போல உங்கள் பெருமையைக் குறைத்துக்கொண்டு அவரைப் பாடலாமா? அது முறையன்றுதான்" என்றார் புலவர்.

அது கேட்ட பாண்டியன் புலவருடைய அறியாமைக்கு இரங்கினான்.

"சோழ அரசர்கள் முடிமன்னர்கள் அல்லவா?"

"ஆம்."

"கிள்ளி வளவன் என்ற சோழனைப்பற்றிக் கேள்வியுற்றதுண்டா?"

"புறநானூற்றில் அவனைப்பற்றிய செய்திகள் வருகின்றன."

"அவன் ஒரு வேளாளனைப் பாடியிருக்கிற பாடலைப் பார்த்தது உண்டோ? அதுவும் புறநானூற்றில்தான் இருக்கிறது."

"யாரைப் பாடினுன்?"

"சிறு குடி கிழான் பண்ணனைப் பாடியிருக்கிருன். யான் வாழும் வரைக்கும் பண்ணனும் வாழட்டும் என்று அந்த வேளாண் செல்வனைப் பாடியிருக்கிருன்."

புலவர் சற்றே யோசித்தார். பிறகு, "ஏதோ ஒரு பாட்டு, அரைப்பாட்டு அவசியமான சந்தர்ப்பத்தில் பாடியிருக்கலாம். ஆனுல் இப்படி ஒரு முழு நூலை யாரும் பாடியிருக்கமாட்டார்கள். நீங்கள் உங்களைக் குறைத்துக் கொண்டது மட்டும் அன்று; பாண்டிய மரபின் பெருமைக்கே இது இழுக்கு" என்று மிடுக்குடன் பேசி விட்டார். சோழனை உதாரணம் காட்டியதனுல் வந்த ரோசம் அப்படிப் பேசத் தூண்டியது.

பாண்டியன் சற்றே நிதானித்தான். புலவருடைய படபடப்பு அடங்கட்டும் என்று காத்திருந்தான். பிறகு மெல்லப் பேசத் தொடங்கினுன்.

"புலவரே, உங்கள் மனம் எனக்குத் தெரியும். எங்கள் மரபுகள் உயர்வு தாழ்வுடையவை, சமான மானவையல்ல என்று நினைக்கிறீர்கள்."

"நினைப்பது என்ன? யாருமே சொல்வார்களே!"

"நான் அப்படி நினைக்கவில்லை. எங்கள் மரபு ஒன்றற்கொன்று ஒத்து நிற்பவை."

"எப்படி?"

"சொல்கிறேன். பாண்டிய மரபு சந்திரகுலம் அல்லவா?"

"ஆம்."

"அறம் வளர்த்த முதலியார் வம்சம் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா?"

"வேளாண் குலம்."

"அவர்களுடைய குலத்துக்கு முதல் யார் என்று தெரியுமா?"

"அவர்களைக் கங்கா குலத்தினர் என்று சொல்வார்கள்."

"நாங்கள் திங்களின் வழிவந்தோர்; அவர்கள் கங்கை வழி வந்தோர். எங்கள் இருவர் மரபுக்கும் மூலமாக இருப்பவர்கள், ஒத்த நிலையில் உள்ளவர்கள். பரமேசுவரனே அவர்கள் சமானமானவர்கள் என்றுகருதித் தன்னுடைய சடைமுடியில் அவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறான். கங்கையும் திங்களும் இறைவன் திருமுடியில் அருகருகே சமானமாக விளங்குவதை யார் அறியமாட்டார்கள்? இறைவனே திங்களும் கங்கையும் ஒப்புடையவர்கள் என்று தலையாலே தாங்கிக் காட்டும்போது அவ்விருவர் மரபும் ஒப்புடையன, உறவுடையன என்று நாம் கொள்வது பிழையாகுமா? இது தெரிந்துதான் நான் பாடினேன்" என்று பாண்டியன் முடித்தபோது புலவர் வாய் அடைத்து நின்றார்.

பாண்டியன் தன் கருத்தை ஒரு பாட்டாகவே பாடி விட்டான்.

*உங்கள் மனம்தெரி யும்புல*
*வீர்!ஒரு சீர்மரபோம்;*
*திங்கள் மரபினம்; திங்களின்*
*கூடச்செம் பூர்அறமா*
*துங்கன் மரபினிற் கங்கையும்*
*சூடினன் சோதியன்றோ?*
*எங்கள் மரபொன் றெனக்கவி*
*பாடினம் யாம்அவற்கே.*

*[ஒரு சீர் மரபோம் - ஒரே சீருள்ள மரபினை உடையோம். திங்கள்-சந்திரன். அறமாதுங்கன்-அறம் வளர்த்த*

*முதலியார். மரபு-வம்சம். சோதி-சிவபெருமான். ஒன்று என-ஒரு தன்மையை உடையன என்று எண்ணி. அவற்கு-அந்த முதலியாரின்மேல்.]*

இன்ன காரணத்தால் தான் பாடியது முறையே என்று பாண்டியன் காரணங் காட்டி நிறுவிவிட்டான். ஆனால் அவன் பாடியதற்கு உண்மையான காரணம் அன்புதானே?

# அமைச்சர் முத்திருளப்பர்

## 1

இராமநாதபுரம் மன்னர்கள் சேதுவாகிய திரு வணைக்குக் காவலர்கள் ஆதலின் அவர்களைச் சேதுபதி என்றும், சேது காவலர் என்றும் சொல்வார்கள். இராம பிரானல் சேது காவலராக நியமிக்கப்பெற்ற மாவீர ருடைய மரபு என்று அம்மன்னர்களைச் சொல்வதுண்டு. அவர்கள் தமிழ்ப் புலவர் வாழ்வுக்கு வளமும் நாவுக்கு வீறும் ஏறச் செய்தவர்கள். சேதுபதி மன்னர்களிற் சிலர் புலமை உடையவராகவும் இருந்திருக்கிறார்கள். சேது சம்ஸ்தானத்தில் புலவர்களாக இருந்த பெரியோர் பலர்.

அந்த நாட்டில் அமைச்சராக இருந்து நற்செயல் பல புரிந்தும், அரசர்கள் பெயரை எங்கும் பரவச் செய்தும், வீரச் செயல் காட்டியும் புகழ்பெற்ற பெரு மக்கள் பலர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராமநாதபுர மன்னராக இருந்தவர் முத்து ராமலிங்க சேதுபதி என்பவர். அவருடைய மந்திரியாக இருந்தவர் முத்திருளப்ப பிள்ளை என்னும் மதியூகி. அவருடைய மதித் திறமையையும் கொடைத் தன்மை யையும் நற்செயல்களையும் புலவர்கள் பாராட்டிப் பாடி யிருக்கிறார்கள்.

★

ஒரு முறை ஒரு புலவர் முத்திருளப்ப பிள்ளைக்கு ஏதோ ஒரு பொருள் வேண்டுமென்று செய்யுளாக ஒரு

கடிதம் எழுதினார். அவ்வாறு எழுதும் கவிக்குச் சீட்டுக் கவி என்று பெயர்.

புலவர் சில நாள் தம்முடைய கடிதத்துக்கு விடை வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்தார். மறுபடியும் ஒரு பாடற் கடிதம் எழுதினார்.

'நான் எழுதிய கடிதம் தெளிவாக இல்லையா? பாடலாக அல்லவா எழுதியிருக்கிறேன்? படிக்கத் தெரியாமல் கிறுக்கி எழுதினேனா? உன்னைப் பாடும் பாவாணர் எழுத்திலே கிறுக்கு வர நியாயம் இல்லையே. உன்னால் அச்சுறுத்தப்பட்ட வேந்தருக்குத்தான் உன் ஆணைக்குப் பயந்து மதி மயக்கமாகிய கிறுக்கு வரும். உன் நாட்டில் திருடின கள்ளர்களுக்குக் கிறுக்கு வரும். நீதி தப்பித் தலைமறைவாக இருக்கின்ற பேர்களுக்குக் கிறுக்கு வரும். என் ஓலையிலே கிறுக்கு வராதே! அப்படி இருக்க நீ விடை எழுதாத காரணம் என்ன?' என்ற கருத்தை அமைத்து அதை எழுதினார்.

*உறுக்குமதி வேந்தருக்கும், கள்வருக்கும்,*
*நீதிதப்பி ஒளிக்கின் றோர்க்கும்*
*கிறுக்குவரச் செயுந்துரையே, பாவாணர்*
*ஓலையினும் கிறுக்குண் டாமோ?*
*பொறுக்கும்அர சுரிமைமுத்து ராமலிங்க*
*சேதுபதி பூமி எல்லாம்*
*நிறுக்குமதி மந்திரிமுத் திருளப்பா,*
*அருளப்பா நிருபந் தானே.*

'என் பாட்டிலே கிறுக்கு இல்லை; ஒருகால் உனக்குத் தலைக்கிறுக்கு இருக்கலாமோ என்னவோ? அது உன்னால் தண்டிக்கப்பட்டவர்களுக்கல்லவா வரவேண்டும்?' என்ற குறிப்பும் இதில் அடங்கியிருக்கிறது.

## 2

ஒரு முறை முத்திருளப்ப பிள்ளையிடம் சில ஏழைகள் வந்து தங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்றும், அதற்குப் பொருள் இல்லை யென்றும் முறையிட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய நிலை கண்டு அமைச்சர் மனம் இரங்கினார். 'நம்மிடம் துணிந்து வந்து தம் குறையைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் இவர்கள். இவர்களை அல்லாமல் இன்னும் எத்தனை ஏழைகள் தம்முடைய வறுமையை வெளியிலே சொல்லாமல் வாடுகிறார்களோ!' என்று எண்ணிப் பார்த்தார்.

உலகத்தில் ஏழைகளும் செல்வர்களும் அருகருகில் இருப்பது இயல்பாகப் போய்விட்டது. அதை மாற்றுவது அவ்வளவு எளிதன்று. ஆனால், பணம் இல்லாமையால் எத்தனை கன்னிப் பெண்கள் தமக்குரிய மணாளர்களோடு வாழ வகையில்லாமல் தத்தளிக்கிறார்கள்! இதை நினைக்கையில் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உறுதி உண்டாயிற்று. தம்முடைய நாட்டில் மணப் பருவத்தில் இருக்கும் பெண்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் ஆதரவில் தருமமாகக் கல்யாணம் செய்துவைத்துவிடலாம் என்று எண்ணினார். அது ஒருவாறு நடைபெறக்கூடிய காரியம் என்று நம்பினார்.

முரசங்கள் முழங்கின. திருமணப் பருவமுள்ள ஏழைப் பெண்களுக்குத் திருமணம் இன்ன நாளில் முடிக்கப் பெறும் என்ற செய்தி எங்கும் பரவியது. பல ஏழைப் பெண்கள் தம்க்கு விடிவு காலம் வந்துவிட்டதென்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அமைச்சர் தாம் எண்ணியதை எண்ணியபடியே செய்து நிறைவேற்றினார். அவர் மனத்திண்மை உடையவர். அதைக் கண்டு நாடே மகிழ்ந்தது. புல

வர்கள் பாராட்டுவது வியப்பு அல்லவே! ஒரு புலவர் இந்த நிகழ்ச்சியை அழகாகப் பாடினார்.

முத்திருளப்ப பிள்ளை காலத்தில் சேதுபதிக்கு யாரும் பகைமன்னர் இல்லை. ஆதலால் போரும் இல்லை. இப்போது ஒருவன் மாத்திரந்தான் வில்லையும் அம்புகளையும் வைத்துக் கொண்டு இடையீடு இல்லாமல் போர் தொடுத்துக்கொண்டே இருக்கிறான். அதற்குரிய வாய்ப்பை அமைச்சர் ஏற்படுத்தி விட்டார். அவர் திருமணம் செய்து வைத்தபடியால், கணவன் மனைவியானவர்கள் பலர். அவர்களிடம் மன்மதன் இப்போது தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு ஓய்வு இல்லை, ஒழிவு இல்லை! அந்த மன்மதன் ஒருவனைத் தவிர, சமருக்கு என்று எதிர்த்து வருகிற மன்னர் இந்தத் தரையில் இல்லை.

*அமரிக்கை யாளன்,முத்து ராமலிங்க*
*சேதுபதி அவனிக் கெல்லாம்*
*சுமுகப்ர தாபன்எங்கள் முத்திருளப்*
*பேந்த்ரமந்த்ரி துலங்கு நாளில்*
*சமருக்கென் றெதிர்மன்னர் தரையில்இலை,*
*மதன்ஒருவன் தவிர.*

*[அமரிக்கை — சாந்தம். சேதுபதியின் அவனிக்குப் பிரதாபன். சமர் - போர்.]*

இதற்கு முன் திருமணம் ஆகாத குமரிப் பெண்கள் பலர் அங்கங்கே முக வாட்டத்தோடு இருந்தார்கள். இப்போது யாவருக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. ஊரில் மருந்துக்கும் ஒரு குமரி இல்லை. குமரி இல்லையென்றா சொன்னார்? இல்லை, இல்லை. ஒரு குமரி இருக்கிறாள். சேது வேந்தன் நாட்டில் போர் செய்ய ஒரு மன்னரும் இல்லையென்றாலும் மன்மதன் ஒருவன் இருப்பது போல, மணம் செய்து கொள்ளாத குமரிப்

பெண் ஒருத்தியும் இல்லையென்றாலும், ஒரே ஒருத்தி இருக்கிறாள். அவள் நித்திய குமாரி; நித்திய கன்னிகை. அவள் யார் தெரியுமா? சாட்சாத் கன்னியா குமரிதான். அவளுக்கு மணம் முடிக்க யாராலே ஆகும்?

இவ்வாறு நயமாகப் பாட்டைப் பாடி முடித்தார் புலவர்.

*அமரிக்கை யாளன்முத்து ராமலிங்க*
*சேதுபதி அவனிக் கெல்லாம்*
*சுமுகப்ர தாபன்எங்கள் முத்திருளப்*
*பேந்த்ரமந்த்ரி துலங்கும் நாளில்*
*சமருக்கென் றெதிர்மன்னர் தரையில்இலை*
*மதன்ஒருவன் தவிர; மின்னார்*
*குமரிக்குள் கன்யாகு மரியல்லால்*
*மற்றிலைப்பெண் குமரி தானே!*

3

சேதுபதி வேந்தர்களின் பாதுகாப்பிலே இராமேசுவரம் திருக்கோயில் இருந்து வந்தது. அக்கோயிலில் பல வகையான திருப்பணிகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். வெறும் மணற் பரப்பான இராமேசுவரத் தீவில், கடல் கடந்து சென்று அவ்வளவு பெரிய திருக்கோயிலைக் கட்டுவதற்கு எத்தனை ஆற்றல் வேண்டும்!

இரண்டு பிராகாரங்கள் அக் காலத்தில் திருக்கோயிலுக்கு இருந்தன. மூன்றாவது பிராகாரம் ஆரம்பித்திருந்தார்கள். அதைக் கட்டி முடிக்கவேண்டும் என்ற எண்ணம் அமைச்சர் முத்திருளப்பருக்கு உண்டாயிற்று. மன்னர் உடன்பட்டார். அக் காலத்தில் சின்னப் பிரதானியாக இருந்தவர் கிருஷ்ணையங்கார் என்பவர். அவரும் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டுத் தொண்டு புரியச் சித்தமானார்.

முத்திருளப்பர் நல்ல நாளில் திருப்பணியைத் தொடங்கினர். பெரிய பெரிய தூண்களை நிறுத்தி, பாவு கற்களைப் பரப்பிப் பிராகாரத்தைச் சமைக்கச் செய்தார். சிறந்த சிற்பிகள் வந்து வேலை செய்தார்கள். கட்டிடக் கலைஞருக்கும் மற்றத் தொழிலாளர்களுக்கும் அறுசுவை உண்டி நாள்தோறும் கிடைக்கச் செய்தார். அவர்கள் தங்கள் குடும்பத்தோடே வந்து இராமேசுவரத்தில் தங்கி வாழலானர்கள். ஒரு நாளா, இரண்டு நாளா? பல ஆண்டுகளாகச் செய்ய வேண்டிய திருப்பணி அது. செங்கற்களும் கருங்கற்களும் சுண்ணும்பும் மலை மலையாகக் குவிந்தன.

பெரிய பிராகாரம் ஆதலின் நன்ருகத் திட்டம் செய்து கட்ட வேண்டியிருந்தது. மெல்ல மெல்லக் கட்டிடம் உயர்ந்து வந்தது. பல ஆண்டுகளுக்குப் பின் பிராகாரம் கட்டி முடிந்தது. கட்டிய பிறகு அதைப் பார்த்தவர்கள் யாவரும் அது மனிதர்களால் செய்து முடியாத காரியம் என்று வியந்தார்கள். "தெய்வத்தின் திருவருள் இல்லாவிட்டால் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க இயலாது. அமைச்சருடைய பக்தியும் ஆற்றலுமே இந்தச் செயற்கரிய செயலை நிறைவேற்றக் காரணமாயின" என்று யாவரும் பாராட்டினர்கள். வெளியூர்களிலிருந்து பல செல்வர்களும் அன்பர்களும் இராமேசுவர தரிசனத்துக்கு வந்து வந்து இந்தப் பிராகாரத்தைக் கண்டு பிரமித்துப் போனர்கள்.

புலவர் ஒருவர் இந்தப் பிராகாரச் சிறப்பைப் பாட்டிலே பதித்துப் பாடினர்.

"நீ எழுப்பிய தூண் ஒவ்வொன்றும் ஒரு மலை. பாவு கற்களை வளையாமல் தாங்கும் போதிகைகளோ மேரு மலை. இத்தகைய பிரம்மாண்டமான திருப்பணியின் பெருமையை என்னவென்று எடுத்துச்

சொல்வது! உன்னுடைய ஈகையினால் இந்தக் காரியத்தை நீ சாதித்துக் கொண்டாய். உன் கை கற்பகம் போன்றது; பொன்னும் பொருளும் சோறும் துணியும் வழங்குவது. உன்னை இறைவன் இந்தத் திருப்பணிக்காகவே படைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது. பிரம தேவன், நீ உன் தாய் வயிற்றில் கருவாக இருக்கும்போதே திருப்பணிக்கு ஏற்ற ஆற்றலை அளித்து உருப் பண்ணியிருக்கிறான்'' என்று அதில் பாராட்டினார்.

*பருப்பதங்கள் ஒவ்வொருதூண்; பாவுக்கல்*
*வளையாத பார மேரு;*
*சுரிப்படங்காப் போதிகை! நீ செய்தபணிப்*
*பெருமைஎன்ன சொல்வேன் ஐயா!*
*தருப்பொலியும் கரதலமுத் திருளப்ப*
*சாமி! நின்றன் தாய்பால் உன்னைக்*
*கருப்பணிநின் திருப்பணிக்கென் றுருப்பணினான்*
*மருப்பொலியும் கமலத் தோனே.*

*[பருப்பதம் - மலை. சுரிப்பு - முடங்குதல். தரு - கற்பகத்தின் தன்மை. கருப்பண்ணித் திருப்பணிக்கு என்று உருப் பண்ணினான். மரு - நறு மணம். கமலத்தோன்- பிரமன்.]*

வேறு புலவர்களும் இந்த அற்புதமான திருப்பணியைப் பாராட்டிப் பாடினார்கள். 1740-ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தத் திருப்பணி இருபது ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்றதென்று தெரிய வருகிறது.

அந்தப் பிராகாரத் தூண்களில் அமைச்சர் முத்திருளப்ப பிள்ளையின் திருவுருவமும் அவருக்கு உதவியாக இருந்த சின்னப் பிரதானி கிருஷ்ணையங்காரின் திருவுருவமும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

புலவர்களாகிய சொற் சிற்பிகளால் தம்முடைய பாடல்களாகிய சொற் கோயில்களிலும், கற்சிற்பிகளால் கற்கோயில்களிலும் அமைத்துப் பாராட்டப்பெற்ற புகழுடம்பு உடையவர் முத்திருளப்ப பிள்ளை. அவருடைய தெய்வபக்திச் சிறப்பையும் புலவரைப் போற்றும் இயல்பையும் தண்டமிழ்ப் பாடல்கள் விளக்குகின்றன.

# நெட்டிமாலைப் புலவர்

## 1

இராமநாதபுரம் அரண்மனையில் நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. தமிழ்ப் புலவர்களும் மற்றவர்களும் நாள் தவருமல் போய் வந்தார்கள். ஊர் முழுவதும் கம்பராமாயணத்தைப் பற்றியே பேச்சு.

''கம்பனுடைய வாக்கு அமுத வாக்கு. அப்படிப் பாட இனிமேல் யார் பிறக்கப் போகிருர்கள்?'' என்ருர் ஒருவர்.

''தெரியாமலா, 'கம்ப நாடன் கவிதையிற் போற் கற்ருேர்க்குள்ளம் களியாவே' என்று பாடிஞர்கள்? அப்படிப் பாடினவர் வாயில் தேனையும் சர்க்கரையையும் கலந்து போடவேண்டும்'' என்ருர் ஒருவர்.

''சரியாகச் சொன்னீர்கள். கம்பன் பாட்டும் சர்க்கரைப் புலவர் விளக்கமும் பாலுந் தேனும் கலந்தது போல இருக்கின்றன. 'கம்பன் பாட்டு உயர்ந்ததா, சர்க்கரைப் புலவர் விளக்கம் சிறந்ததா' என்று நம்மால் எடைபோட முடியவில்லை'' என்ருர் மற்ருேர் அன்பர்.

''தெரியாமலா இவரை நம்முடைய மன்னர்பிரான் அரசவைப்புலவர்களில் ஒருவராக ஆக்கிக்கொண்டார்?''

''இத்தகைய புலவர்களைத்தேர்ந்தெடுத்து அவையில் வைத்துக் கொண்டிருக்கிற மன்னர் பெருமானுடைய தமிழ் ஆர்வத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.''

''ஆம், சர்க்கரை இருக்கிறது; அமுதம் இருக்கிறது.''

"அவை நாவுக்கு இனியன; உடம்புக்கு மணம் தரும் சவ்வாது கூட இருக்கிறதே!"

சர்க்கரைப் புலவர், அமுத கவிராயர், சவ்வாதுப் புலவர் என்ற தமிழ்ப் புலவர்கள் மூவரும் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவர்களாக இருந்தனர். சர்க்கரைப் புலவர் நாள்தோறும் கம்பராமாயணத்தை அரசருடைய முன்னிலையில் விரித்து விளக்கம் கூறி வந்தார். அதனைக் கேட்கப் பலர் கூடினர்.

கிடாரம் என்ற ஊரில் வாழ்ந்த சாந்தப் பிள்ளை என்பவருடைய குமாரர் சர்க்கரைப் புலவர். அவர் தமிழ் நூல்களை நன்கு கற்றுக் கவி பாடும் ஆற்றலும் பெற்றார். திருவாவடுதுறை யாதீனத்தில் சின்னப் பட்டத்தில் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் தமிழ் இலக்கண இலக்கியத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். சர்க்கரைப் புலவர் அவரிடம் பல காலம் தமிழ் பயின்று புலமையில் நிறைந்தார்.

கம்பராமாயணத்தில் அவருக்கு மிகுதியான ஆர்வமும் பயிற்சியும் இருந்தன. அதனைப் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். அவருடைய நூற் புலமை கவி பாடும் ஆற்றல் ஆகியவற்றைவிடச் சிறப்பாக விளங்கியது, அவர் ஆற்றி வந்த கம்ப ராமாயண விரிவுரை. அவரை யாவரும் 'கம்பராமாயணப் பிரசங்கி சர்க்கரைப் புலவர்' என்று வழங்கலானார்கள்.

அவருடைய தமிழ்ப் புலமையையும், கம்ப ராமாயணப் பிரசங்க ஆற்றலையும் கேள்வியுற்ற சேதுபதி மன்னர் அவரைத் தம் அவைக்களத்துக்கு வருவித்தார். கி. பி. 1645-முதல் 1670-வரையில் அரசாட்சி செய்திருந்த இரகுநாத சேதுபதி மன்னரே அவ்வாறு வருவித்தவர். அம் மன்னரைத் திருமலைச் சேதுபதி என்றும் கூறுவது வழக்கம்.

சர்க்கரைப் புலவருடைய தமிழாற்றலை அறிந்த மன்னர் அவரைத் தம் அவைக்களப் புலவர்களில் ஒருவராகச் செய்தார். அதனால் புலவருக்குப் பின்னும் ஊக்கம் மிகுதியாயிற்று. அவருடைய விரிவுரைகளில் உரமும் நயமும் அதிகமாயின.

சேதுபதி மன்னர் புலவரிடமிருந்து ஒரு முறை இராமாயணம் முழுவதும் கேட்டுவிட வேண்டுமென்று விரும்பினர். அவர் விருப்பப்படியே கம்பராமாயண விரிவுரை தொடங்கியது. கம்பருடைய கவி நயத்தையும் நுட்பங்களையும் புலவர் எடுத்துச் சொல்லச் சொல்லத் தேனில் விழுந்த வண்டெனவே யாவரும் மயங்கிக் கேட்டு இன்புற்றனர். சேதுபதி மன்னருக்குப் புலவரிடம் அன்பு வர வர மிகுதியாயிற்று.

சர்க்கரைப் புலவர் அவ்வப்போது சேதுபதியைப் பாராட்டிப் பாடுவதுண்டு. அந்தப் பாடல்களை மன்னர் சுவைத்து மகிழ்ந்து பாராட்டுவார். "கம்பன் கவிக் கடலில் நீந்தும் உங்கள் வாக்கின் இனிமைக்கு அளவு ஏது?" என்று புகழ்வார்.

சேதுபதியின் அவைக்களப் புலவரில் மற்றொருவராகிய சவ்வாதுப் புலவர் இஸ்லாமியர். அவரும் நல்ல கவி பாடும் திறமை பெற்றவர். அடிக்கடி சேதுபதி மன்னர் சர்க்கரைப் புலவரைப் பாராட்டுவதைக் கேட்ட அவருக்குச் சற்றே பொறாமை உண்டாயிற்று. "சர்க்கரை போல இந்தக் கவி இனிக்கிறது" என்று சேதுபதி மன்னர் ஒருமுறை சொன்னபோது சவ்வாதுப் புலவர், "சர்க்கரை தொண்டை மட்டும்" என்று சொன்னர். அந்தக் கவி நெடுநாள் இனிக்காது என்ற கருத்தை வைத்தே பேசினர்.

சவ்வாதுப் புலவர் மனத்தில் சிறிது மாசு படர்வதை அறிந்த சர்க்கரைப் புலவர் உடனே, "சவ்வாதோ?" என்று கேட்டார்.

சவ்வாதுப் புலவர் சிறிதும் யோசனையின்றி, "சர்க்கரை தொண்டை மட்டும்; சவ்வாது கண்ட மட்டும்" என்று சொன்னார். சர்க்கரையை விழுங்கினால் தொண்டைவரை இனிக்கும்; விழுங்கின பிறகு அதன் இனிமை தெரியாது. சவ்வாது காணும் போதெல்லாம் இன்பம் தரும். சர்க்கரையை விடச் சவ்வாது சிறந்தது என்ற கருத்தோடு இதைச் சொன்னார்.

சர்க்கரைப் புலவர் விடுவாரா? சவ்வாதுப் புலவர், "சர்க்கரை தொண்டை மட்டும்; சவ்வாது கண்ட மட்டும்" என்று சொல்லி திறுத்தினவுடனே, "அதுவும் அந்த மட்டுந்தானே?" என்றார். 'சவ்வாது கண்ட மட்டும்' என்பதில், 'கண்ட மட்டும்' என்பது 'கண்டம் மட்டும்' என்றும் பிரிக்கும்படி அமைந்திருக்கிறது. "தொண்டை மட்டும் என்றால் என்ன? கண்டம் மட்டும் என்றால் என்ன? இரண்டும் ஒன்றுதானே?" என்ற கருத்தில், "அதுவும் அந்த மட்டுந்தானே?" என்று கேட்டார் சர்க்கரைப் புலவர்.

இந்தச் சமற்காரப் பேச்சிலே இன்புற்ற மன்னர் "சர்க்கரையும் சவ்வாதும் சரியே என்பதை நீங்கள் நிரூபித்து விட்டீர்கள்" என்று சொல்லிச் சமாதானப் படுத்தினார்.

## 2

கம்பராமாயண விரிவுரை நடந்துகொண்டிருந்தது. கடல்தாவு படலத்துக்குப் புலவர் விளக்கம் கூறிக் கொண்டிருந்தார். அநுமன் கடலைத் தாவிய நிகழ்ச்சியைப் புலவர், கம்பன் பாடலிலிருந்து எடுத்துரைத்தார். அப்போது மன்னர், "அவர் எப்படித் தாவினார்?" என்று வியப்புற்றுக் கேட்டார்.

மிகவும் ஊக்கத்தோடு விரிவுரை ஆற்றிக்கொண்டு வந்த புலவர் காதில் இந்தக் கேள்வி விழுந்ததும்,

"இப்படித்தான் தாண்டினர்" என்று சொல்லித் தாம் இருந்த இடத்திலிருந்து ஒரே தாவாகத் தாவி மன்னர் இருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்தார். அப்போது மன்னர் 'சட்'டென்று எழுந்திருந்து இடம் விட்டு வேறு ஆசனத்தில் அமர்ந்தார்.

அந்த மண்டபம் நன்ருக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மேலே மாவிலைத் தோரணங்களைக் கட்டியிருந்தார்கள். பல வண்ணமுடைய நெட்டி மாலைகளைத் தொங்க விட்டிருந்தார்கள். புலவர் தாவியபோது நெட்டிமாலை ஒன்று அறுபட்டது. சேதுபதி மன்னர் இடம் விட எழுந்த போது, அறுபட்ட மாலை புலவர் கழுத்தில் விழுந்தது.

நெட்டிமாலை கழுத்தில் விளங்க ஆசனத்தில் வீற்றிருந்த புலவரைச் சேதுபதி பார்த்தார். பல நிறம் பெற்ற அந்த மாலை அழகாகவே இருந்தது. "உங்களுக்கு இந்த மாலையை அநுமனே பரிசாகத் தந்திருக்கிருர் என்று தோன்றுகிறது" என்று சொல்லி, மேலே கதையை நடத்தச் சொன்ஞர்.

அன்று முதல் யாவரும் அப்புலவரை 'நெட்டி மாலைப் புலவர்' என்றும், 'நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர்' என்றும் அழைத்து வரலாயினர். கம்ப ராமாயணப் பிரசங்கம் இனிது நிறைவேறியது. பட்டாபிஷேக தினத்தன்று, சர்க்கரைப் புலவருக்கு மலர் மாலையோடு நெட்டிமாலையும் அணிந்து சிறப்புச் செய்தார்கள்.

நெட்டிமாலையை அணிந்த இந்தச் செய்தியைச் சர்க்கரைப் புலவர் ஒரு சீட்டுக் கவியில் குறிப்பிட்டிருக்கிருர்.

*வந்தஜய பாரத இராமாய*
*ணத்திலே வாடாத நெட்டிமாலை*
*மருவிட்ட திருவிட்டு வழுவாது*
*நழுவாது வாசாம கோசரமதாய்ச்*

*சிந்தைமிக வேசற்றும் மலையாது*
*சபையிலே செய்யும்ப்ர சங்கநிபுணன்*
*சேதுபதி சித்தமகிழ் சர்க்கரைக்*
*கவிராச சிங்கம்யாம் எழுதும் நிருபம்*

என்பது அந்தப் பகுதி.

3

இரகுநாத சேதுபதி சர்க்கரைப் புலவருக்கு அவ்வப் போது அளித்த பரிசில்களும் வழங்கிய மானியங்களும் பல. நிலவளம் மிக்க சிறுகம்பையூர் என்ற கிராமத்தில் வளப்பமான சில நிலங்களை அவருக்கு மானியமாக வழங்கினார். சர்க்கரைப் புலவர் அவ்வூர் தாம் வாழ்வதற்கு ஏற்றதாக இருப்பதை அறிந்து, அங்கேயே குடியேறினார். அடிக்கடி சேதுபதி மன்னரை வந்து கண்டு, தம் தமிழ்க் கவிகளாலும் பழந் தமிழ் நூற் கவிகளாலும் அவருக்கு மகிழ்ச்சியை அளித்து வந்தார்.

புலவருக்கு மன்னர் வழங்கிய நிலப்பகுதிக்குக் கோணச்செய் என்று பெயர். அது மிகவும் நன்றாக விளையும் நிலம். அந்த நிலத்தின் விளைவைக் கண்டு மக்கள் வியந்தனர். "புலவருடைய வாக்கில் கவி விளைவதைப் போல அல்லவா இந்தச் செய் விளைகிறது?" என்று பாராட்டினார்கள்.

ஒரு முறை நாலு பேர் கூடிப் பேசிக் கொண்டிருந்த போது புலவருடைய நிலத்தின் வளத்தைப்பற்றியும் பேசினார்கள். அப்போது அப்பக்கமாக வந்த சர்க்கரைப் புலவர் காதில் அவர்கள் பேச்சு விழவே, "ஆமாம் ஆமாம், கரும்பாலை ஆடுவதேன்? கம்பையூர்க் கோணச் செய் விளைவதேன்? சர்க்கரைக்கு, சர்க்கரைக்கு" என்று இரு சொல் அலங்காரமாகப் பேசினார்.

கேட்ட அவர்கள், "ஆம், உங்கள் புலமையையும் பெருமையையும் எண்ணியே அந்தச் செய் நன்றாக விளைகிறது. உங்கள் அதிருஷ்டமே அதிருஷ்டம்!" என்று கூறி மகிழ்ந்தார்கள். கரும்பு ஆலையில் ஆடுவது சர்க்கரை உண்டாக என்றும், கம்பையூரில் உள்ள கோணச் செய் நன்றாக விளைவது சர்க்கரைப் புலவருக்காக என்றும் அந்த இரு சொல் அலங்காரத்துக்குப் பொருள் கொள்ள வேண்டும்.

நெட்டிமாலைப் புலவர் முருகப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருச்செந்தூருக்குச் சென்று வழிபட்டார். அப் பெருமானைத் துதித்து, 'திருச்செந்தூர்க் கோவை' என்ற நூலைப் பாடினார்.

சேதுபதி மன்னரிடம் அமைச்சராக இருந்த தாமோதரம்பிள்ளை என்பவர் சர்க்கரைப் புலவரிடம் பேரன்பு பூண்டவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் புலவர் கற்றமையால் அவருக்குச் சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஆழ்ந்த தேர்ச்சி இருந்தது. தாமோதரம் பிள்ளை சைவ சித்தாந்தத்தில் பற்றுள்ளவர். புலவருடைய சித்தாந்தப் புலமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவர் அவா. சித்தாந்த நூல் ஒன்றைப் பாட வேண்டும் என்றோ, பழைய சித்தாந்த நூல் ஒன்றுக்கு உரை எழுத வேண்டுமென்றோ அவர் கேட்டிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

"வேதாந்த சூளாமணி என்ற வேதாந்த நூலுக்குச் சித்தாந்த பரமாக ஓர் உரை எழுதுங்கள்" என்று அமைச்சர் சொன்னார். நூலின் பெயரே வேதாந்த சூளாமணி; அது வேதாந்தக் கருத்தைத் தன்பால் கொண்டது என்பதை அப் பெயரே தெரிவிக்கும். அப்படியிருக்க, சித்தாந்தக் கருத்துக்கு இணங்க அதற்கு உரை எழுதுவதென்பது எளிய செயலன்று. வெறும்

சித்தாந்த அறிவு மட்டும் இருந்தால் போதாது; தமிழ்ச் செய்யுளுக்கு நுட்பமாக உரை விரிக்கும் ஆற்றலும் இலக்கணப் புலமையும் வேண்டும்.

இத்தகைய தகுதியை நன்ருகப் பெற்ற புலவர், அமைச்சர் தம் கருத்தைக் கூறியவுடன் மயங்கவில்லை. ''அப்படியே செய்வேன்'' என்று ஒப்புக்கொண்டு அவ்வுரையை எழுதி முடித்தார். அவர் எழுதி முடித்தவுடன் அதனைக் கண்டு அமைச்சர் வியந்தார். அறிஞர் பாராட்டினர். புலவர் போற்றிப் பாடினர்.

*உரைதருவே தாந்தசூளா மணியுட் பொருளை*
*உலகிலுள்ளோர் உணரவுரை செய்கஎனக் கடல்சூழ்*
*தரைஅரசன் சேதுபதி அமாத்தியனும் தாமோ*
*தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற*
*வரையறுத்துச் சித்தாந்தப் பொருள்திறனுந் தோன்ற*
*வகுத்தனன்நற் றுறைசைநமச் சிவாயதே சிகன்தாள்*
*பரவுசிவக் கொழுந்துநிதி அருள்கல்விக் கடலைப்*
*பருகுமுகில் சர்க்கரைநற் பாவலர் கோனே.**

என்பது ஒரு புலவர் பாடிய சிறப்புப் பாயிரம்.

இந்தச் சர்க்கரைப் புலவர் பரம்பரையில் பல புலவர்கள் இருந்து, பல நூல்களை இயற்றிப் பெயர் பெற்றிருக்கிருர்கள். அவரில் சிலருக்குச் சர்க்கரைப் புலவர் என்றே பெயர் உண்டு.

---

* அமாத்தியன் - மந்திரி. கங்காகுலம் - வேளாளர் மரபு. துறைசை - திருவாவடுதுறை. நமச்சிவாய தேசிகன் - திருவாவடுதுறை ஆதீனத்து முதல் ஞானசிரியர்.

# பாம்புக் குட்டி

சிவகங்கையை ஆண்டு வந்த மருதபாண்டியரைப் பற்றிப் பல அருமையான வரலாறுகள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. 18-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அவர் பெருவீரர்; நல்ல கலைத்திறம் தேரும் இயல்பினர்; பெருவள்ளல். அவரைப் புலவர்கள் பாடிய பாடல்கள் அங்கங்கே வழங்குகின்றன.

அக் காலத்தில் இராமேசுவரம் செல்லும் யாத்திரிகர்கள் பெரும்பாலும் நடந்தே செல்வார்கள். அப்படிச் செல்பவர்கள் தங்கி இளைப்பாறவும், உணவுகொள்ளவும் அங்கங்கே அரசர்களும் அறச் செல்வர்களும் பல சத்திரங்களைக் கட்டிவைத்தனர்; சாலைகளில் மரங்களை நட்டு நிழல் செய்தனர்; இடையிடையே தண்ணீர்ப் பந்தலை அமைத்தனர். மருதபாண்டியரும் இப்படிச் சில சத்திரங்களைக் கட்டிவைத்தார். தாம் நிறுவிய அறங்கள் செவ்வனே நடைபெறுகின்றனவா என்று அவ்வப்போது சென்று பார்த்து வருவது அவர் வழக்கம்.

இராமேசுவரத்துக்குச் செல்லும் வழியில் கலியநகரி என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு சத்திரம் கட்டினால் வழிப் போவோருக்கு நலமாக இருக்கும் என்று சிலர் கூறினார்கள். மருதபாண்டியர் அந்த ஊர் சென்று பார்த்து வந்தார். அங்கே சத்திரம் கட்டுவதனால் பலர் பயன் பெறுவார்கள் என்பதை அவர் உணர்ந்தார். அப்படியே கட்டும்படி கட்டளை பிறப்பித்து விட்டார். கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தபோது அடிக்கடி சென்று பார்த்து வந்தார்.

இராமநாதபுரத்தில் சம்ஸ்தானப் புலவராகச் சர்க்கரைப் புலவர் என்பவர் இருந்து தம்முடைய கவியாற்றலால் பெரும் புகழ் பெற்றுவந்தார். நெட்டிமாலைப் புலவர் பரம்பரையில் வந்தவர் அவர். அவர் ஒருநாள் மருத பாண்டியரைப் பார்க்க எண்ணினர். அம் மன்னர் கலிய நகருக்கு வந்ததை அறிந்து, அங்கேயே சென்று, அவரைக் கண்டு அளவளாவலா மென்று தீர்மானித்தார். அவரைப் போய்ப் பார்க்க வேண்டுமானல் வெறுங் கையோடு போகலாமா? பழம் முதலிய கையுறைகளை மற்றவர்கள் கொண்டு செல்வார்கள். புலவரும் அவற்றைக் கொண்டு செல்லலாம். ஆனல், பிறர் யாரும் கொண்டு செல்ல இயலாததை அவர் கொண்டுபோவது தானே சிறப்பு? சர்க்கரைப் புலவர் நாகபந்தம், முரசபந்தம் முதலிய சித்திர கவிகளைப் பாடுவதில் வல்லவர். அவர் அட்ட நாகபந்தமாக ஒரு கவியை வரைந்தார். எட்டு நாகங்கள் பின்னிப் பிணையலிட்டதாக அமைந்த சித்திரம் ஒன்றில் கவியை அடைத்திருப்பார்கள். அது தான் அட்ட நாகபந்தம். அத்தகைய கவிகளில் சில எழுத்துக்கள் பல இடங்களில் பொதுவாக அமைந்திருக்கும்.

காலையில் எழுந்து நீராடிவிட்டு இந்த அட்டநாக பந்தத்தை வரைந்து முடித்தார் புலவர். அதை ஓரிடத்தில் வைத்துவிட்டுச் சிவபூசை செய்யப் போனர். பூசையை நிறைவேற்றி உணவுகொண்டு மருதபாண்டியரைப் பார்க்கப் புறப்பட்டார். இராமநாதபுரம் சம்ஸ்தானத்தில் அவருக்குச் சிவிகை மரியாதை பண்ணியிருந்தார்கள். அந்தச் சிவிகையில் ஏறி அவர் கலிய நகருக்குச் சென்றார்.

புலவர் வந்ததை அறிந்த மருதபூபர் மிக்க ஆர்வத்தோடு அவரை வரவேற்று இன்மொழி கூறி அமரச் செய்து அளவளாவத் தொடங்கினர். புலவர் தாம்

பாடிய அட்ட நாகபந்தக் கவியைக் கூறிப் பிறகு அதனை எழுதி வைத்திருந்த ஏட்டையும் மருதபூபரிடம் தந்தார்; அந்தப் பாட்டின் பொருளையும் கூறினார்.

சித்திர கவிகளின் பெருமை சித்திரத்திலே அதனை அடைத்துப் பார்த்தால்தான் தெரியும். ஆகவே, பாட்டைக் காதினால் கேட்ட பின்னர், அது சித்திரத்தில் அமைந்திருப்பதைக் கண்ணால் பார்க்க எண்ணிப் புலவர் கொடுத்த ஏட்டைப் பிரித்துப் பார்த்தார் மருதபாண்டியர்.

அந்த ஏட்டில் சர்க்கரைப் புலவர் கூறிய அட்ட நாகபந்தச் செய்யுள் இருந்தது. அது மட்டுமா? அந்தப் பாட்டை வரைந்த இடத்துக்கு அருகே உள்ள குறுகிய இடத்தில் சிறியதாக ஓர் அட்டநாக பந்தமும், இதில் செய்யுள் ஒன்றும் இருந்தன. அந்தச் செய்யுளையும் பாண்டியர் படித்தார்.

பின்பு புலவரை நோக்கி, "தாங்கள் முதலில் எழுதிய அட்டநாகங்கள் போதாவென்று, அவற்றைக் குட்டி போடச்செய்து சிறிய நாகங்கள் எட்டை வேறு அமைத்திருக்கிறீர்களே!" என்று கூறினார்.

புலவருக்கு முதலில் அவர் கூறியது விளங்கவில்லை. "பெரிய அட்டநாகபந்தமும் அதன் அருகே குட்டி அட்ட நாகபந்தமும் இருக்கின்றனவே! நீங்கள் ஒரு பாடலைத் தானே சொன்னீர்கள்?" என்று மறுபடியும் மருதபாண்டியர் கேட்டார்.

அப்போது புலவருக்கு ஒரு வகையாகச் செய்தி தெரிந்தது. "இன்னொரு பாடலும் இருக்கிறதா?" என்று வியப்போடு கேட்டார்.

"என்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? அது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் மருதபாண்டியர்.

புலவருக்கு உண்மை விளங்கிவிட்டது. "குழந்தையைக் கேட்க வேண்டும்!" என்று கூறினார்.

"குழந்தையா? யார் குழந்தை? தங்கள் குழந்தையா?" என்று கேள்விமேல் கேள்வியை அடுக்கினார் மன்னர்.

சர்க்கரைப் புலவருக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் இளம் பருவத்தினன். ஆண்டில் இளையவனானாலும் அறிவில் சிறந்தவனாக இருந்தான். இலக்கண இலக்கியங்களைத் தம் தந்தையாரிடம் பாடம் கேட்டு வந்தான். கவிபாடும் ஆற்றல் அவனிடம் இருந்தது. தந்தையாரைப் போலவே சித்திர கவிகளை இயற்றும் திறமையும் அவனிடம் அமைந்தது. அவனையே சர்க்கரைப் புலவர் குழந்தை என்று குறிப்பிட்டார்.

அந்தக் குட்டி நாகபந்தத்தைச் சர்க்கரைப் புலவருடைய குழந்தை எழுதியிருக்கிறான் என்பதைப் பாண்டியர் அறிந்தபோது அவருக்கு வியப்புத் தாங்கவில்லை. அந்தக் குழந்தையை உடனே பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. "குழந்தையை நான் பார்க்க வேண்டும். அரண்மனைச் சிவிகையை அனுப்பட்டுமா?" என்று கேட்டார்.

புலவர் சற்றே தயங்கினார். அவருக்கு ஒரு பயம். தம் குமாரன் வந்து பாண்டியர் பார்வையில் பட்டால் அவனுடைய இளம் பருவத்தைக் கண்டு, 'இவ்வளவு சிறியவனா பாடினான்!' என்று மன்னர் வியப்பார். 'அவர் கண் பட்டுவிட்டால் என்ன செய்வது? ராஜ திருஷ்டி மிகவும் கொடியது என்று சொல்வார்களே!'-இப்படிப் புலவர் தடுமாறினார்.

"சமுகத்தில் அந்தக் குழந்தையிடம் பிறந்த கருணைக்கு நான் எழுமையும் கடமைப்பட்டிருக்கிறேன். அவன் விளையாட்டுப் பிள்ளை; எங்கேயாவது போய் விளையாடிக் கொண்டிருப்பான். நானே அவனைப் பிறகு, ஒரு நாள் அழைத்து வருகிறேன்" என்றார் புலவர்.

"உங்கள் பிள்ளையின் விளையாட்டைத்தான் இதோ நான் பார்க்கிறேனே. உங்களுக்குத் தெரியாமலே நீங்கள் படைத்த நாகங்களைக் குட்டிபோட வைத்து விட்டானே! அவனை உடனே பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உங்களுக்குத் தடை ஏதாவது உண்டா?"

"தடையா! சமுகத்தின் கருணைப் பார்வைக்கு அவன் இலக்காவது பெரிய பாக்கியம் அல்லவா? அவன் இத்தகைய இடங்களுக்கெல்லாம் தன் தாயை விட்டுத் தனியே சென்றவனும் அல்ல. சிவிகையைக் கண்டால் அஞ்சுவான்."

"நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது! நீங்கள் சிவிகையேறும் கவி மன்னர் ஆயிற்றே! அவன் சிவிகையைப் பாராதவனா?"

"அதைச் சொல்லவில்லை. சமுகம் அனுப்பும் சிவிகைக்காரர்கள் இவ்விடத்துக்கு ஏற்ற மிடுக்குடன் இருப்பார்கள். அவர்களைக் கண்டால் அஞ்சி வரமாட்டேன் என்று சொல்லி அழுதாலும் அழலாம். குழந்தை தானே? மன்னருடைய அழைப்பின் அருமையை அவன் எங்கே உணரப்போகிறான்? ஆகையால் நானே அவனுக்கு எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லி ஒரு நல்ல நாளில் அவனை இங்கே அழைத்து வருகிறேன்."

"இன்றே நல்ல நாள்தான். இந்த அருமையான பாடலைப் பாடும் ஆற்றலுடைய உங்கள் குழந்தை யாருக்கும் பயப்படுபவன் என்று நான் நினைக்கவில்லை. அவன் இப்போது இங்கே வருவதில் உங்களுக்கு விருப்பம் இல்லைபோல் இருக்கிறது!"

புலவருக்குத் தம் எண்ணத்தைக் கூறத் தைரியம் இல்லை. என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தார்.

அவர் சும்மா இருப்பதைக் கண்ட அரசர் அதனை அவர் சம்மதமாகவே எண்ணிச் சிவிகையோடு அரண்மனையைச் சேர்ந்த ஒருவரையும் அந்தக் குழந்தையை அழைத்துவரச் சொல்லி அனுப்பினார்.

"கடவுளே! நீதான் அந்தக் குழந்தைக்குக் கண்ணேறு வராமல் காப்பாற்ற வேண்டும்" என்று மனத்துக்குள் வேண்டிக்கொண்டு அமர்ந்திருந்தார், சர்க்கரைப் புலவர்.

சர்க்கரைப் புலவர் சிறுகம்பையூர் என்னும் இடத்தில் வாழ்ந்து வந்தார். கலியநகரிக்கும் அதற்கும் ஐந்தாறு மைல் இருக்கும். இவ்வளவு அண்மையில் வந்திருக்கிறாரே, பார்க்கலாமே என்ற எண்ணத்தால்தான் மருதபாண்டியரைப் பார்க்கப் புலவர் வந்தார். அவரை அறியாமல் குட்டிபோட்ட நாகபந்தம் அவருக்கு அச்சம் உண்டாகக் காரணமாயிற்று.

சிறிது நேரத்தில் பாண்டியர் அனுப்பியிருந்த பல்லக்கில் குழந்தை வந்து சேர்ந்தான். மன்னரிடமிருந்து பல்லக்கு வந்திருப்பதை அறிந்த அந்த இளங் கவிஞனுடைய தாய் அவன் தலையை வாரி நல்ல ஆடை அணி அணிந்து வரவிடுத்தாள்.

குழந்தை பல்லக்கிலிருந்து இறங்கினான். மருதபாண்டியர் அவனைப் பார்த்தார். உண்மையில் அவன் குழந்தைப் பருவம் தாண்டாதவனாகவே இருப்பதை உணர்ந்து அவர் வியப்பே வடிவமானார். ஓடிச்சென்று அவனைக் கட்டி அணைத்தார்.

"இந்த ஏட்டில் குட்டி நாகபந்தத்தை வரைந்தவர் யார்?" என்று மருதபூபதி கேட்டார்.

குழந்தை சற்றும் தயங்கவில்லை. "நான்தான்!" என்று மிடுக்குடன் சொல்லி அருகில் நின்ற தன் தந்தையைப் பார்த்தான். அவருக்கு முன்பு இருந்த அச்சம்

இப்போது இல்லை; பெருமை உணர்ச்சியே உண்டாயிற்று.

அரசர் குழந்தையைத் தம் அருகில் அமரச் செய்து அந்தப் பாட்டைச் சொல்லச் சொன்னார். அவன் கணீரென்று தான் எழுதிய பாடலைச் சொன்னான். அதைக் கேட்ட மருத பாண்டியருக்கு உவகை பொறுக்கவில்லை. தந்தையாருக்கோ ஆனந்தக் கண்ணீர் துளித்தது.

"புலவரே!" என்று அழைத்தார் மருதபாண்டியர். சர்க்கரைப் புலவர் பாண்டியரைப் பார்த்தார்.

"இந்தக் குழந்தை இனி இந்த அரண்மனைக் குழந்தை. என் அருகிலேயே இவன் இருக்கட்டும்" என்றார் மன்னர்.

புலவர் மனம் ஒரு பக்கம் உவகையும் ஒரு பக்கம் வருத்தமும் அடைந்தது.

"இங்கேயே இருப்பதென்றால் தாய் தந்தையரைப் பாராமல் இருந்து விடுவதன்று. வேண்டும் போதெல்லாம் உங்கள் ஊர் வந்து பார்த்துவிட்டு வருவான். ஆனால் அங்கே தங்கமாட்டான்!"

புலவருக்கு வார்த்தை எதுவும் வரவில்லை.

"நீங்கள் எப்போது இவனைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்போது இவனைச் சிவிகையில் அனுப்புகிறேன். நீங்களும் உங்கள் மனைவியும் அடிக்கடி அரண்மனைக்கு வந்து சில நாட்கள் தங்கி விட்டும் செல்லலாம்."

"மன்னருடைய பேரன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! இவனுக்குக் கிடைத்த பாக்கியத்தை மிகப் பெரியதாக நான் கருதுகிறேன். ஆனால்—"

"ஆனால் என்று ஏதோ தடை சொல்ல வருகிறீர்களே! இவனை நான் நன்றாகக் காப்பாற்ற மாட்டேன் என்ற ஐயம் உங்களுக்கு உண்டாகிறதோ?"

"அப்படி நான் சொல்வேனா? எங்கள் வீட்டில் கிடைப்பதை விட ஆயிரம் மடங்கு நன்மை இங்கே கிடைக்கும் என்பதை நான் அறியமாட்டேனா? இவன் கவி பாடப் பழகியிருக்கிறான். இன்னும் இலக்கண இலக்கியங்களில் போதிய ஆழம் வேண்டும். இப்போதுதான் பாடம் கேட்டு வருகிறான். ஒருவாறு சொல்ல வேண்டிய பாடங்களைச் சொல்லிய பிறகு இவனை அழைத்து வந்து இவ்விடத்தில் அடைக்கலமாய் விட்டுவிடுகிறேன்."

"இவன் தங்களிடம் பாடம் கேட்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததே; அந்த வியாஜத்தைக் கொண்டு நீங்களே அடிக்கடி இங்கே வந்து பாடம் சொல்லிக் கொடுங்கள். உங்கள் சல்லாபமும் எனக்குக் கிடைக்கும். அது மட்டும் அன்று. இங்கே எவ்வளவோ புலவர்கள் வருகிறார்கள். ஒவ்வொரு நூலில் ஆழ்ந்த புலமையுள்ளவராகப் பலர் வருவர். அவர்களைக் கொண்டும் சில நூல்களை இவனுக்குக் கற்பிக்கச் செய்வேன்."

மருதபாண்டியருக்குக் குழந்தையிடத்தில் உண்டான அன்பு உரம் பெற்றது என்பதைப் புலவர் அறிந்தார். அரசரிடம் எவ்வளவு நேரம் வாதாட முடியும்? கடைசியில் புலவர் தம் மகன் அரண்மனையிலே வளர்ந்து வருவதற்கு இசைந்தார்.

அன்று முதல் சர்க்கரைப் புலவருடைய குமாரர் மருத பாண்டியருடைய வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்தார். அவருக்குச் சாந்துப் புலவர் என்பது இயற் பெயர். இருந்தாலும் யாவரும் அவரை அன்போடு 'குழந்தை' என்றே அழைக்கலாயினர். பிறகு, குழந்தைக் கவிராயர்

என்று வழங்கலாயினர். சிலர் 'பால கவீசுரர்' என்று பின்னும் மதிப்பாகக் கூறினர்.

மருதபாண்டியருடைய அவைக்களப் பெரும் புலவராக விளங்கினார் குழந்தைக் கவிராயர். அவர் குன்றக்குடியில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் மீது ஒரு கோவையைப் பாடி அரங்கேற்றினார். அப்போது மருதபாண்டியர் அவருக்குப் பல வகையான பரிசுகளை அளித்துப் புலவர் மருதன்குடி என்ற கிராமத்தையும் முற்றூட்டாக வழங்கினார்.

தம்மை வளர்த்துப் பாதுகாத்த மருதபாண்டியரைச் சாந்துப் புலவராகிய குழந்தைக் கவிராயர் அந்தக் கோவையில் பலபடியாகப் பாராட்டியிருக்கிறார்.

குட்டி நாகபந்தத்தால் தம் புலமையை இளமையில் காட்டிய குழந்தைக் கவிராயர் மருதபாண்டியருக்குத் தோழராகி வாழ்ந்தார். அவர் செய்த போரில் துணை நின்று வாளெடுத்துப் போர் செய்தாரென்றும் கூறுவர்.